இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100
1924 - 2023

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 139 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – மார்கழி 13 – வெள்ளிக்கிழமை 29 டிசம்பர் 2023 – சென்னை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 139 : Thiruvalluvar Year - 2054 - Margazhi 13 - Friday 29 December 2023 - Chennai 12 Pages ₹ 5.00



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (28.12.2023) சென்னை, பெரியார் திடலில் நடைபெற்ற “வைக்கம் போராட்டம்” நூற்றாண்டு சிறப்பு விழாவில் “பெரியாரும் வைக்கம் போராட்டமும்” என்ற நூலை கேரள மாநில முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்கள் வெளியிட்டார். இவ்விழாவில், திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், கழக பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. , அமைச்சர் கே.என். நேரு, அமைச்சர் மு.பெ.சாமிநாதன், உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் மருத்துவர் இரா.செல்வராஜ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (28.12.2023) சென்னை, பெரியார் திடலில் நடைபெற்ற “வைக்கம் போராட்டம்” நூற்றாண்டு சிறப்பு விழாவில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் ‘தமிழரசு’ அச்சகத்தின் சார்பில் தயாரிக்கப்பட்டுள்ள “வைக்கம் போராட்டம் (1924–2023) நூற்றாண்டு மலரினை” வெளியிட, கேரளா முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்கள் பெற்றுக்கொண்டார். இவ்விழாவில், திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன்,கழக பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., அமைச்சர் கே.என். நேரு, அமைச்சர் மு.பெ.சாமிநாதன் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், செய்தித் துறை செயலாளர் மருத்துவர் இரா.செல்வராஜ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### சமூகநீதி வரலாற்றில் திருப்புமுனையாக தந்தை பெரியார் நடத்திய

# “வைக்கம் போராட்டம்” நூற்றாண்டு சிறப்பு விழா - மலர் வெளியீடு !

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் – கேரள முதல்வர் பினராயி விஜயன் முன்னிலையில் நடைபெற்றது !

**சென்னை, டிச. 29 -**

**“வைக்கம் போராட்டம்” நூற்றாண்டு சிறப்பு விழா தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் கேரளா மாநில முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (28.12.2023) சென்னை, பெரியார் திடலில் நடைபெற்ற “வைக்கம் போராட்டம்” நூற்றாண்டு சிறப்பு விழாவில், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் ‘தமிழரசு’ அச்சகத்தின் சார்பில் தயாரிக்கப்பட்டுள்ள “வைக்கம் போராட்டம் (1924–2023) நூற்றாண்டு மலரினை வெளியிட, கேரளா மாநில முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்கள் பெற்றுக்கொண்டார்.

**வரலாற்றுச் சிறப்புமிக்க வைக்கம் போராட்டம்!**

கேரள மாநிலம், கோட்டயம் மாவட்டம், வைக்கத்திலுள்ள மகாதேவர் கோயிலைச் சுற்றி அமைந்துள்ள தெருக்களில் ஒடுக்கப்பட்டவர்கள் நடப்பதற்கு தடைவிதிக்கப்பட்டிருந்ததை நீக்கக் கோரி நடந்த வைக்கம் போராட்டத்தில் கேரளத் தலைவர்களின் அழைப்பின் பேரில் தந்தை பெரியார் அவர்கள் வைக்கம் சென்று, அந்தப் போராட்டத்திற்கு தலைமை ஏற்றார். பின்பு பல நாட்கள் அங்கு தங்கியிருந்து போராட்டத்தை ஒருங்கிணைத்து, அனைத்து மக்களிடமும் வைக்கம் போராட்டம் குறித்து தமது சீர்திருத்த, சமூக நீதிக் கருத்துக்கள் மூலம் பிரச்சாரம் செய்து, வைக்கம் போராட்டத்தை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றார். வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த வைக்கம் போராட்டம் நடைபெற்று நூறு ஆண்டுகள் ஆகின்றது.

“வைக்கம் போராட்டத்தின் நூற்றாண்டினையொட்டி தமிழ்நாடு அரசின் சார்பில் 2023ஆம் ஆண்டு மார்ச் 30ஆம் நாள் தொடங்கி ஓராண்டு காலம் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்படும் என்றும், போராட்டத்தின் வரலாற்றையும், வெற்றியையும் பொதுமக்கள் மற்றும் மாணவ, மாணவியர்களுடன் சேர்ந்து கொண்டாடும் வகையில், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 30.03.2023 அன்று விதி 110இன் கீழ் 11 அறிவிப்புகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

**தந்தை பெரியார் நடத்திய போராட்ட வரலாற்று நூல்!**

சமூகநீதி வரலாற்றில் திருப்புமுனையாக அமைந்த வைக்கம் போராட்டத்தினை தந்தை பெரியார் அவர்கள் முன்னின்று நடத்தி, ஒடுக்கப்பட்ட மக்களுக்காக எல்லைக் கடந்து போராடி வரலாற்றில் பல புரட்சிகளை நிகழ்த்தி காட்டி வெற்றி கண்ட அவரின் நினைவைப் போற்றவும், அன்னாரின் சமூகநீதிக் கருத்துக்களை பின்வரும் சந்ததியினர் தெரிந்துகொள்ளவும், வைக்கம் போராட்டத்தின் நூற்றாண்டு குறித்த சிறப்புக் கட்டுரைகளை பல்வேறு அறிஞர் பெருமக்களிடம் இருந்து பெற்று அதனைத் தொகுத்து “வைக்கம் போராட்டம் நூற்றாண்டு மலர்” என்ற சிறப்பு மலர் ஒன்றினை தமிழ்நாடு அரசின், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் ‘தமிழரசு’ சார்பில் தயாரித்து வெளியிடப்படும் என்ற ஒரு அறிவிப்பும் அதில் இடம்பெற்றிருந்தது.

அந்த அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தலைவராகவும், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசுச் செயலாளர் மருத்துவர் இரா.செல்வராஜ், துணைத் தலைவராகவும், இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் த.மோகன், உறுப்பினர் செயலராகவும்,

தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் முனைவர் ந.அருள், செய்தி மக்கள் தொடர்புத்துறை கூடுதல் இயக்குநர், தமிழரசு அச்சக இணை இயக்குநர் (வெளியீடுகள்) இரா.அண்ணா, தமிழரசு அச்சக உதவி இயக்குநர் திருமதி அ.மகேஸ்வரி, தமிழரசு அச்சக உதவி பணி மேலாளர் தி.சுயம்புலிங்கம் ஆகியோர் உறுப்பினர்களாகவும்,

தமிழ் இணையக் கல்விக் கழக இணை இயக்குநர் கோமகன் , மூத்த பத்திரிகையாளர் ப.திருமாவேலன், தமிழறிஞர் பழ.அதியமான் ஆகியோர் ஆலோசகர்களாகவும் கொண்ட குழு அமைக்கப்பட்டு, செய்தி மக்கள் தொடர்புத் துறையால் இந்நூற்றாண்டு மலர் தயார் செய்யப்பட்டுள்ளது.

தொடர்ச்சி 2ஆம் பக்கம்

### முத்தமிழறிஞர் கலைஞருக்கு விழா எடுத்து மகிழ்ந்தவர் - ‘கேப்டன்’ எனத் தமிழ் மக்களால் அன்புடன் அழைக்கப்படும்

# அன்பு நண்பர் விஜயகாந்த் மறைவு ; தமிழ்நாட்டுக்கும், திரையுலகுக்கும் பேரிழப்பு !

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உருக்கமிகு இரங்கல்!

**சென்னை, டிச. 29-**

**தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் அவர்களின் மறைவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில், “தமிழுணர்வும், தாராள மனமும் கொண்ட உன்னத மனிதர், ‘கேப்டன்’ எனத் தமிழ் மக்களால் அன்புடன் அழைக்கப்படும் எனது அன்பு நண்பர் விஜயகாந்த் அவர்களின் மறைவு தமிழ்நாட்டுக்கும், திரையுலகுக்கும் பேரிழப்பு” என உருக்கமுடன் குறிப்பிட்டுள்ளார்.**

தேசிய முற்போக்கு திராவிடக் கழகத் தலைவர் கேப்டன் விஜயகாந்த் அவர்களின் மறைவிற்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:–

அன்பிற்கினிய நண்பர் தேசிய முற்போக்கு திராவிடக் கழகத் தலைவர் கேப்டன் விஜயகாந்த் அவர்கள் மறைவெய்திய செய்தி பெரும் அதிர்ச்சியையும் வேதனையையும் ஏற்படுத்தியுள்ளது. நல்ல உள்ளத்திற்கு சொந்தக்காரரான நண்பர் விஜயகாந்த் அவர்கள் திரையுலகிலும் பொதுவாழ்விலும் தனது கடும் உழைப்பினால் வெற்றிகரமான முத்திரைகளைப் பதித்த சாதனையாளர். நடிகராக, நடிகர் சங்கத் தலைவராக, அரசியல் கட்சித் தலைவராக, சட்டமன்ற உறுப்பினராக, எதிர்க்கட்சித் தலைவராக அவர் ஏற்றுக்கொண்ட பணி எதுவாக இருந்தாலும் அதில் முழுமையாகத் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு தன்னைச் சார்ந்த அனைவருக்கும் உறுதுணையாக இருந்தவர். குடும்ப நண்பராக என்னிடம் பழகியவர். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மீது என்றென்றும் தனிப்பாசம் கொண்டவர்.

**தலைவர் கலைஞர் தலைமையில் குடும்ப நிகழ்வுகளை நடத்திய விஜயகாந்த்!**

தனது திருமணம் உள்ளிட்ட குடும்ப நிகழ்வுகளைத் தலைவர் கலைஞர் தலைமையில் நடத்திய தமிழ் உணர்வாளரான நண்பர் விஜயகாந்த், நடிகர் சங்கத்தலைவராக இருந்தபோது தலைவர் கலைஞர் அவர்களின் கலையுலகப் பொன்விழாவைப் பாராட்டி, திரையுலகின் சார்பில் மாபெரும் விழா எடுத்து, தங்கப் பேனாவை பரிசாக அளித்தவர். தலைவர் கலைஞர் அவர்கள் உடல்நலன் குன்றியிருந்தபோது, நேரில் வந்து உடல்நலன் விசாரித்து சென்றதுடன், தலைவர் கலைஞர் மறைவெய்தியபோது, வெளிநாட்டில் இருந்த நண்பர் விஜயகாந்த் கண்ணீர் மல்க காணொளி அனுப்பி தன் இரங்கலைத் தெரிவித்ததையும், வெளிநாட்டிலிருந்து திரும்பியதும் விமான நிலையத்திலிருந்து நள்ளிரவில் நேராகச் சென்னை கடற்கரையில் உள்ள தலைவர் கலைஞரின் ஓய்விடம் சென்று தன் வணக்கத்தைச் செலுத்தியதையும் எவரும் மறக்க முடியாது.



**கலைஞரின் கதை வசனத்தில் விஜயகாந்துடன் நானும் பங்கேற்றேன்!**

தமிழுணர்வும் தாராள மனமும் கொண்ட உன்னத மனிதரான நண்பர் விஜயகாந்த் அவர்களுடன் கலைத் துறையில் இணைந்து செயல்பட்ட காலங்கள் நெஞ்சில் நிழலாடுகின்றன. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வசனத்தில் விஜயகாந்த் கதாநாயகனாக நடித்த ‘மக்கள் ஆணையிட்டால்’ என்ற படத்தில், கலைஞர் எழுதிய பாடல்காட்சியில் நானும் பங்கேற்றிருந்தது நினைவில் மலர்கிறது. அவருடனான நட்பு எந்தக் காலத்திலும், எத்தகைய அரசியல் சூழலிலும் மாறவே யில்லை. நண்பர் விஜயகாந்த் உடல்நலன் குன்றியிருந்த நிலையில், இரண்டு முறை நேரில் சென்று சந்தித்து, அவர் விரைந்து நலம் பெற விரும்பினேன். இயற்கை இரக்கமின்றி என் நண்பரின் வாழ்வை எடுத்துக் கொண்டிருக்கிறது.

கேப்டன் எனத் தமிழ் மக்களால் அன்புடன் அழைக்கப்படும் அன்பு நண்பர் விஜயகாந்த் அவர்களின் மறைவு தமிழ்நாட்டிற்கும் திரையுலகிற்கும் பேரிழப்பாகும். இந்த மிகத் துயரமான சூழலில், என்னை நானே தேற்றிக் கொண்டு, கேப்டன் விஜயகாந்த்தை இழந்து தவிக்கும் சகோதரி பிரேமலதா விஜயகாந்த் உள்ளிட்ட அவரது குடும்பத்தினருக்கும், தேசிய முற்போக்கு திராவிடக் கழகத் தொண்டர்களுக்கும், திரையுலகத்தினருக்கும், ரசிகர்களுக்கும் என் ஆறுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**விஜயகாந்தின் இறுதிப் பயணத்திற்கு அரசு முழு மரியாதை!**

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். விஜயகாந்த் அவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் அவரது இறுதிப் பயணத்திற்கு முழு அரசு மரியாதை வழங்கப்படும்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.



இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 29-12-2023

# ஊழலைப் பற்றி பேசலாமா? - 2

பழனிசாமி மீதான டெண்டர் வழக்கை விசாரிப்பது தொடர்பாக புதிய வழக்கு ஒன்று உச்சநீதிமன்றத்துக்கு மீண்டும் வந்தது. அப்போது தமிழ்நாடு அரசு சார்பாக மூத்த வழக்கறிஞர் துஷ்யந் தவே ஆஜராகி வாதிட்டார். **“டெண்டர் முறைகேடு தொடர்பாக முந்தைய அ.தி.மு.க. அரசு வழக்கை திரும்பப் பெற முடிவு செய்தது. அதற்கு உயர் நீதிமன்றம் அனுமதிக்கவில்லை. முந்தைய அ.தி.மு.க. ஆட்சியின்போது வழக்கு முறையாக விசாரிக்கப்படவில்லை. எனவே தற்போதைய அரசு வழக்கை மீண்டும் முறைப்படி விசாரிக்க திட்டமிட்டுள்ளது. முன்பு புகார் அளித்த புகார் தாரர்களின் புகார் மீது விசாரணை நடத்த அனுமதிக்கப்பட வேண்டும். அதற்குச் சட்டம் தடையாக இல்லை” என்று தெரிவித்தார்.**

புதிய அரசு ஆட்சி அமைந்தால் முந்தைய ஊழல் புகார்கள் மீது விசாரணை நடத்த உரிமை உண்டு என்று உச்சநீதிமன்றம் பல வழக்குகளில் தீர்ப்பு வழங்கியுள்ளது என்றும் தமிழ்நாடு அரசின் வழக்கறிஞர் சுட்டிக்காட்டினார். **“முன்பு லஞ்ச ஒழிப்புத்துறை விசாரணை மற்றும் நீதிமன்றத்தில் வழக்கு நடந்த போது எடப்பாடி பழனிச்சாமி முதலமைச்சராக இருந்தார். அப்போது முறையாக வழக்கு விசாரிக்கப்படவில்லை. அவருக்கு கீழ் இருந்த அதிகாரிகள் அவர் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே உச்சநீதிமன்றம் இந்த விவகாரத்தில் எடப்பாடி பழனிசாமி தரப்புக்கு நோட்டீஸ் அனுப்பி வழக்கை விசாரிக்க வேண்டும்”** என்று வாதிட்டார்.

அப்போது நீதிபதிகள், “சட்டம் என்ன அனுமதிக்கிறதோ அதன்படி அரசு செல்லலாம். நாங்கள் எதற்கும் தடை விதிக்கவில்லை. சட்டத்தின் நான்கு மூலைகளுக்குள் நீங்கள் எதை செய்ய விரும்புகிறீர்களோ அதை செய்யலாம” என்று தெரிவித்தனர். எனவே பழனிசாமி மீதான டெண்டர் முறைகேடு வழக்கு எப்போது வேண்டுமானாலும் வேகம் எடுக்கலாம்.

அ.தி.மு.க. ஆட்சியில் 11 அரசு மருத்துவக் கல்லூரிகளை கட்டியதில் முறைகேடு நடைபெற்றுள்ளதாக முன்னாள் முதல்வர் பழனிசாமி உள்ளிட்டோருக்கு எதிரான புகாரில் விரிவான விசாரணை நடைபெற்று வருவதாக சென்னை உயர் நீதிமன்றத்தில் லஞ்ச ஒழிப்புத்துறை தெரிவித்துள்ளது. திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்த என்.ராஜசேகரன் என்பவர், சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த மனுவில், 11 மருத்துவக் கல்லூரிகளுடன் கூடிய மருத்துவமனைகளை கட்டியதில் மிகப்பெரிய முறைகேடு நடந்துள்ளதாக வழக்கு போட்டிருந்தார்.

அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் அமைச்சர்களாக இருந்தவர்கள் செய்த ஊழல் முறைகேடுகளை விசாரணை நடத்தி அம்பலப்படுத்தி வருகிறது தமிழ்நாடு லஞ்ச ஒழிப்புத் துறை. முன்னாள் அமைச்சர் கே.பி.அன்பழகன் வீட்டில் நடத்தப்பட்ட சோதனையில் பணம் ரூ.2,87,98,650/-, தங்கநகைகள் 6.637 கிலோகிராம், சுமார் 13.85 கிலோகிராம் வெள்ளி மற்றும் ஆவணங்கள் கண்டுபிடிக்கப்பட்டு, அதில் கணக்கில் வராத பணம் ரூ.2,65,31,650/-, வங்கி பெட்டக சாவி மற்றும் வழக்கிற்குதொடர்புடைய ஆவணங்கள் ஆகியன கைப்பற்றப்பட்டன.

போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்த எம்.ஆர்.விஜயபாஸ்கர் வீட்டில் நடத்தப்பட்ட சோதனையில் கணக்கில் வராத ரூ.25 லட்சத்து 56 ஆயிரம் கைப்பற்றப்பட்டுள்ளது. உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்த வேலுமணி வீட்டில் நடத்தப்பட்ட சோதனையில் ரூ.13 லட்சமும், ரூ.2 கோடிக்கான வைப்புத் தொகை, நிலப்பதிவு ஆவணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

வணிகவரித்துறை அமைச்சராக இருந்த வீரமணி வீட்டில் ரூ.34 லட்சம் பணம், 5 கிலோ தங்கம் கைப்பற்றப்பட்டுள்ளது. ரூ.1,80,000 மதிப்பிலான அந்நியச் செலாவணி டாலர் கைப்பற்றப்பட்டுள்ளது. 623 சவரன் தங்க நகைகள், 47 கிராம் வைர நகைகள், 7.2 கிலோ வெள்ளிப் பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளது. முன்னர் இருந்ததை விட 646 சதவிகிதம் இவரது சொத்து அதிகமானதாக போலீஸார் கணக்கிட்டுள்ளனர்.

மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சராக இருந்த டாக்டர் விஜயபாஸ்கர், வருமானத்துக்கு அதிகமாக ரூ.27 கோடி சம்பாதித்துள்ளதாக போலீஸார் கணக்கிட்டுள்ளார்கள். ரூ.23 லட்சம் பணமும், 4.87 கிலோ தங்கமும், 136 கனரக வாகனங்களின் ஆவணமும் அவரது வீட்டில் இருந்து கைப்பற்றப்பட்டுள்ளது. மின்சார அமைச்சராக இருந்த தங்கமணி ரூ.4 கோடி மதிப்பிலான தொகையை வருமானத்துக்கு அதிகமாகச் சேர்த்ததாக ரெய்டு நடத்தப்பட்டு கணக்கில் வராத பணம், சான்று பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. மேற்கொண்டு விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

முன்னாள் அ.தி.மு.க. அமைச்சர்களான டாக்டர் சி. விஜயபாஸ்கர் மற்றும் பி.வி.ரமணா ஆகியோர் குட்கா / மாவா விநியோகிப்பாளர்களிடமிருந்து சட்ட விரோதமாகப் பணம் பெற்ற குற்றச்சாட்டு தொடர்பாக உயர்நீதிமன்ற உத்தரவுப்படி கிரிமினல் வழக்குப் பதிவு செய்யப்பட்டு மத்திய புலனாய்வு அமைப்பு (சி.பி.ஐ.) வழக்குப் பதிவு செய்து விசாரித்து, இவர்கள் மீது நீதிமன்ற விசாரணை நடைபெற்று வருகிறது. ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநரகம், வணிக வரி மற்றும் பதிவுத்துறை அமைச்சராக அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் இருந்த கே.சி. வீரமணி மற்றும் போக்குவரத்துத்துறை அமைச்சராக இருந்த எம்.ஆர். விஜயபாஸ்கர் ஆகியோர் மீது நீதிமன்ற விசாரணையை தொடங்கிட இசைவு ஆணையை ஆளுநரிடம் கோரியது. அதற்கான அனுமதியை கொடுத்து விட்டார்.

அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சராக இருந்த டாக்டர் விஜயபாஸ்கர் மீது வருமானத்துக்கு அதிகமாக 35.79 கோடி ரூபாய் சொத்து சேர்த்ததாக புதுக்கோட்டை நீதிமன்றத்தில் லஞ்ச ஒழிப்பு காவல் துறையினர் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்கள். (2023 மே 22)

அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் உயர் கல்வித் துறை அமைச்சராக இருந்த கே.பி.அன்பழகன் வருமானத்துக்கு அதிகமாக 45.20 கோடிரூபாய் சொத்து சேர்த்ததாக தர்மபுரி குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (2023 மே 22)

அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் உணவுத் துறை அமைச்சராக இருந்த காமராஜ் மீது வருமானத்துக்கு அதிகமாக ரூ.58 .44 கோடி சொத்து சேர்த்ததாக திருவாரூர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (2023 ஜூலை 11)

**இது தான் பழனிசாமி அண்ட் கோ - வின் ஊழல் வரலாறு ஆகும். இதை எல்லாம் மக்கள் மறந்திருப்பார்கள் என்று நினைத்து வாய்க்கு வந்ததைப் பேசிக் கொண்டிருக்கிறார் பழனிசாமி.**

●●

டிச. 31, ஜனவரி 1ஆம் தேதிகளில்

## தென் மாவட்டங்களில் கனமழை!

### வானிலை ஆய்வு மையம் தகவல்!

சென்னை, டிச. 29 –

இதுகுறித்து சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், கிழக்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக, தமிழ்நாட்டின் கடலோர மாவட்டங்களில் ஒருசில இடங்களிலும், உள் மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இன்றும், நாளையும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாளை தென்தமிழகத்தின் ஒரு சில இடங்களிலும், வடதமிழகத்தின் ஓரிரு இடங்களிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று கூறப்பட்டுள்ளது. கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, ராமநாதபுரம் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் டிசம்பர் 31ஆம் தேதியும், ஜனவரி 1ஆம் தேதியும் கனமழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

குமரிக்கடல் மற்றும் அதனை ஒட்டிய மன்னார் வளைகுடா, மாலத்தீவு பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 40 முதல் 45 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 55 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக் கூடும் என்பதால் இப்பகுதிகளில் மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்ல வேண்டாம் என அறிக்கையில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.



சென்னை, பெரியார் திடலில் நேற்று (28.12.2023) நடைபெற்ற “வைக்கம் போராட்டம்” நூற்றாண்டு சிறப்பு விழாவின்போது, தந்தை பெரியார் அவர்களின் நினைவிடத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களும், கேரள மாநில முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்களும் மலர்வளையம் வைத்து, மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள். உடன் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், அமைச்சர் பெருமக்கள், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளனர்.

# “வைக்கம் போராட்டம்” நூற்றாண்டு சிறப்பு விழா...!

முதல் பக்கத் தொடர்ச்சி...

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, இக்குழு ஆலோசனைகளின் பேரில் தயாரிக்கப் பட்டுள்ள “வைக்கம் போராட்டம் நூற்றாண்டு மலர்” என்ற சிறப்பு மலரினை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட, கேரளா முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

**தமிழ் கட்டுரைகள்**

இந்நூற்றாண்டு மலரில், பழ.அதியமான் அவர்கள் எழுதிய ‘வைக்கம் போராட்ட கால நிரல்’, ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் எழுதிய ‘கடந்த நூற்றாண்டில் இந்தியாவில் வெற்றியைத் தழுவிய முதல் மனித உரிமைப் பேராட்டம்’, வே.ஆனைமுத்து அவர்கள் எழுதிய ‘கேரளத்தில் ஏழு நாட்கள்’, வாலாசா வல்லவன் அவர்கள் எழுதிய ‘அன்று இருந்த சூழ்நிலைகள்’, அ. கா.பெருமாள் அவர்கள் எழுதிய ‘பெரியாரும் சுசீந்திரம் கோவில் நுழைவுப் போராட்டமும்’, பெருமாள் முருகன் அவர்கள் எழுதிய ‘வைக்கம் போராட்டம்வரலாற்றுச் சாதனை’, கோ.ரகுபதி அவர்கள் எழுதிய ‘சமத்துவத்துக்கான விவாதங்கள்’, நிர்மால்யா அவர்கள் எழுதிய ‘டி.கே.மாதவனுடன் ஒரு தலித் போராட்ட நாயகன்’, ப.திருமா வேலன் அவர்கள் எழுதிய ‘வைக்கம் வீரர் மட்டுமல்ல, கேரள வீரர்’, கி.தளபதிராஜ் அவர்கள் எழுதிய ‘விடை கொடுக்க மறுக்கும் வைக்கம் நினைவுகள்’, திருமதி ஐஸ்வர்யா அவர்கள் எழுதிய ‘வைக்கத்தில் ஈரோட்டுப் பெண்கள்’ போன்ற தமிழ் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

**மலையாள கட்டுரைகள்**

முனைவர் டி.டி.ஸ்ரீகுமார் அவர்கள் எழுதிய ‘வைக்கம் சத்தியாகிரகத்தின் நூறு வருடங்கள்’, திரு.ரவி வர்மா தம்புரான் அவர்கள் எழுதிய ‘கேரள மறுமலர்ச்சியில் தமிழ் மரபின் வேர்கள்வைக்கம் சத்தியாகிரகம் பின்னணியில் ஒரு பார்வை’, முனைவர் சுரேஷ் மாதவ் அவர்கள் எழுதிய ‘சிற்றேடத்து சங்குப் பிள்ளைவைக்கம் சத்தியாகிரகத்தின் முதல் ரத்த சாட்சி’, திரு.கே.கே. கொச்சு அவர்கள் எழுதிய ‘வைக்கம் சத்தியாகிரகம்சாதி எதிர்ப்பும் பெரியாரும்’, முனைவர் ஒ.கே.சந்தோஷ் அவர்கள் எழுதிய ‘வைக்கம் சத்தியாகிரகம்வரலாறும் சமகாலமும்’, முனைவர் எஸ். ஷாஜி அவர்கள் எழுதிய ‘சாதியமைப்பும் வைக்கம் சத்தியாகிராகமும்’ போன்ற மலையாள மொழி பெயர்க்கப்பட்ட கட்டுரைகள் மற்றும் மலையாள கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன.

**ஆங்கிலக் கட்டுரைகள்**

Thiru. Robin Jeffrey அவர்கள் எழுதிய ‘Temple entry Movement in Travancore, 18601940’, V.Balambal அவர்கள் எழுதிய ‘E.V.R and Vaikom Satyagraha’, Dr.T.K.Ravindran அவர்கள் எழுதிய ‘Eight Furlongs of Freedom’, Mary Elizabeth King அவர்கள் எழுதிய ‘Gandhian Nonviolent Struggle and Untouchability in South IndiaThe 1924 1925 Vaikom Satya graha and Mechanisms of Change’,

Thiru. Sunny M.Kapikkad அவர்கள் எழுதிய ‘Vaikom struggleHistorical Significance of Thanthai Periyar’, Thiru. Pazha Athiyaman அவர்கள் எழுதிய ‘Gandhi at Vaikom’ மற்றும் ‘Periyar the Hero of Vaikom’, Thiru. K.A.Shaji அவர்கள் எழுதிய ‘VaikomSatyagrahaThanthai Periyars role and his many differences with Gandhi’ போன்ற ஆங்கில கட்டுரைகள் இந்நூற்றாண்டு மலரில் இடம் பெற்றுள்ளன.

**“வைக்கம் போராட்டத்தின் நூற்றாண்டினை யொட்டி தமிழ்நாடு அரசின் சார்பில் 2023ஆம் ஆண்டு மார்ச் 30ஆம் நாள் தொடங்கி ஓராண்டு காலம் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்படும்” என்றும், போராட்டத்தின் வரலாற்றையும், வெற்றியையும் பொதுமக்கள் மற்றும் மாணவ, மாணவியர்களுடன் சேர்ந்து கொண்டாடும் வகையில், தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவையில் 30.03.2023 அன்று விதி 110-இன் கீழ் 11 அறிவிப்புகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.**

இவ்விழாவில், “பெரியாரும் வைக்கம் போராட்டமும்” என்ற நூலை கேரளா மாநில முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்கள் வெளியிட்டார்.

**தந்தை பெரியார் நினைவிடத்தில் முதல்வர்கள் அஞ்சலி!**

முன்னதாக, தந்தை பெரியார் அவர்களின் நினைவிடத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களும், கேரளா மாநில முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்களும் மலர்வளையம் வைத்து, மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள்.

இவ்விழாவில், திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிர மணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர் பாபு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர். பாலு, சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.ஆர். ராஜா, மருத்துவர் நா.எழிலன், இ. பரந்தாமன், இ. கருணாநிதி, துணை மேயர் மு. மகேஷ் குமார், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலைவர் பூச்சி எஸ். முருகன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் மருத்துவர் இரா. செல்வராஜ், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி இரா. கஜலட்சுமி, செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் த.மோகன், திராவிடர் கழக துணைத் தலைவர் கவிஞர் கலி. பூங்குன்றன் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சென்னையில் நேற்று (28.12.2023) நடைபெற்ற வைக்கம் போராட்டம் நூற்றாண்டு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, கேரளாவிற்கு திரும்பிய கேரள மாநில முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்களை, சென்னை விமான நிலையத்தில், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு வழியனுப்பி வைத்தார்.

## 100 ஆண்டுகள் கடந்தும் சமூக நீதி வரலாற்றில் ஒலித்துக் கொண்டிருக்கும் போராட்டக் களம் “வைக்கம் போராட்டம்” !

# தந்தை பெரியாரின் சுயமரியாதைச் சுற்றுப்பயணத்தை நாம் அனைவரும் தொடர்வோம்!

## “வைக்கம் போராட்டம்” நூற்றாண்டு சிறப்பு விழாவில் ஆற்றவிருந்த உரையில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் சூளுரை !

சென்னை, டிச. 29 -

**“100ஆண்டுகள் கடந்தும் சமூக நீதி வரலாற்றில் ஒலித்துக் கொண்டிருக்கும் “வைக்கம் போராட்டம்” தான், சாதாரண ராமசாமியாக இருந்தவர், தந்தை பெரியாராக வளரக் காரணமான போராட்டக் களம்!” என்றும் “தந்தை பெரியாரின் சுயமரியாதைச் சுற்றுப்பயணத்தை நாம் அனைவரும் தொடர்வோம்!” என்றும், சென்னையில் நேற்று நடக்கவிருந்து, தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் மறைவினால் ரத்து செய்யப்பட்ட “வைக்கம் போராட்டம் நூற்றாண்டு சிறப்பு விழா”வில் ஆற்றவிருந்த உரையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சூளுரைத்தார்.**

சென்னை, நந்தம்பாக்கம், வர்த்தக மையத்தில் நேற்று (28.12.2023) பிரம்மாண்டமாக நடைபெறவிருந்த “வைக்கம் போராட்டம்” நூற்றாண்டு சிறப்பு விழா, எதிர்க்கட்சி முன்னாள் தலைவர் விஜயகாந்த் அவர்களின் மறைவையொட்டி ரத்து செய்யப்பட்டது.

இவ்விழாவிற்காக நேற்று வருகை தந்திருந்த கேரளா மாநில முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்கள் மற்றும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை, பெரியார் திடலில் உள்ள தந்தை பெரியார் அவர்கள் நினைவிடத்தில் மலரஞ்சலி செலுத்தி, மரியாதை செலுத்தினர். அதுபோது வைக்கம் போராட்டத்தின் “வைக்கம் போராட்டம் (1924-2023) நூற்றாண்டு மலர்” “பெரியாரும் வைக்கம் போராட்டமும்” ஆகிய நூல்களை வெளியிட்டனர். இந்நிகழ்வில் திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் மற்றும் அமைச்சர் பெருமக்கள், மேயர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் உடனிருந்தனர்.

சென்னை, நந்தம்பாக்கம், வர்த்தக மையத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றவிருந்த உரை வருமாறு:-

அனைவர்க்கும் வணக்கம். எனது உரையைத் தொடங்குவதற்கு முன்னால், முக்கியமான ஒரு செய்தியை இங்கு நான் பதிவு செய்ய விரும்புகிறேன். அண்மையில், தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களில் இதுவரை இல்லாத அளவுக்குப் பெய்த கனமழையால் அங்கே இருக்கக் கூடிய மக்கள் பெரும் பாதிப்புக்கு ஆளாகியிருக்கிறார்கள். இந்த நிலையில், சகோதரப் பாச உணர்வோடு, ‘அன்போடு கேரளம்’ என்கிற பெயரில், தமிழ்நாட்டுக்கு நிவாரண உதவிகளையும் அதிகாரிகளையும் அனுப்பி வைத்த கேரள மக்களுக்கும், கேரள முதலமைச்சர் சகாவு பினராயி விஜயன் அவர்களுக்கும் தமிழ்நாட்டு மக்களின் சார்பாக, தமிழ்நாடு முதலமைச்சராக என் நெஞ்சார்ந்த நன்றியையும் அன்பையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**“வைக்கத்து வீரர் என்று யாரைச் சொன்னோம்?**
**‘வை கத்தி! தீண்டாமைக் கழுத்தில்’ என்று**
**வரிப்புலியாய்க் களம் சென்று வாகைசூடி**
**வையத்து மக்கள் தந்த பட்டமன்றோ வைக்கம் வீரர்!”**

என்று தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் தனது கனல் தெறிக்கும் வரிகளால் எழுதினார்.

### தந்தை பெரியார் நடத்திய சுயமரியாதைப் போராட்டங்கள் பற்பல!

“ஈ.வெ.இராமசாமி என்கிற நான் திராவிட சமுதாயத்தைத் திருத்தி, உலகில் உள்ள மற்ற சமுதாயத்தினரைப் போல மானமும், அறிவும் உள்ள சமுதாயமாக ஆக்கும் தொண்டை மேற்போட்டுக் கொண்டு அதே பணியாய் இருப்பவன். இதைச் செய்ய எனக்கு யோக்கியதை இருக்கிறதோ இல்லையோ, இந்த நாட்டில் அந்தப் பணியைச் செய்ய யாரும் வராததினால், நான் அதை மேற்போட்டுக் கொண்டு தொண்டாற்றி வருகிறேன்” என்று அறிவித்துக் கொண்டு 95 வயது வரை, இந்த நாட்டுக்காகவும், இந்த நாட்டு மக்களின் சமூகநீதியை நிலைநிறுத்தவும் தந்தை பெரியார் நடத்திய சுயமரியாதைப் போராட்டங்கள் பற்பல. அவற்றில் மிக முக்கியமானது வைக்கம் போராட்டம் ஆகும்.

அத்தகைய வைக்கம் வீரர் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரின் வெற்றிப் போராட்டங்களில் ஒன்றான வைக்கம் நூற்றாண்டு விழாவில் கலந்து கொள்வதில் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன். இவ்விழாவில் கலந்து கொள்ள வருகை தந்துள்ள கேரள மாநில முதலமைச்சர் மரியாதைக்குரிய காம்ரேட் பினராயி விஜயன் அவர்களை வருக வருக என்று வரவேற்கிறேன்.

### இணைந்து போராடினால் எதிலும் வெற்றி பெறலாம்!

வைக்கம் போராட்டம் என்பது கேரள சீர்திருத்தவாதிகளும் - தமிழ்நாட்டுச் சீர்திருத்தவாதிகளும் இணைந்து நடத்திய போராட்டம் என்பதால் இரண்டு மாநில அரசும் சேர்ந்து நூற்றாண்டு விழாவை நடத்துவதுதான் பொருத்தமாக இருக்கும். அந்த வகையில் நூற்றாண்டு தொடக்க விழாவைக் கடந்த ஏப்ரல் மாதம் 1ஆம் தேதியன்று கேரளாவில் மாண்புமிகு பினராயி விஜயன் அவர்கள் நடத்தினார்கள். அதில் நான் கலந்து கொண்டேன். இன்றைய தினம் தமிழ்நாடு அரசு நடத்துகிறது. கேரள முதலமைச்சர்



சென்னை, பெரியார் திடலில், நேற்று (28.12.2023) நடைபெற்ற “வைக்கம் போராட்டம்” நூற்றாண்டு சிறப்பு விழாவில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், கேரள மாநில முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்களுக்கு தந்தை பெரியார் அவர்களின் சிலையினை நினைவுப் பரிசாக வழங்கினார். இந்நிகழ்வின்போது, திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

அவர்கள் வருகை தந்துள்ளார்கள். இணைந்து போராடினால் எதிலும் வெற்றி பெறலாம் என்பதற்கு உதாரணமாகவும் வைக்கம் போராட்டம் திகழ்கிறது.

கேரளத்தில் சமூகப் புரட்சி இயக்கம் என்பது நாராயணகுரு, டாக்டர் பல்ப்பு பத்மநாபன், குமாரன் ஆசான், அய்யன்காளி, டி.கே.மாதவன் ஆகிய தலைவர்களால் வரிசையாக நடத்தப்பட்டது ஆகும்.

தமிழ்நாட்டு புரட்சி இயக்கமானது இராமலிங்க வள்ளலார், வைகுண்டசாமி, அத்திப்பாக்கம் வெங்கடாசலனார், பண்டித அயோத்திதாசர், டி.எம்.நாயர், தந்தை பெரியார் ஆகிய தலைவர்களால் வரிசையாக நடத்தப்பட்டது ஆகும்.

இதில் கேரளத்தைச் சேர்ந்த டி.கே.மாதவன் அவர்களும் தமிழ்நாட்டைச் சேர்ந்த தந்தை பெரியாரும் இணைந்து நடத்திய வெற்றிப் போராட்டம்தான் வைக்கம் போராட்டம் ஆகும். 1924-25ஆம் ஆண்டுகளில் நிகழ்ந்த வைக்கம் போராட்டம் என்பது, இந்தியாவின் சமூக சீர்திருத்த வரலாற்றில் முக்கிய இடம் பெற்றது.

அன்றைய திருவிதாங்கூர் சமஸ்தானத்தின், வைக்கம் மகாதேவர் கோயிலைச் சுற்றிலும் அமைந்துள்ள தெருக்களில் ஒடுக்கப்பட்டவர்கள் நடப்பதற்கு இருந்த தடைகளை நீக்கக் கோரி நடந்தது. 1924ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30ஆம் நாள், கேரளத் தலைவர் டி.கே.மாதவன் அவர்களால் தொடங்கப்பட்டது அப்போராட்டம்.

### போராட்டத்திற்கு தலைமையேற்ற தந்தை பெரியார்!

அந்தப் போராட்டம் தொடங்கிய சில நாள்களிலேயே, அதே பகுதியைச் சேர்ந்த முக்கியமான காங்கிரஸ் தலைவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டனர். தலைவர்கள் இன்றிப் போராட்டம் தவித்தது. இச்சூழலில் கேரளத் தலைவர்களின் அழைப்பின் பேரில், தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவராக அப்போது இருந்த தந்தை பெரியார் அவர்கள் வைக்கம் சென்று, அந்தப் போராட்டத்திற்குத் தலைமை ஏற்றார். பலநாட்கள் அங்கு தங்கியிருந்து போராட்டத்தை ஒருங்கிணைத்தார். வெகுமக்களிடம் அந்தப் போராட்டம் குறித்து பரப்புரை செய்து, போராட்டத்தை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றார்.

போராட்டக்காலத்தில் இரண்டு முறை பெரியார் கைது செய்யப்பட்டார். முதல்முறை அருவிக்குத்தி என்ற ஊரின் காவல் நிலையச் சிறையில் ஒரு மாதகாலம் சிறை தண்டனை அனுபவித்தார். இரண்டாம் முறை வழங்கப்பட்ட நான்கு மாதக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டு ஒருமாத காலம் திருவனந்தபுரம் சிறையில் கழித்தார்.

### 74 நாட்கள் சிறையில் இருந்தவர் தந்தை பெரியார்!

வைக்கம் போராட்டம் நடந்தது மொத்தம் 603 நாட்கள். இதில் 141 நாட்கள் தந்தை பெரியார் அவர்கள் பங்கெடுத்தார்கள். அதில் 74 நாட்கள் சிறையில் இருந்தார்கள். வைக்கம் போராட்டத்தில் கலந்து கொள்வதற்காகத் தமிழ்நாட்டில் இருந்து 7 முறை கேரளத்துக்குச் சென்றுள்ளார் தந்தை பெரியார்.

தந்தை பெரியார் அவர்களுக்கு என்ன சிறப்பு என்றால் - இந்தப் போராட்டத்தில் கைதான மற்ற தலைவர்கள் அனைவரும் அரசியல் கைதிகளாக நடத்தப்பட்டார்கள். ஆனால் பெரியாரை மிகமோசமாக நடத்தினார்கள். கையிலும் காலிலும் விலங்கு போட்டு கழுத்தில் மரப்பலகையை மாட்டி அடைத்து வைத்திருந்தார்கள். இதே போராட்டத்தில் கைதாகிச் சிறையில் இருந்த தலைவர்களில் ஒருவரான கே.பி.கேசவ மேனன் அவர்கள் ‘பந்தனத்தில் நின்னு’ என்ற தலைப்பில் மலையாளத்தில் ஒரு புத்தகம் எழுதி இருக்கிறார்.

> ஒரு சீர்திருத்த இயக்கம் அரசியல் பரிணாமம் பெற்று ஆட்சியைப் பிடித்து பேசிய கொள்கைகளை நிறைவேற்றும் சட்டங்களை இயற்றும் தகுதியை அடைந்தது இந்திய அரசியல் வரலாற்றில் திராவிட இயக்கத்துக்குக் கிடைத்த பெருமை ஆகும். இதனைத் தான் பேரறிஞர் அண்ணா அவர்கள் ”ஒருவர் புறப்பட்டு ஓயாது உழைத்து, உள்ளத்தைத் திறந்து பேசி, எதற்கும் அஞ்சாது பணியாற்றி ஒரு பெரிய சமூகத்தை விழிப்பும், எழுச்சியும் கொள்ளச் செய்வதில் வெற்றி பெற்ற வரலாறு இங்கன்றி வேறெங்கும் இருந்ததில்லை. என்று குறிப்பிட்டார்கள். பெரியாருடைய பெரும் பணியை, நான் ஒரு தனி மனிதனின் வரலாறு என்றல்ல; ஒரு சகாப்தம் ஒரு காலகட்டம், ஒரு திருப்பம் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள்.

### சிறையில் மிக மோசமாக நடத்தப்பட்ட தந்தை பெரியார்!

அதன் சில வரிகளை மட்டும் நான் படிக்கிறேன்... **“தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவரும் ஈரோடு முனிசிபல் கவுன்சிலின் சேர்மனாக இருந்தவரும் ஒரு பெரும் பணக்காரரும் உத்தம தேசாபிமானியுமான ஈ.வெ.ராமசாமி அவர்களுக்குக் காலில் சங்கிலி மாட்டப்பட்டு இருந்தது. கைதிகளது தொப்பி மாட்டப்பட்டு இருந்தது. முழங்கால் வரையில் வேட்டி அணிந்திருந்தார். கழுத்தில் மரக் கட்டையை மாட்டி கொள்ளைக்காரர்கள் மற்றும் கொலைகாரர்களுடன் வைக்கப்பட்டுள்ளார். கேரளத்தின் தீண்டாமைச் சாதிக்காரர்களது சுதந்திரத்துக்காகத் தமிழ்நாட்டின் மேல்குலத்தைச் சேர்ந்த இந்து ஒருவர் இப்படிப்பட்ட தியாகத்தைச் செய்தது எங்களுக்கு புத்துயிர் தந்தது” என்று கே.பி.கேசவ மேனன் எழுதி இருக்கிறார்கள். சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டதும், உடனே ஈரோடு திரும்பாமல் வைக்கம் சென்று மீண்டும் போராடினார் பெரியார்.**

போராட்டக்காரர்களுக்கும் மன்னருக்குமான பேச்சுவார்த்தையை நடத்திய அண்ணல் காந்தியடிகள் அவர்கள், தந்தை பெரியாரிடம் கலந்துரையாடல் நடத்திய பிறகே திருவிதாங்கூர் ராணியைச் சென்று சந்தித்தார்.

‘சாலைக்குள் அனுமதிக்கிறோம், கோவிலுக்குள் அனுமதிக்க முடியாது’ என்று ராணி அவர்கள் அப்போது சொன்னார்கள். இதனைப் பெரியார் அவர்களிடம் சொல்லி, ‘கோவில் நுழைவை சிறிதுகாலத்துக்கு நீங்கள் ஒத்தி வைக்க வேண்டும்’ என்று காந்தி அவர்கள் அனுமதி பெற்றார் என்பதும் வரலாறு ஆகும். “திருவிதாங்கூர் கவர்ன்மெண்டார் குரூர் நீலகண்டன் நம்பூதிரியைச் சிறையினின்று விடுவித்து விட்டார்கள் என்பதையும் ஈ.வி.ராமசாமி நாயக்கருக்கு விரோதமாகப் பிறப்பித்த தடை உத்தரவை வாபஸ் வாங்கிக் கொண்டுவிட்டார்கள் என்பதையும் கேட்க வாசகர்கள் சந்தோஷமடைவார்கள்” என்றும் ‘யங் இந்தியா’ பத்திரிக்கையில் காந்தி அவர்களே எழுதினார்கள் என்றால் பெரியாரின் பங்களிப்பு எவ்வளவு இருந்துள்ளது என்பதை அனைவரும் அறிந்து கொள்ள முடியும்.

“Mr. Ramasami Naicker arrived on that day from Erode to take charge of the campaign” என்றும்; “One Ramaswami Naicker of Erode is now leading the movement” என்றும் போலீஸ் ஆவணங்களில் பெரியார் பெயர் இருக்கிறது. பெரியார் தலைமை தாங்கினார் என்பதை காவல் துறை ஆவணங்களே சொல்கின்றன.

### தந்தை பெரியார் தலைமையில் வைக்கத்தில் வெற்றி விழா!

ஒன்றரை ஆண்டுகளுக்கும் மேல் நடைபெற்ற வைக்கம் போராட்டம், 1925 நவம்பர் 23ஆம் நாள் முடிவுக்கு வந்தது. 1925 நவம்பர் 29ஆம் நாள் பெரியார் தலைமையில் வைக்கத்தில் வெற்றி விழாவும் நடைபெற்றது. இதில் பெரியார் வீட்டுப் பெண்கள் அளித்த பங்களிப்பு மிக முக்கியமானது ஆகும். தந்தை பெரியார் அவர்கள் வைக்கம் சென்றபோது அவருடன் அவரது மனைவி நாகம்மையாரும், பெரியாரின் சகோதரி கண்ணம்மாவும், பெரியாரின் உறவினர்களான லட்சுமியம்மாள், மாரக்காயம்மாளும் சென்றிருக்கிறார்கள். இவர்கள்தான் கேரளப் பெண்களையும் போராட்டத்துக்குள் கொண்டு வந்தார்கள். போராட்டத்துக்கான நிதி திரட்டுவதற்காக ராட்டை நூற்றார்கள் இவர்கள்.

### போராட்டத்தைக் கையில் எடுத்த நாகம்மையார்!

வைக்கம் போராட்டத்தில் தேசத் துரோகத்தில் ஈடுபட்டதாகப் பெரியார் சிறைப்பட்டிருந்த சமயம் நாகம்மையார் தலைமையிலான ஆறு பெண்கள் போராட்டத்தைக் கையில் எடுத்தனர். பெரியார் சிறை வைக்கப்பட்டு இருப்பதால் மற்ற தலைவர்கள் போராட்டத்தைத் தொடர வேண்டும் என்று நாகம்மையார் அவர்கள் அறிக்கை வெளியிட்டார்கள்.

ஒடுக்கப்பட்ட சமூகப் பெண்களை, வைக்கம் கோயில் சாலையை நோக்கி நாகம்மையார் அவர்கள் அழைத்துச் சென்றபோது காவல் துறையால் அவர் தடுத்து நிறுத்தப்பட்டார். ஒவ்வொருவரையும் என்ன ஜாதி என்று கேட்டு அவர்கள் ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவராக இருந்தால் அவரை மட்டும் உள்ளே விடாமல் தடுத்துள்ளது காவல்துறை. அங்கேயே தர்ணா செய்துள்ளார் நாகம்மையார். அவரது போராட்டத்தைக் கேரள பத்திரிக்கைகள் விரிவாக எழுதி உள்ளன.

### அண்ணல் அம்பேத்கருக்கு ஊக்கமளித்த போராட்டம்!

மகத் போராட்டத்தைத் தொடங்கிய அண்ணல் அம்பேத்கர் அவர்கள் தனக்கு ஊக்கமளித்த போராட்டமாக வைக்கம் போராட்டத்தையே குறிப்பிடுகிறார். அதன்பிறகுதான் தமிழ்நாட்டில் ஏராளமான கோயில் நுழைவுப் போராட்டங்கள் நடைபெற்றன. அனைவரும் கோயிலுக்குள் நுழையலாம், அதனை யாரும் தடுக்கக் கூடாது என்ற சட்டம் அதன் பிறகுதான் வந்தது.

இத்தகைய வரலாற்றுச் சிறப்புமிக்க வைக்கம் போராட்டம் நடந்து 100 ஆண்டுகள் ஆகிறது. இன்று வரையில் வைக்கம் போராட்டம் என்பது சமூகநீதி வரலாற்றில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. வரலாற்றில் இத்தகைய புரட்சிகளை நிகழ்த்தி வெற்றி கண்ட தந்தை பெரியார் அவர்களின் நினைவைப் போற்றவும் சமூகநீதிக் கருத்துக்களைத் தொடர்ந்து வலியுறுத்தவும் “வைக்கம் போராட்டத்தின் நூற்றாண்டு விழா” நிகழ்ச்சிகளைத் தமிழ்நாடு அரசு சிறப்பாக நடத்தத் திட்டமிட்டுள்ளது என்பதை தமிழ்நாடு சட்டமன்றத்தில் நான் அறிவித்தேன்.

### நூற்றாண்டு விழாவையொட்டி அரசு சார்பில் நடந்த நிகழ்ச்சிகள்!

* கடந்த ஏப்ரல் 1ஆம் நாள் கேரள அரசால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள “வைக்கம் போராட்ட நூற்றாண்டு விழா” நிகழ்ச்சியில், கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்களோடு நானும் சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்று உரையாற்றினேன். அன்றைய தினம் வைக்கம் போராட்டம் நடைபெற்ற இடத்தில் தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்ட நினைவுத்தூணுக்கு மரியாதை செலுத்தினோம்.

* தமிழ்நாட்டில் மிக முக்கியமான வரலாற்று ஆய்வாளர்களில் ஒருவரான பழ. அதியமான் அவர்கள் எழுதிய “வைக்கம் போராட்டம்” என்ற தமிழ் நூலின் மலையாளம், கன்னட மொழி பெயர்ப்புகள் வெளியிடப்பட்டுள்ளன.

* கேரள மாநிலம் வைக்கத்தில் அமைந்துள்ள பெரியார் நினைவிடத்தை நவீனமுறையில் மறுசீரமைக்க 8 கோடியே 14 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு மாபெரும் நினைவகம் அமைக்கப்பட்டு வருகிறது. பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, செய்தி மக்கள் தொடர்புத் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் ஆகியோர் மேற்பார்வையில் அது கட்டப்பட்டு வருகிறது. இன்னும் ஒரு மாதத்தில் அப்பணிகள் முடிவடையும். அதனைத் திறந்து வைப்பதற்கு நானும் கேரளம் செல்ல இருக்கிறேன்.

* தந்தை பெரியார் கைது செய்யப்பட்டு முதன் முதலாகச் சிறை வைக்கப்பட்டிருந்த ‘அருவிக்குத்தி’ கிராமத்தில் பெரியார் நினைவிடம் ஒன்று புதிதாக உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றும் நான் அறிவித்து இருந்தேன். பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் கேரளா சென்று அந்த இடத்தை பார்வையிட்டு வந்துள்ளார்கள். அதனை முறைப்படி கேரள அரசிடம் இருந்து பெற்றுப் பணிகள் விரைவில் தொடங்கப்பட இருக்கின்றன.

* வைக்கம் போராட்ட நூற்றாண்டு குறித்த சிறப்புக் கட்டுரைகள் பலவற்றை பல்வேறு அறிஞர்களிடமிருந்து பெற்றுத் தொகுத்து வைக்கம் போராட்ட நூற்றாண்டு மலர் ஒன்று ‘தமிழரசு’ இதழ் மூலம் கொண்டு வரப்படும் என்று அப்போது அறிவித்து இருந்தேன். அத்தகைய சிறப்பு மலர் இப்போது வெளியிடப்பட்டுள்ளது. இந்த மலருக்கு என்ன சிறப்பு என்றால் இது மூன்று மொழிக் கட்டுரைகளைத் தாங்கியதாக அமைந்துள்ளது. தமிழ், மலையாளம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிக் கட்டுரைகளும் இதில் இடம் பெற்றுள்ளன.

### இளைய தலைமுறைக்கு எடுத்துச் சொல்லவே இந்த மலர்!

தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் மட்டும்தான் பெரியாரை வைக்கம் வீரர் என்று சொல்கிறார்கள் என்பது போன்ற தோற்றத்தை சிலர் உருவாக்கப் பார்க்கிறார்கள். கேரள வரலாற்று ஆவணங்களிலும் வைக்கம் குறித்து ஆய்வு செய்த ஆங்கில வரலாற்றாசிரியர்களும் பெரியாரின் பங்களிப்பை மறைக்காமல் மறுக்காமல் பதிவு செய்துள்ளார்கள். அதன் முழுத் தொகுப்பாக இந்த மலர் அமைந்துள்ளது.

தந்தை பெரியார், டி.கே.மாதவன், கே.பி.கேசவ மேனன், ஜார்ஜ் ஜோசப், கேளப்பன், குரூர் நீலகண்டன் நம்பூதிரி, மன்னத்து பத்மநாபன், கோவை அய்யாமுத்து, எம்பெருமாள் பிள்ளை, காந்திராமன், தாணுமாலையப் பெருமாள் போன்ற தியாகிகளை இந்த நாட்டு மக்களுக்கு மீண்டும் நான் அறிமுகம் செய்தாக வேண்டும். அவர்களது உணர்வை மாநிலத்து மக்கள் பெற்றாக வேண்டும். எத்தகைய கசப்பான காலத்தை பல்வேறு போராட்டங்களின் மூலமாக நாம் கடந்து வந்துள்ளோம் என்பதை இன்றைய இளைய தலைமுறைக்கு எடுத்துச் சொல்லியாக வேண்டும். அதற்காகத்தான் இந்த மலர் தயாரிக்கப்பட்டுள்ளது.


ஒரு சீர்திருத்த இயக்கம் அரசியல் பரிணாமம் பெற்று ஆட்சியைப் பிடித்து பேசிய கொள்கைகளை நிறைவேற்றும் சட்டங்களை இயற்றும் தகுதியை அடைந்தது இந்திய அரசியல் வரலாற்றில் திராவிட இயக்கத்துக்குக் கிடைத்த பெருமை ஆகும். இதனைத் தான் பேரறிஞர் அண்ணா அவர்கள் “ஒருவர் புறப்பட்டு ஓயாது உழைத்து, உள்ளத்தைத் திறந்து பேசி, எதற்கும் அஞ்சாது பணியாற்றி ஒரு பெரிய சமூகத்தை விழிப்பும், எழுச்சியும் கொள்ளச் செய்வதில் வெற்றி பெற்ற வரலாறு இங்கன்றி வேறெங்கும் இருந்ததில்லை.” என்று குறிப்பிட்டார்கள். பெரியாருடைய பெரும் பணியை, நான் ஒரு தனி மனிதனின் வரலாறு என்றல்ல; ஒரு சகாப்தம் ஒரு காலகட்டம், ஒரு திருப்பம் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள்.

வைக்கம் போராட்ட வெற்றி விழா 29.11.1925 நடந்தபோது அதில் கலந்து கொள்ள பெரியாருக்கும் நாகம்மையாருக்கும் அழைப்பு வந்திருந்தது. தலைமை வகிக்கச் சொன்னார்கள்.

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்



மேற்கு தாம்பரத்தில் அமைந்துள்ள (ஹோட்டல் வசந்த_பவன்) புதிய கிளையை அமைச்சர் கே.என்.நேரு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் ஆகியோர் திறந்து வைத்து வாழ்த்து தெரிவித்தார்கள். இந்நிகழ்ச்சியில் தாம்பரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர், மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் ஜி.காமராஜ் மண்டல குழுத்தலைவர்கள் டி.காமராஜ், எஸ்.இந்திரன் மாநகராட்சி ஆணையாளர் அழகுமீனா மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், பகுதி கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.




நீலகிரி மாவட்டம் உதகை இத்தலார் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியின் கூடுதல் வகுப்பறை கட்டிடத்தை அமைச்சர் கா.ராமச்சந்திரன் குத்துவிளக்கு ஏற்றி திறந்து வைத்து சிறப்புரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் நீலகிரி மாவட்ட ஆட்சியர் அருணா அரசு அதிகாரிகள் மற்றும் கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

# கடந்த கால வரலாறுகளை நினைவூட்ட இதுபோன்ற விழாக்கள் தேவை!

## நூற்றாண்டு சிறப்பு விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆற்றவிருந்த உரை...

3ஆம் பக்கத் தொடர்ச்சி...

தலைமை வகிக்க மறுத்து வாழ்த்திப் பேசினார் பெரியார். " உரிமையை மறுத்த அரசாங்கமே இப்போது நம்மை கையை பிடித்து அழைத்துச் செல்கிறது. இதுதான் சத்தியாகிரகத் துக்கு ஏற்பட்ட மகிமை. பலாத்காரப் போராட்டம் நடத்தியிருந்தால் கூட இந்த வெற்றியை இவ்வளவு சீக்கிரம் பெற்றிருக்க மாட்டோம்' என்று பேசினார் பெரியார். இத்தகைய வெற்றியின் 100வது ஆண்டு விழாவை நாம் கொண்டாடிக் கொண்டு இருக்கிறோம்.

### 100 ஆண்டுகளில் கிடைத்த மாபெரும் மாற்றம்!

அன்று பெரியாரையும் வைக்கம் போராட்ட வீரர்களையும் கைது செய்தது திருவிதாங்கூர் அரசு. ஆனால் இன்று வைக்கம் நூற்றாண்டு விழாவைத் தமிழ்நாடு அரசும் கேரள மாநில அரசும் சேர்ந்து கொண்டாடிக் கொண்டு இருக்கிறது. இரண்டு மாநில முதலமைச்சர்கள் இங்கே இருந்து கொண்டாடுகிறோம். இதுதான் வைக்கம் உரிமைப் போராட்டத்தின் வெற்றியாகும். 100 ஆண்டுகளில் கிடைத்த மாபெரும் மாற்றம் இது. தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழக அரசும் கேரளத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அரசும் கொள்கை சார்ந்த அரசாக இருப்பதால் இதனை நாம் கொண்டாடுகிறோம்.

பெருமைமிகு திராவிட மாடல் ஆட்சி நடந்து கொண்டு இருக்கும் போது வைக்கம் நூற்றாண்டு விழா வருவது பொருத்தமானது. சாதாரண ராமசாமியாக இருந்தவர் தந்தை பெரியாராக வளரக் காரணமான போராட்டக் களம் அது. அத்தகைய சமூக சீர்திருத்த நோக்கம் கொண்டவர்களாக இன்றைய இளைய சமுதாயம் திகழ, இதுபோன்ற கடந்த கால வரலாறுகளை நாம் நினைவூட்டிக் கொண்டே இருக்க வேண்டும். அதற்கு இது போன்ற விழாக்கள் பயன்பட வேண்டும்.

100 ஆண்டுகளுக்கு முன் நாம் எப்படி இருந்தோம், இப்போது எப்படி இருக்கிறோம் என்ற கடந்த காலத்தை அனைவரும் அறிந்து வைத்திருக்க வேண்டும். இந்த மாற்றத்தை உருவாக்கியதில் பெரும் பங்கு சமூக நீதித் தத்துவத்துக்கு உண்டு. கல்வியில் வேலை வாய்ப்பில் சமூகப் பங்களிப்பில் நாம் சமூக நீதியை முழுமையாக அடைந்துவிட்டோம். நாம் அரசியல் ரீதியாக தடுக்கப்பட்ட இடங்களில் புகுந்து வெற்றி பெற்று அதிகார நிறுவனங்களைக் கைப் பற்றி விட்டோம். பொருளாதார சுதந்திரம் என்பதும் பல்வேறு வகைகளில் கிடைத்து வருகிறது. ஆனால் சமூகத்தில் ஒரு சில இடங்களில் முழுமையான சமூகநீதி கிடைத்து விட்டதா என்றால் இல்லை என்று சொல்ல வேண்டும்.

### ஒடுக்கப்பட்டோர் விடுதலைப் பெற்றிட மும்முனைத் தாக்குதல்!

அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆவதைச் சிலரால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. அனைவரும் அனைத்து இடங்களையும் சமமாக நடத்தப்படுவதைச் சிலரால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. இவற்றையும் நாம் எதிர்த்துப் போராட வேண்டும். சமூக சீர்திருத்தமாக இருந்தாலும் புரட்சியாக இருந்தாலும் சாதாரணமாகக் கிடைத்து விடாது. தானாகக் கிடைத்து விடாது. "தானாய் எல்லாம் எல்லாம் மாறும் என்பது பழைய பொய்யடா' என்பது பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்கள் எழுதிய பாட்டு ஆகும். நாம் தான் மாற்றியாக வேண்டும். ஒடுக்கப்பட்டோருக்கான விடுதலையை ஒடுக்கப்பட்டோரே போராடிப் பெற்றாக வேண்டும். பிரச்சாரத்தின் மூலமாக மன மாற்றம் செய்வதும் போராட்டங்களின் மூலமாக வலியுறுத்துவதும் சட்டங்களின் மூலமாகக் கட்டாயப்படுத்துவதுமான மும்முனைத் தாக்குதலை நடத்தியாக வேண்டும்.

தீண்டாமைக்கு எதிராக சாதிய ஏற்றத்தாழ்வுக்கு எதிராக உயர்வு தாழ்வுச் சிந்தனைக்கு எதிராக நாம் போராடியாக வேண்டும். அது மட்டுமல்ல ஆண் பெண் பாகுபாடுகளையப்பட வேண்டும். ஆணாதிக்கச் சிந்தனையும் பெண்கள் மீதான ஒடுக்கு முறையும் தடுக்கப்பட வேண்டும். மார்க்சியம், - பெரியாரியம், அம்பேத்கரியம் போன்ற முற்போக்குச் சிந்தனைகள் அனைத்துமே அனைத்து ஒடுக்கு முறைகளையும் எதிர்த்துப் போராட உருவாக்கப்பட்டவைதான்.

இத்தகைய சமூக சீர்திருத்த புரட்சியாளர்கள் காட்டிய வழியில் சமூகநீதி, - சமத்துவ, சமதர்ம, சமுதாயம் அமைக்க நாம் நமது போராட்டப் பயணத்தை இறுதி இலக்கை எட்டும் வரை தொடர்வோம் என்ற உறுதிமொழியை வைக்கம் நூற்றாண்டு விழாவில் எடுத்துக் கொள்வோம்.

தந்தை பெரியார் அவர்கள் மறைந்த போது, தலைவர் கலைஞர் அவர்கள் வெளியிட்ட இரங்கல் செய்தியில் 'பெரியார் தனது சுற்றுப் பயணத்தை நிறுத்திக் கொண்டார், நாம் தொடர்வோம்' என்று குறிப்பிட்டார். தந்தை பெரியாரின் சுயமரியாதைச் சுற்றுப் பயணத்தை நாம் அனைவரும் தொடர்வோம், தொடர்வோம்!

இவ்வாறு முதல்வர் அவர்கள் அவ்வுரையில் குறிப்பிட்டிருந்தார்.

அதி கனமழை காரணமாக பாதிக்கப்பட்ட

# தென் மாவட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கும் பணி!

## மாவட்ட ஆட்சியர்களுக்கு தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா அறிவுரை!

*சென்னை, டிச.29-*

அதிகனமழை காரணமாக திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மற்றும் தென்காசி மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணத் தொகை வழங்கும் பணி குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காவல்துறை உயர் அலுவலர்களுக்கு அரசு தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா அறிவுரைகள் வழங்கினார்

17.12.2023 மற்றும் 18.12.2023 ஆகிய இரு தினங்களில் வடகிழக்கு பருவமழை பருவத்தில் பெய்த அதிகனமழை காரணமாக திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மற்றும் தென்காசி மாவட்டங்களில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு பாதிப்பின் அடிப்படையில் நிவாரணத் தொகையாக 6,63,760 குடும்பங்களுக்கு குடும்ப அட்டையின் அடிப்படையில் ரூ,6,000/ நிவாரணத் தொகை மற்றும் 5 கிலோ அரிசி வழங்கவும், 14,31,164 குடும்பங்களுக்கு நிவாரணத் தொகையாக குடும்பம் ஒன்றுக்கு ரூ.1,000/ வழங்க அரசு ஆணைகள் பெறப்பட்டதன் அடிப்படையில், மேற்கண்ட 4 மாவட்டங்களின் மாவட்ட ஆட்சி தலைவர்கள், காவல் ஆணையாளர்கள், காவல் துறை கண்காணிப்பாளர்கள் ஆகியோர்களுடன் தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, நேற்று (28.12.2023) முன்னேற்பாடுகள் கூட்டம் நடத்தி இப்பணியினை சிறப்புடன் மேற்கொள்ள அறிவுரைகள் வழங்கினார்,

இக்கூட்டத்தில் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வேரர் பாதுகாப்புத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், காவல் துறைத் தலைவர், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை முதன்மை செயலாளர் / ஆணையாளர், அரசு முதன்மைச் செயலர் உள்துறை, அரசு முதன்மைச் செயலர் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, அரசு செயலர் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக மேலாண்மை இயக்குநர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இப்பணியில் குறைபாடுகள் ஏதுமின்றி உரிய தேதிகளில் கூட்ட நெரிசல் இன்றி அட்டைதாரர்கள் நிவாரணத் தொகை பெறும் வகையில் சுழற்சி முறையில் விநியோகம் மேற்கொள்ளும் வண்ணம் 26.12.2023 முதல் அட்டைதாரர்களுக்கு நிவாரணத் தொகை பெறவேண்டிய நாள் மற்றும் நேரம் குறித்து டோக்கன்கள் அட்டைதாரரின் வீடுகளில் நேரடியாக வழங்கப்பட்டன.

29.12.2023 முதல் தொடர்புடைய நியாய விலைக்கடைகளில் அட்டைதாரர்கள் அக்குறித்த நாட்களில் குறித்த நேரத்தில் குடும்ப அட்டையுடன் நியாயவிலை கடைகளுக்கு வருகை தந்து அவர்களுக்குரிய நிவாரண உதவிகளை பெற்றுச் செல்லலாம்.

மேற்படி நிவாரணத் தொகை பொதுமக்களுக்கு எவ்வித புகாருக்கும் இடமின்றி வழங்கிடவும், புகார் எழும் சூழலில் அதனை உடனுக்குடன் சம்பந்தப்பட்ட அலுவலர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று தீர்வு நல்கிடவும் ஏதுவாக திருநெல்வேலி மாவட்டத்திற்கு 93424 71314, 97865 66111 எண்களிலும், தூத்துக்குடி மாவட்டத்திற்கு 94864 54714, 1077 எண்களிலும், தென்காசி மாவட்டத்திற்கு 04633-290548, எண்ணிலும், கன்னியாகுமரி மாவட்டத்திற்கு 04652-231077 எண்ணிலும், கட்டுப்பாட்டு அறைகள் 26.12.2023 முதல் செயல்பட்டு வருகின்றன.

மேலும், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளர் அலுவலகத்தில் 044-28592828 என்ற எண்ணில் கட்டுப்பாட்டு அறை அலுவலக பணி நேரத்தில் செயல்படும். பொதுமக்களுக்கு வெள்ள துயர் துடைக்கும் நோக்குடன் வழங்கப்படும் நிவாரண உதவிகள் பாதிக்கப்பட்ட அனைத்து குடும்பங்களுக்கும் வழங்கப்படும் நிலையில் பொதுமக்கள் இப்பணிக்கு போதுமான ஒத்துழைப்பு நல்கி நிவாரணம் பெற வேண்டுகோள் விடுக்கப்படுகிறது.

திருத்தணி எஸ்.சந்திரன் தலைமை! வி.ஜி.ராஜேந்திரன் பங்கேற்பு! டி.ஆர்.திலீபன் ஏற்பாட்டில்

# மாபெரும் மாநில அளவிலான ஆணழகன் போட்டி!

## அமைச்சர் ஆர்.காந்தி- எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி போட்டியை துவக்கி வைத்து பரிசளிக்கின்றனர்!

*திருவள்ளூர் 29;*

திருவள்ளூர் மேற்கு மாவட்ட திமுக இளைஞரணி சார்பில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாபெரும் மாநில அளவிலான ஆணழகன் போட்டி திருவள்ளூரில் உள்ள ஐ.ஆர்.என்.மற்றும் ஐ.வி.ஆர். ஆகிய திருமண மண்டபத்தில் இன்று ( 2912 2023) மற்றும் நாளை 3012 2023 ஆகிய தேதிகளில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ தலைமையில் நடைபெறுகிறது. இதில் திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி. ராஜேந்திரன், நகரக் கழகச் செயலாளர் சி.சு. ரவிச்சந்திரன், நகர மன்ற தலைவர் உதயமலர் பாண்டியன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ம.கிரண், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் தா.மோதிலால், டி.எம்.சுகுமார், டி.கே.பாபு, ம.புவனேஷ்குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

நிகழ்ச்சி ஏற்பாட்டாளர் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஆணழகன் டி.ஆர். திலீபன் வரவேற்புரை ஆற்றுகிறார் போட்டியில் கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் ராணிப்பேட்டை ஆர்.காந்தி, முன்னாள் ஒன்றிய அமைச்சர் கழக உயர்நிலை செயல் திட்ட குழு உறுப்பினருமான எஸ்.ஜெகத்ரட்சகன் எம்பி, ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி வெற்றி பெற்றவர்களுக்கு பரிசளிக்கிறார்கள்.

இந்த விழாவில் மாநில இளைஞரணி துணை செயலாளர்கள் எஸ்.ஜோயல், பிரபு கஜேந்திரன், ப.அப்துல்மாலிக், தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம்.பூபதி, மாவட்ட மாநில நிர்வாகிகள் கே.திராவிட பக்தன், ஆர். டி.இ.ஆதிசேசன், ஒ.ஏ.நாகலிங்கம், இ.குருதாஸ், டாக்டர் வி.சி.ஆர்.குமரன், சி. ஜெயபாரதி, எம்.மிதுன் சக்ரவர்த்தி, ப.சிட்டிபாபு, எஸ்.கே.ஆதாம், வி. கிஷோர், மு.சுப்பிரமணியம், இராஜேஸ்வரி ரவீந்திரநாத் உள்பட ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் திருவள்ளூர் நகரக் கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கழக மூத்த முன்னோடிகள் வட்டக் கழக செயலாளர் அணிகளின் நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொள்கிறார்கள். முடிவில் நகர இளைஞரணி அமைப்பாளர் ஆ.பவள வண்ணன் நன்றி கூறுகிறார்.

செம்பரம்பாக்கம் ஊராட்சியில்

# கலைஞரின் வருமுன் காப்போம் திட்ட மருத்துவ முகாம்!

## ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

*திருவள்ளூர் டிச 29;*

பூவிருந்தவல்லி ஒன்றியம், செம்பரம்பாக்கம் ஊராட்சியில் கலைஞரின் வருமுன் காப்போம் திட்டத்தின் படி பொது மக்களுக்கான இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது. இந்த முகாமிற்கு ஒன்றிய கழக செயலாளர் ப.ச.கமலேஷ், முன்னிலை வகித்தார். ஊராட்சி மன்ற தலைவர் சாந்தி வின்சென்ட் அனைவரையும் வரவேற்றார்.

இந்த முகாமிற்கு பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி தலைமை தாங்கி மருத்துவ முகாமை தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார். அப்போது

அவர் பேசியதாவது:

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் வருமுன் காப்போம் திட்டம் கொண்டு வரப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வந்தது. அதன்பிறகு அதிமுக ஆட்சியில் 10 ஆண்டுகள் இந்த திட்டம் கிடப்பில் போடப்பட்டது. தற்போது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் திமுக ஆட்சிக்கு வந்த பிறகு மீண்டும் இந்த திட்டம் மிகச் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது இதன் மூலம் கோடிக்கணக்கான ஏழை எளிய மக்கள் மருத்துவ வசதி பெறுகின்றனர். இந்த மருத்துவ முகாம்கள் மூலமாக அனைத்து விதமான மருத்துவ பரிசோதனைகள், சிகிச்சைகள், மருந்து மாத்திரைகள் இலவசமாக அளிக்கப்படுகிறது.

பூவிருந்தவல்லி ரூ.10 கோடி மதிப்பில் நவீன அரசு மருத்துவமனை விரைவில் கட்டப்படும். அதற்கான இடம் தேர்வு செய்யும் பணி நடந்து வருகிறது. இவ்வாறு அவர் பேசினார்.

இம்முகாமில் பொது மருத்துவம், பன்முனை மருத்துவ பரிசோதனை, கண், பல், காது மூக்கு தொண்டை, வயிறு சம்பந்தப்பட்ட நோய்கள், நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம், காசநோய், மூட்டு மற்றும் எலும்பு சம்பந்தமான நோய்கள், இருதய நோய்கள், சிறுநீரக கோளாறு, குழந்தை நல சிறப்பு மருத்துவம், மனநல மருத்துவம், கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் பெண்களுக்கான சிறப்பு மருத்துவம் மற்றும் புற்றுநோய் மருத்துவம் உள்ளிட்ட பல்வேறு நோய்களுக்கான பரிசோதனை மற்றும் சிகிச்சைகளும் இலவசமாக மருந்துகளும் வழங்கப்பட்டன. இதில் பொது குழு உறுப்பினர் வி.குமார், வட்டார மருத்துவ அலுவலர் பிரதிபா மருத்துவ ஆய்வாளர்கள் வடிவேல் , விஜயகுமார், மாவட்ட கவுன்சிலர் ஏஜி.ரவி, ஒன்றிய கவுன்சிலர் பிரியா செல்வம், ஒன்றிய நிர்வாகிகள் ஏ. ஜனார்த்தனன், புகழேந்தி, ஏ.ஆர்.பாஸ்கர், டி.குமரேசன், வி.தணிகாசலம், எம்.ராம்பாபு, திருமலை ராஜ், சாய்மோகன், ஜி.கே.குமார், ராஜாமணி, கே.பி.ஞானமூர்த்தி, எம்.ராதாகிருஷ்ணன், விநாயகம், ஸ்ரீதர், முரளி, சாரங்கன், மனோஜ்குமார், ஊராட்சி துணைத் தலைவர் கன்னியம்மாள் ருத்ரகுமார் உள்பட பலர் கலந்து கொண்டார்கள்.





திருவள்ளூர் தொகுதி திருவாலங்காடு மேற்கு ஒன்றியம் கூளூர் ஊராட்சியில் தேசிய நெடுஞ்சாலை 205 முதல் கூளூர் கிராமம் வரை உள்ள சாலையின் குறுக்கே பயன்பாட்டில் இருந்து வந்த பாலம் கடந்த மிக்ஜாம் மழை வெள்ளத்தால் சேதமடைந்த பாலத்தை வி.ஜி.ராஜேந்திரன் நேரில் சென்று பார்வையிட்டு விரைந்து புதிய பாலம் அமைத்து மக்கள் பயன்பாட்டிற்கு வழங்கிட ஆலோசனை வழங்கினார். உடன் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர் கூடுதல் ஆட்சியர் சுகபுத்ரா, துறை சார்ந்த அலுவலர்கள், ஒன்றிய செயலாளர் கூளூர் எம். ராஜேந்திரன் , மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் வி. எஸ். நேதாஜி , மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் விஜயகுமாரி, ஒன்றிய கழக நிர்வாகிகள் காஞ்சிப்பாடி பி. சரவணன் குமார் , கமலநாதன் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் காஞ்சிபாடி ஆர். யுவராஜ், துணை அமைப்பாளர் திலகன், தட்சிணாமூர்த்தி உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் இருந்தனர்.

ஆவடியில் ரூ.3 கோடியே 90 லட்சம் மதிப்பீட்டில்

# நகர்ப்புற மற்றும் ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடம்!

## முன்னாள் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் துவக்கி வைத்தார்!

*திருவள்ளூர் டிச 29;*

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்ட மன்ற தொகுதிகளில் மேம்பாட்டு பணிகள் தீவிரமாக நடைபெற்று வரும் நிலையில் பொது மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் நகர்ப்புற சுகாதார நிலையங்களை அமைக்க வேண்டும் என கோரிக்கை வைத்த நிலையில் உடனடியாக நிதி ஒதுக்கப்பட்டு ஆவடி மாநகராட்சிக்கு உட்பட்ட மண்டல வாரியாக 8 இடங்களில் 3 கோடியே 90 லட்சம் மதிப்பிட்டில் 6 நகர்ப்புற சுகாதார துணை நிலையங்கள் மற்றும் 3 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கும் பணி துவக்க விழா நடைபெற்றது.

அந்த வகையில் ஆவடி விளிஞ்சியம்பாக்கம் நந்தவன மேட்டூர், பட்டாபிராம் காந்தி நகர், திருமுல்லைவாயல் சரஸ்வதி நகர், சோழம்பேடு, சின்னம்மன் கோவில் தெரு, பருத்திப்பட்டு இந்திரா நகர் ஆகிய பகுதிகளில் ஆரம்ப சுகாதார துணை நிலையங்கள் மற்றும் ஆவடி அடுத்த கோவில்பதாகை, பெரியார் நகர் உள்ளிட்ட பகுதிகளில் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கும் பணிகளை முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்டச் செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ கலந்து கொண்டு புதிய கட்டிடம் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார்.. மேலும் கட்டிட பணிகளை துரிதமாக செய்து முடிக்கவும் அதிகாரிகளுக்கு உத்தரவிட்ட பொது மக்களுக்கு இனிப்புகளை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் மாநகர மேயர் ஜி.உதயகுமார், ஆவடி மாநகர ஆணையர் ஷேக் அப்துல் ரகுமான், மண்டல குழு தலைவர்கள் ஜி. ராஜேந்திரன், அமுதா பேபி சேகர், ஜோதி லட்சுமி, வி. அம்மு, தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், மாநகர பொறுப்பாளர் சன். பிரகாஷ், பகுதி கழக செயலாளர்கள் பேபி சேகர், பொன் விஜயன், ஜி.நாராயண பிரசாத் உள்ளிட்ட மாநகராட்சி அதிகாரிகள் மருத்துவத்துறை அதிகாரிகள் மாமன்ற உறுப்பினர்கள் வட்ட கழக செயலாளர்கள் கழக நிர்வாகிகள் கழக மூத்த முன்னோடிகள் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.






தலைமைச்செயலகத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் தலைமையில் நேற்று (28.12.2023) கலை பண்பாட்டுத் துறை மற்றும் அருங்காட்சியகங்கள் துறை செயல்பாடுகள் குறித்து ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர். க.மணிவாசன், அருங்காட்சியகங்கள் ஆணையர் மா.அரவிந்த், கலை பண்பாட்டுத் துறை இயக்குநர் சே.ரா.காந்தி, இ.ரெ.பா.ப. தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் உறுப்பினர் செயலாளர் திருமதி விஜயா தாயன்பன், டாக்டர் ஜெ.ஜெயலலிதா இசை மற்றும் கவின் கலை பல்கலைக்கழகம் துணைவேந்தர் முனைவர் எஸ்.சௌமியா, இசைப்பள்ளிகளின் கலையியல் அறிவுரைஞர் ஜாகிர் உசேன் மற்றும் அலுவலர்கள் கலந்துக் கொண்டனர்.

## மதச்சார்பற்ற அரசியல் ஒரு மதவாத அரசால் மாற்றியமைக்கப்படுகிறது!

# இந்தியாவின் அடிப்படைக் கட்டமைப்பைக் காத்திட இணைந்து போராடுவோம்!

### “வைக்கம் போராட்டம்” நூற்றாண்டு சிறப்பு விழாவில் கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் ஆற்றவிருந்த உரையில் வலியுறுத்தல்!

**சென்னை.டிச.29–**

**“மதச்சார்பற்ற அரசியல் ஒரு மதவாத அரசால் மாற்றியமைக்கப்படுகிறது. எனவே இந்தியாவின் அடிப்படைக் கட்டமைப்பை காத்திட இணைந்து போராடுவோம்” என்று கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்கள் சென்னையில் நடைபெற்ற “வைக்கம் போராட்டம்” நூற்றாண்டு விழாவில் ஆற்றவிருந்த உரையில் வலியுறுத்தியுள்ளார்.**

*சென்னையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்ற வைக்கம் சத்யாகிரக போராட்ட நூற்றாண்டு விழாவில் கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்கள் ஆற்றிய உரையின் தமிழாக்கம் வருமாறு:*

வைக்கம் சத்யாகிரகம் இந்திய வரலாற்றில் இணையற்ற மக்கள் இயக்கம். அதன் நூற்றாண்டு விழாவின் ஒரு பகுதியாக நாங்கள் இங்கு கூடியுள்ளோம். வைக்கம் சத்யாகிரகத்தில் பங்கேற்றதற்காக கேரளாவும் தமிழ்நாடும் பெருமை கொள்கின்றன. வைக்கம் சத்யாகிரகம் மற்றும் அதன் பாரம்பரியம் என்று வரும்போது, நமது தமிழ் சகோதரர்கள் கேரள மக்களைப் பற்றி பெருமிதம் கொள்கிறார்கள் என்பதற்கு சென்னையில் ஏற்பாடு செய்யப்பட்ட கொண்டாட்டம் ஒரு சான்றாகும். வைக்கம் சத்யாகிரகத்தின் நூற்றாண்டை நினைவு கூறும் வகையில் இந்த சிறப்பான நிகழ்வை ஏற்பாடு செய்த எனது அன்புச் சகோதரரும் தோழருமான தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலினுக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கேரளாவில் பல மறுமலர்ச்சி இயக்கங்கள் தோன்றின. மருமரக்கால் சமரம், அருவிப்புரம் பிரதிஷ்டை, வில்லுவண்டி சாமரம், கல்லுமலை சமரம், கிருர்வாயூர் சத்யாகிரகம் போன்றவை அவற்றில் அடங்கும். மறுமலர்ச்சி இயக்கங்களின் இந்த நீண்ட சங்கிலியில் வைக்கம் சத்யாகிரகம் ஒரு முக்கிய இணைப்பு. இருப்பினும், இது தனித்துவமானது,

இது மற்றவற்றிலிருந்து தனித்து நிற்கிறது. மற்ற இயக்கங்களிலிருந்து இது வேறுபட்டது எப்படி என்றால் சமூக சீர்திருத்தத்தில் கவனம் செலுத்திய மறுமலர்ச்சி இயக்கங்களும், தேச விடுதலைக் காகப் போராடிய காலனிய எதிர்ப்பு இயக்கமும் வைக்கம் சத்யாகிரகத்தில் ஒன்றாக இணைந்தது என்பதுதான். அதுவரை, மறுமலர்ச்சித் தலைவர்களும், சமூக அமைப்புகளும் தனித் தனியாகவே சீர்திருத்த இயக்கங்களை நடத்தி வந்தனர். ஆனால் வைக்கம் சத்யாகிரக போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தேசத்தின் சுதந்திரப் போராட்டத் தலைவர்களுடன் கைகோர்த்தார்கள். எனவேதான் வைக்கம் சத்யாகிரகம் வரலாற்றில் முக்கியத்துவம் பெற்றது.

**தீண்டாமையை ஒழிக்க குழு!**

சீர்திருத்த இயக்கங்கள் மற்றும் அரசியல் இயக்கங்கள் என இரட்டை தலைமையின் கீழ் சமூக அவலங்களுக்கு எதிராக இது போன்ற போராட்டம் வேறு எங்கும் நடந்ததாக எனக்கு தெரியவில்லை. ஸ்ரீ நாராயண குரு, சட்டம்பி சுவாமிகள், அய்யன்காளி போன்ற மறுமலர்ச்சித் தலைவர்கள் கலங்கரை விளக்கமாக இருந்து வழிகாட்டியிருக்காவிட்டால், கேரளாவில் இப்படி ஒரு முற்போக்கு இயக்கம் நடந்திருக்க வாய்ப்பில்லை. ஸ்ரீ நாராயண குரு வைக்கத்திற்கு சென்றார். அவர் தனது ஆசிரமத்தை சத்யாக்கிரக போராட்டத்தில் பங்கேற்றவர்களுக்காக திறந்துவிட்டார். தீண்டாமையை ஒழிக்க குழு ஒன்றும் அப்போது அமைக்கப்பட்டது

தெருவில் நடமாடும் சுதந்திரம் குடிமகனின் அடிப்படை உரிமை. ஆனால், நம் நாட்டில் அந்த காலத்தில் அதற்கு அனுமதி இல்லை. பெரும்பாலான மக்கள் பொது சாலைகளில், குறிப்பாக கோவில்களுக்கு அருகில் நடக்க அனுமதிக்கப்படவில்லை. தூய்மை மற்றும் தீண்டாமை பற்றிய கருத்துக்கள் அதனுடன் தொடர்புபடுத்தப்பட்டது. இது அடிப்படை உரிமையை மறுக்கும் செயல் என்பதால் உணர்வுபூர்மான எதிர்ப்பு எழுந்தது . வைக்கம் சத்யாகிரக போராட்டம் என்பது வர்ணாஸ்ரம தர்மம் என்ற மனித விரோத சாதி அமைப்புக்கு எதிரான ஒரு தெளிவான அறைகூவல் ஆகும். குருவாயூர் சத்யாகிரக போராட்டத்தின் மூலம் அது மேலும் முன்னேறியது. இந்தப் போராட்டங்கள் ஆலய நுழைவுப் பிரகடனத்துக்கு வழி வகுத்தது.

அந்த வகையில், வைக்கம் சத்யாகிரகம் நாடு முழுவதற்கும் முன்மாதிரியாக இருந்தது, அதைத் தொடர்ந்து நாட்டின் பல பகுதிகளில் ஆலயங்கள் மற்றும் பொது சாலைகளில் சுதந்திரமாக நடமாடுவது தொடர்பான பல போராட்டங்கள் நடத்தப்பட்டன. குருவாயூரைத் தவிர, புனே, நாசிக் மற்றும் பலவற்றிலும் வைக்கம் சத்யாகிரகத்தின் தாக்கத்தைக் காண முடியும்.

**பெரியார் வருகையை பெருமையுடன் நினைவுகூர்வோம்**

வைக்கம் சத்யாகிரகத்தின் பொதுவான பாரம்பரியம் குறித்து பெருமை கொள்ள, தமிழ்நாடு மற்றும் கேரளா ஆகிய இரு மாநிலங்களுக்கும் பொதுவான பல விஷயங்கள் உள்ளன என்பதை ஆரம்பத்திலேயே நான் தெளிவாகக் கூறினேன். சாதி அமைப்பு, ஆரிய ஆதிக்கம், பிராமண மேலாதிக்கம் ஆகிய தீமைகளை எதிர்த்து வீரத்துடன் போராடிய தந்தை பெரியார் என்ற அழைக்கப்படும் ஈ.வெ.ராமசாமி நாயக்கர், வைக்கத்தில் நடைபெற்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சத்யாகிரக போராட்டத்தில் பங்கேற்க எங்களது மாநிலத்துக்கு வருகை தந்தார் என்ற வரலாற்று உண்மையை கேரளா எப்போதும் பெருமையுடன் நினைவு கூர்கிறது. உடல்நிலை குன்றிய நிலையிலும் போராட்டத்தில் கலந்துகொண்டு இரண்டு முறை சிறையில் அடைக்கப்பட்டார். வீரம் செறிந்த வைக்கம் சத்யாகிரக போராட்டத்திற்கு பிறகு, ‘வைக்கம் வீரர்’ என்ற பட்டத்தைப் பெற்றார் என்பது நினைவுகூரத்தக்கது. வைக்கம் சத்யாகிரகம், தந்தை பெரியாரின் அந்தஸ்தை உயர்த்தியதோடு, மற்ற விஷயங்களில் தீர்க்கமான மற்றும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை ஆற்ற உத்வேகமூட்டியது.

மறுமலர்ச்சி இயக்கங்கள் குறித்து மிகப் பெரிய பார்வையை மக்களிடத்தில் ஏற்படுத்தியதிலும் வரலாற்று எல்லைகளுக்குள் அவற்றை கொண்டு சென்றதிலும் தமிழகம் எங்களுடன் ஒன்றாகஇருந்ததுஎன்பதும்குறிப்பிடத்தக்கது. வைக்கம் சத்யாகிரகத்தில் சி ராஜகோபாலாச்சாரி, சீனிவாச ஐயங்கார், அய்யாமுத்து கவுண்டர் போன்றவர்களின் பங்களிப்பு அந்த போராட்டத்தின் போது ஒருமைப்பாட்டை நிலைநிறுத்துவதில் முக்கிய பங்குவகித்தது.

**வரும் நாட்களிலும் புது உற்சாகத்துடன் முன்னேறுவோம்!**

இத்தகைய புகழ்பெற்ற போராட்டங்களின் பாரம்பரியத்தை கேரளாவும் தமிழ்நாடும் மக்களுக்காக பகிர்ந்து கொள்கின்றன. வரும் நாட்களிலும், அதே போன்று புது உற்சாகத்துடன் முன்னோக்கிச் செல்ல வேண்டும். வெவ்வேறு எண்ணங்களை கொண்டோர் பொதுவான ஒரு குறிக்கோளுக்காக, ஒரு பெரிய நோக்கத்திற்காக ஒன்றிணைய முடியும் மற்றும் ஒன்றிணைக்க வேண்டும். எதிர்காலத்திலும் இப்படிப்பட்ட ஒற்றுமை தேவை, அதை சகோதர உறவுகளுடன், உறுதியான சக்திகளுடன் மிகப்பெரிய அளவில் உருவாக்க வேண்டும் என்பதை வைக்கம் சத்யாகிரகம் நமக்கு ஒரு முன்மாதிரியான பாதையை காட்டியிருக்கிறது.

> **மா**நிலப் பட்டியலில் உள்ள ஒரு விஷயம் தொடர்பாக, சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களை ஆளுநர்கள் குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்கு எந்த அதிகாரத்தை கொண்டு அனுப்பி வைக்கிறார்கள்? நமது கூட்டாட்சி ஆட்சியில், மாநிலப் பட்டியலில் இடம்பெறும் ஒரு விஷயத்தில் மாநிலச் சட்டம் செல்லுமா இல்லையா என்பதை பரிசீலிக்க குடியரசுத் தலைவருக்குக் கூட அதிகாரம் இல்லாதபோது, அத்தகைய மசோதாக்களை குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்கு அனுப்புவதன் மூலம், அரசியலமைப்பின் கீழ் அளுநருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை உண்மையில் அவர்கள் வேண்டுமென்றே கைவிடுகிறார்கள். இது ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றத்தின் அதிகாரங்களை அழிப்பதை நோக்கமாகக் கொண்ட ஒரு செயலாகும்.

**முன்மாதிரியான போராட்டம்**

வைக்கம் சத்தியாகிரகம் மற்றொரு முன்மாதிரியையும் முன்வைத்துள்ளது. , சமூகக் கொடுமைகள் அல்லது ஒடுக்குமுறைகளுக்கு மட்டும் ஆளானவர்கள், அதற்கு எதிராகப் போராடுபவர்களாக இருக்கக் கூடாது. இத்தகைய தீமைகள் மற்றும் அடக்குமுறைகளின் மோசமான பலனை அனுபவிப்பவர்கள் கூட அதை எதிர்த்துப் போராட ஒன்றுபட வேண்டும் என்பதுதான் அது. கே.கேளப்பன், கே.பி. கேசவ மேனன், மன்னத்து பத்மநாபன்,

## மாநில அரசுகளின் அதிகாரங்களைத் தகர்க்கும் ஆளுநர்கள்!

குரூர் நீலகண்டன் நம்பூதிரிபாட், டி.கே.மாதவன், டி.ஆர்.கிருஷ்ணசுவாமி ஐயர், கண்ணன்தொடத்து வேலாயுத மேனன் ஆகியோர் வைக்கம் சத்யாக்கிரகத்தின் முன்னணியில் இருந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த இயக்கத்தை சுதந்திரப் போராட்டத்துடன் இணைப்பதில் டி.கே.மாதவன் போன்றோர் ஆற்றிய பங்கு குறிப்பிடத் தக்கது. காக்கிநாடாவில் நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் சிறப்பு கூட்டத்தில் தீண்டாமை ஒழிப்பு மற்றும் ஆலய நுழைவு போராட்டத்திற்கு ஆதரவாக அவர் தீர்மானம் கொண்டு வந்தார். டி கே மாதவனுக்கு காந்தியடிகள் ஆதரவு அளித்தார். ஸ்ரீ நாராயண குருவின் ஆசீர்வாதத்தைப் பெற்ற பிறகுதான் காந்தியடிகள் சத்யாகிரக போராட்டத்தை காணச் சென்றார். வைக்கம் சத்யாகிரகம் தொடர்பாக காந்தியடிகளின் முதல் கேரளா பயணம் அதுவாகும்.

**காந்தியடிகளுக்கே அனுமதி மறுப்பு**

காந்தியடிகள் வைக்கம் சென்றபோது,



அவர் ஒரு ‘அவர்ணன்’(பிற்படுத்தப்பட்டவர்) என்பதால், கோயிலின் நிர்வாகக் கட்டுப்பாட்டைக் கொண்டிருந்த இந்தம்துருத்தி மன என்ற அமைப்பு ஆலயத்திற்குள் நுழைய அவருக்கு அனுமதி மறுத்தது. கோவிலை சுற்றியுள்ள பொது சாலைகள் அனைவருக்கும் திறக்கப்பட வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்தபோது, கோயில் நிர்வாக அதிகாரிகளான, ‘சவர்ணாஸ்’ அதை செய்ய மறுத்துவிட்டனர். இன்று, அந்த மனா (நிர்வாகம்) அன்றைய காலத்தில் பிற்படுத்தப்பட்டவர்கள் என்று கருதப்பட்ட பின்னணியில் இருந்து வந்த தொழிலாளர்களை கொண்டு நிர்வாக அலுவலகமாக செயல்படுகிறது. இறுதியில் வரலாறு எந்த திசையில் முன்னேறுகிறது, எப்படி

## சாதிய அமைப்பை எதிர்த்து வீரத்துடன் போராடியவர் தந்தை பெரியார்!

முன்னோக்கி நகர்கிறது, எப்படி ஒரு முற்போக்கான திசையில் செல்கிறது என்பதற்கு இதுவே ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

வைக்கம் சத்தியாகிரகத்தில் பல்வேறு சாதிகளைச் சேர்ந்தவர்கள் மட்டுமின்றி, பல்வேறு மதங்களைச் சேர்ந்தவர்களும் கலந்து கொண்டனர். அந்த வகையில், இது உண்மையிலேயே ஒரு மக்கள் இயக்கமாகும். கே.அப்துல் ரஹ்மான்குட்டி, பரீத் சாஹிப், எம்.கே.அப்துல் ரஹீம் மற்றும் பலர் இஸ்லாமிய சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி ஒற்றுமையை வெளிப்படுத்தினர். ஜார்ஜ் ஜோசப் போன்றவர்கள் சத்யாகிரகத்தை ஏற்பாடு செய்வதில் திரைக்குப் பின்னால் முக்கிய பங்கு வகித்தனர். சீக்கிய மதத்தைச் சேர்ந்த சகோதரர்கள் வைக்கத்தில் ‘லங்கர்’ (பொது சமையல் கூடம்) கூட அமைத்தனர். எனவே, சத்யாகிரகம் உண்மையான மதச்சார்பற்ற தன்மையைக் கொண்டிருந்தது.

**முற்போக்கான மாற்றம் தேவை**

1865 ஆம் ஆண்டிலேயே, பிற்படுத்தப்பட்ட சமூகங்கள் உட்பட சமூகத்தின் அனைத்துப் பிரிவினரும் பொதுச் சாலைகளைப் பயன்படுத்த அனுமதிக்க திருவிதாங்கூர் சமஸ்தானம் முடிவு செய்தது. இன்னும், ஆறு தசாப்தங்களுக்குப் பிறகும், அந்த முடிவை நடைமுறைப்படுத்த ஒரு மக்கள் இயக்கம் தேவைப்படுகிறது. சிறந்த சட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் சமூக மாற்றத்தை ஏற்படுத்த முடியாது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு. அதை அடைய, சமூக பார்வையிலும் செயல்பாடுகளிலும் முற்போக்கான மாற்றங்களைக் கொண்டு வரக்கூடிய மக்கள் இயக்கங்களும் தேவைப்படுகிறது. இதைத்தான் நமக்கு வைக்கம் சத்யாகிரகம் சுட்டிக் காட்டுகிறது.

**சமூக மாற்றங்களை கொண்டு வந்த ஆளுமைகள்**

அரசியல் இயக்கங்கள் இருந்தாலும் சமூக இயக்கங்களுடன் அவற்றுக்கு எந்தத் தொடர்பும் இல்லை என்ற வாதத்தை உறுதிப்படுத்தும் போக்கு பொதுவாக உள்ளது. வைக்கம் சத்யாகிரகம் அந்த கருத்தோட்டத்தை நிராகரித்து விட்டது. இந்தியாவின் பெரும்பாலான சீர்திருத்த இயக்கங்கள் உயர்ந்த ஆளுமைகளின் விளைவாக வந்தவைதான். ராஜாராம் மோகன் ராய், ஈ.வெ. ராமசுவாமி நாயக்கர், ஜோதிபா பூலே, ஸ்ரீ நாராயண குரு மற்றும் பலர் நாட்டில் சமூக மாற்றத்தைக் கொண்டு வருவதில் நிச்சயமாக பெரும் பங்கு வகித்துள்ளனர். இருப்பினும், வைக்கம் சத்தியாகிரகம் ஒரு தனி நபரைச் சுற்றி வரவில்லை. சமூக, அரசியல் இயக்கங்களில் ஈடுபட்ட அனைவரின் கூட்டு முயற்சியே அதன் வெற்றியை உறுதி செய்தது.

**மறுமலர்ச்சி இயக்கத்தின் பாரம்பரிய அரசுகள்**

20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் தோன்றிய மறுமலர்ச்சி இயக்கங்களின் பாரம்பரியத்தை முன்னெடுத்துச் சென்ற அரசியல் அமைப்புகளே இன்று தமிழ்நாடு மற்றும் கேரளா ஆகிய இரு மாநிலங்களிலும் ஆட்சியில் உள்ளன என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். பெரியார், அண்ணா தலைமையில் இருந்த திராவிட இயக்கம், கலைஞர் போன்றவர்களால் காலத்திற்கு ஏற்றவாறு மாற்றமடைந்துள்ளது. இந்தப் பெருமைக்குரிய மரபை தமிழகத்தில் திமுக அரசு முன்னெடுத்துச் செல்கிறது. கேரளாவில், நமது மறுமலர்ச்சி இயக்கங்களின் உள்ளடக்கம் மற்றும் நிலைத்தன்மை போன்ற விழுமியங்களை உள்வாங்கி, நவீன கேரளாவை உருவாக்க இடதுஜனநாயக முன்னணி அரசு முயற்சிக்கிறது. வைக்கம் சத்யாகிரகத்தின் நூற்றாண்டை நினைவுகூரும் வகையில் இந்த இரண்டு அரசியல் அமைப்புகளும், அவர்கள் தலைமையிலான அரசுகளும் ஒன்று கூடுவது மிகவும் பொருத்தமானது.

100 ஆண்டுகளுக்கு முன்பு, சமுதாயத்தின் பெரிய நலன்களை நிறைவேற்ற செய்யச் வைக்கம் சத்தியாகிரகம் நடத்தப்பட்டது. நமது வரலாறு, மொழி, கலாச்சாரங்கள், மதச்சார்பின்மை, கூட்டாட்சி, ஜனநாயகம் மற்றும் அனைத்தையும் ஒன்றாகக் கொண்டுள்ள அரசியலமைப்பு ஆகியவற்றைப் பாதுகாக்க, நாட்டின் மிகப்பெரிய நலன்களுக்காக ஒன்றுபட வேண்டிய காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். சமூக மற்றும் அரசியலில் வெவ்வேறு கொள்கைகளை உடையவர்கள் பொது நலனுக்காக ஒன்றிணைந்த ஒரு இயக்கத்தை பற்றி நாம் நினைவுகூரும்போது, நமது காலத்திற்கு பொருத்தமான பொது நன்மையை அடைய நாமும் இதுபோன்ற இயக்கங்களை ஒன்றிணைக்க பாடுபடுவது கட்டாயமாகும்.

**பொதுநலன்களுக்காகப் போராடுவோம்**

அப்போதுதான் சாதிவெறி, தீண்டாமை, சமூகத் தீமைகள், மூடநம்பிக்கைகள், மனிதாபிமானமற்ற சடங்குகள் போன்றவற்றுக்கு எதிரான போராட்டம் கூர்மையடையும். இன்றும் கூட இத்தகைய பிற்போக்கு சிந்தனைகள் மற்றும் நடைமுறைகளை பிரதான நீரோட்டத்தில் கொண்டுவருவதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். மதம், மாநிலம் போன்றவற்றின் அடிப்படையிலும் நம்மை பிரிக்கும் முயற்சிகள் நடக்கின்றன. நாம் போராடி சுதந்திரம் அடைந்தாலும், இன்று நமது இறையாண்மைக்கு சவால் விடும் பொருளாதார உறவுகளுக்கும் வர்த்தக ஒப்பந்தங்களுக்கும் தள்ளப்பட்டுள்ளோம். இவை அனைத்திற்கும் எதிராக பொதுநலன் கருதி போராட வேண்டும். பொறுப்புள்ள அரசியல் அமைப்புகள் மற்றும் அரசாங்கங்கள் என்ற முறையில் காலம் அதை நம்மிடம் கோருகிறது.

**மதவாத அரசால் மாற்றியமைக்கப்படும் விழுமியங்கள்**

நமது அரசியலமைப்புச் சட்டம் மற்றும் அது நிலைநாட்டும் மதிப்புகள், நமது புகழ்பெற்ற சுதந்திரப் போராட்டத்தின் ஒரு பகுதியாக உருவான விழுமியங்கள் மீது கடுமையான தாக்குதல் தற்போது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. வைக்கம் சத்யாகிரகத்தின் மதச்சார்பற்றதன்மைபற்றிகுறிப்பிட்டிருந்தேன். இது நமது சுதந்திரப் போராட்டத்தின் மிகவும் போற்றுதலுக்குரிய மதிப்புகளில் ஒன்றாகும். இது நமது அரசியலமைப்பின் அடிப்படைக் கொள்கைகளில் ஒன்றாகும். எவ்வாறாயினும், நமது மதச்சார்பற்ற அரசியல் ஒரு மதவாத அரசால் மாற்றியமைக்கப்படுகிறது. நமது அரசியலமைப்புச் சட்டம் மநுஸ்மிருதியால் மாற்றப்பட முயற்சிகள் நடக்கின்றன. நமது கூட்டாட்சி அமைப்பு ஒற்றையாட்சி அமைப்பாக மாற்றப்பட்டு வருகிறது.

மதச்சார்பற்ற, சோசலிச, ஜனநாயக, சுதந்திரமான, இந்தியாவின் அடிப்படைக் கட்டமைப்பு பாதுகாக்கப்பட்டு, பலப்படுத்தப்பட வேண்டும் என்பதற்காக, இதுபோன்ற மோசமான அனைத்து முயற்சிகள் குறித்து நாம் விழிப்புடன் இருக்க வேண்டும், அவற்றிற்கு எதிராகப் போராட வேண்டும்.

கடந்த காலங்களில் இதே போன்ற பிரச்சனைகளை நாங்கள் எதிர்கொண்டோம். அந்த நேரத்தில், நாங்கள் அதை எதிர் கொண்டு ஒன்றாக நின்று வென்றோம். தற்போதும், இதே போன்ற பிரச்சனைகளை நாம் எதிர்கொள்கிறோம். இந்த நேரத்தில் இந்த சக்திகளால் ஏற்படும் நெருக்கடியை நாம் கைகோர்த்து நின்று எதிர்ப்பதில் உறுதியாக உள்ளோம். தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகளின் அதிகாரங்களை தகர்ப்பதற்காக ஆளுநருக்கு உரிய அதிகாரம் தவறாகப் பயன்படுத்தப்படுவது துரதிர்ஷ்டவசமானது.

**ஆளுநர்களின அதிகார அத்துமீறல்**

மாநிலப் பட்டியலில் உள்ள ஒரு விஷயம் தொடர்பாக,சட்டமன்றத்தால்நிறைவேற்றப்பட்ட மசோதாக்களை ஆளுநர்கள் குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்கு எந்த அதிகாரத்தை கொண்டு அனுப்பி வைக்கிறார்கள்? நமது கூட்டாட்சி ஆட்சியில், மாநிலப் பட்டியலில் இடம்பெறும் ஒரு விஷயத்தில் மாநிலச் சட்டம் செல்லுமா இல்லையா என்பதை பரிசீலிக்க குடியரசுத் தலைவருக்குக் கூட அதிகாரம் இல்லாதபோது, அத்தகைய மசோதாக்களை குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்கு அனுப்புவதன் மூலம், அரசியலமைப்பின் கீழ் அளுநருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை உண்மையில் அவர்கள் வேண்டுமென்றே கைவிடுகிறார்கள். இது ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றத்தின் அதிகாரங்களை அழிப்பதை நோக்கமாகக் கொண்ட ஒரு செயலாகும்.

ஒரு மாநிலச் சட்டம், பொதுப் பட்டியலில் உள்ள ஒரு விஷயத்தைத் தொடும். மத்திய சட்டத்தில் உள்ள எந்த விதிகளையும் மீறாமல் இருக்கும் வரை, வேறுவிதமாகக் கூறினால், மத்திய சட்டத்தின் அம்சங்களுக்குள் நுழையாத பட்சத்தில், மாநில சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட அத்தகைய மசோதாக்களை குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்கு ஆளுநரால் அனுப்ப முடியாது. இந்த மசோதாவில் அரசியலமைப்புச் சட்ட விதிகளுக்கு முரணாக ஏதும் இருப்பதாக ஆளுநர் கருதினாலும், அந்த மசோதாவை தனது கருத்துக்களுடன் மீண்டும் சட்டமன்றத்திற்கு அனுப்புவதே ஆளுநருக்கு உள்ள ஒரே வாய்ப்பு.

**நீதிமன்ற அதிகாரங்களை ஆக்கிரமிக்கும் ஆளுநர்கள்**

**இது தொடர்பாக, ஒரு சட்டத்தை அரசியலமைப்பு ரீதியாக தீர்மானிக்கும் இறுதி அதிகாரம் இந்த நாட்டில் உள்ள அரசியலமைப்பு சட்டத்தால் உருவாக்கப்பட்டுள்ள நீதிமன்றங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதை நினைவில் கொள்ளவேண்டும். இந்த உண்மையை மறந்துவிட்டு, இந்த நாட்டில் ஆளுநர் பதவியை வகிக்கும் சிலர், அரசியல் சாசனத்தால் சட்டப்பூர்வமாக நீதித்துறைக்கு வழங்கப்பட்டுள்ள துறைகளை ஆக்கிரமித்து வருகின்றனர்.**

**ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றத்திற்கு அரசியலமைப்புச் சட்டம் சரியாகப் பிரித்து வைத்துள்ள அதிகாரங்கள், ஆளுநரைப் போன்ற ஒரு நியமன அதிகாரியின் தலையீட்டை அனுமதிக்கும் பட்சத்தில், நாட்டில் ஜனநாயக அரசியல் நிலவுவதைப் பற்றி சிந்திப்பது பயனற்றதாக இருக்கும். இந்த நாட்டில் அரசியலமைப்பின் கீழ் செயல்படும் எந்த ஆளுநருக்கும் தனது ஒப்புதலுக்காக அனுப்பப்பட்ட மசோதாக்களை காலவரையின்றி வைத்திருக்கும் அதிகாரமோ உரிமையோ கிடையாது. இது நன்கு நிறுவப்பட்ட சட்டத்தின் நிலைப்பாடு என்று உச்ச நீதிமன்றத்தால் மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்பட்டுள்ளது.**

**சட்டத்தின் இந்த நிலைப்பாட்டை உச்சநீதிமன்றம் அவ்வப்போது நினைவுகூறும் போதும் ஜனநாயக செயல்முறைக்கு குந்தகம் விளைவிப்பதை மறைமுக நோக்கமாக கொண்ட ஆளுநர்கள், மசோதாக்களை பரிசீலிக்காமல் அவற்றை முடக்கி வைக்கிறார்கள்.அல்லது குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்கு அனுப்பி வைக்கிறார்கள்.**

**கேரள ஆளுநரின் பழிவாங்கும் செயல்!**

கேரள மாநிலத்தில், ஆளுநர் தனது ஒப்புதலுக்காக அனுப்பப்பட்ட எட்டு மசோதாக்களை இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக கிடப்பில் போட்டுள்ளார். ஆளுநரின் இத்தகைய செயலற்ற தன்மையை நீதிமன்றத்திற்கு கேரள அரசு கொண்டு சென்ற போதுதான் அந்த எட்டு மசோதாக்களில் ஒரு மசோதாவுக்கு ஆளுநர் ஒப்புதல் அளித்தார், மீதமுள்ளவற்றை குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்கு அனுப்பினார். ஆளுநர் தனது சட்ட விரோத செயல்களை தெரிந்தே செய்கிறார் என்பது தெளிவாகிறது. அதையும் மீறி, அவர் அவ்வாறு நடந்துகொள்வதுஎன்பது அவரது அரசியல் பழிவாங்கலை மட்டுமே காட்டுகிறது. நாட்டு மக்கள் இத்தகைய பழிவாங்கும் செயல்களை திறம்பட எதிர்கொண்டு தோற்கடிப்பதில் வல்லவர்கள் என்பதை அதிகார மையங்கள் நினைவில் கொள்வது நல்லது.

வைக்கம் சத்யாகிரகத்தின் இந்த நூற்றாண்டு விழா, இந்த முன்னோக்கிய பயணத்தில் புத்துணர்ச்சியையும் வலிமையையும் அளிக்கும்.

இவ்வாறு கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்கள் உரையாற்றினார்.



சென்னையில் கழக இளைஞர் அணிச் செயலாளரும் விளையாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களை கோவை மாநகர் மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக், கோவை வடக்கு மாவட்டச் செயலாளர் தொ.பெ.ரவி, கோவை தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன் ஆகியோர் சந்தித்து 'முரசொலி'க்கு தலா 350 சந்தாவிற்கான தொகையினை வழங்கினர்.



செங்கல்பட்டு மாவட்ட மக்கள் மற்றும் பள்ளி, கல்லூரி மாணவமாணவியர் பயன்பெறும் வகையில் மாவட்ட நிர்வாகம் மற்றும் தமிழ்நாடு அறிவியல் இயக்கம், செங்கை பாரதியார் மன்றம் இணைந்து நடத்தும் செங்கை புத்தக திருவிழா–2023, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் துவக்கி வைத்தார். அருகில் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், சட்டமன்ற உறுப்பினர்கள் வரலட்சுமி மதுசூதனன், எஸ்.எஸ்.பாலாஜி, மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் செம்பருத்தி துர்கேஷ், நகர மன்றத் தலைவர் தேன்மொழி நரேந்திரன் ஆகியோர் உள்ளனர்.

### எண்ணூர் வாயு கசிவு சம்பவம் எதிரொலி: அனைத்து தொழிற்சாலைகளிலும்

# வல்லுநர் குழு அமைத்து பாதுகாப்பு அம்சங்கள் குறித்து ஆய்வு!

## சுற்றுச் சூழல் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பேட்டி!

புதுக்கோட்டை, டிச. 29 -

சென்னை எண்ணூர் அருகே பெரிய குப்பம் பகுதியில் உள்ள தொழிற்சாலையில் வாயு கசிவு ஏற்பட்டது குறித்து சுற்றுசூழல் அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் கூறியதாவது: -

அமோனியா கசிவு ஏற்பட்ட நிலையில் 15 நிமிடத்தில் ஆலை நிர்வாகம் அதனை சரி செய்துள்ளது.

இந்த வாயு கசிவால் 18 பேர் பாதிக்கப்பட்டு சென்னை ஸ்டான்லி மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். உடனடியாக அப்பகுதிக்கு மாசு கட்டுப்பாட்டு அதிகாரிகள் சென்று, பரிசோதனை நடத்தினர். அப்போது அப்பகுதியில் பூஜ்யம் சதவீதம் அமோனியா இல்லை என்று கண்டறியப்பட்டது.

எனவே விபத்து ஏற்பட்ட போதிலும் அது உடனடியாக சரி செய்யப்பட்டது. அந்த தனியார் தொழிற்சாலை ரெட் கேட்டகிரியில் உள்ளது. இதேபோல ரெட் கேட்டகிரியில் இருக்கும் அனைத்து தொழிற்சாலைகளும், மறு ஆய்வுக்கு உட்படுத்தப்படும்.

அனைத்து பாதுகாப்பு அம்சங்களும் சரியாக உள்ளதா என்பது குறித்து ஆய்வு நடத்தப்படும். அதே சமயம் இதுபோன்ற விபத்துகள் ஏற்படும் போது, அதனை



தடுக்க நவீன தொழில்நுட்ப அம்சங்கள் உடனடியாக பயன்படுத்தும் நிலையில் உள்ளதா என்பது குறித்து ஒரு குழு அமைத்து வல்லுனர்கள் உதவியுடன் ஆய்வு நடத்தப்பட உள்ளது.

இரவில் இருந்து மாசு கட்டுப்பாட்டு வாரிய அலுவலர்கள் அங்கு உள்ளனர்.

மேலும் அந்த தனியார் கம்பெனி தற்காலிகமாக மூடப்பட்டு உள்ளது. சல்ப்யூரிக் ஆசிட் பிளாண்ட் மட்டும் உடனடியாக மூட முடியாது என்பதால் படிப்படியாக மூடும் பணி நடைபெற்று கொண்டிருக்கிறது. எதிர் காலத்தில் இது போன்று விபத்துகள் நடைபெறாமல் இருக்க என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை விரைவில் அறிவிப்போம். அங்கு மட்டும் அல்லாமல், நிரந்தர தீர்வை எட்டும் வகையில் இந்த ஆய்வு தமிழ்நாடு முழுவதும் நடைபெறும்.

இவ்வாறு அவர் கூறினார்.

### நல்லி குப்புசாமி தலைமை! தமிழ்நாடு ஒருங்கிணைந்த

# இசை வேளாளர் சங்கங்களின் கூட்டமைப்பு துவக்க விழா!

## ஆ.இராசா எம்.பி. – முன்னணியினர் பங்கேற்பு!

சென்னை, டிச.29-

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டில் இசை வேளாளர் முற்போக்கு நலச்சங்கத்தின் முப்பெரும் விழா - 24-ஆம் ஆண்டு விழா, தமிழ்நாடு ஒருங்கிணைந்த இசை வேளாளர் சங்கங்களின் கூட்டமைப்பு துவக்க விழா மற்றும் திருமண வரன் பார்க்கும் விழா நாளை (30.12.2023-சனிக்கிழமை) காலை 8.45 மணி முதல் 5 மணி வரை, சென்னை, ராஜா அண்ணாமலைபுரத்தில் அமைந்துள்ள முத்தமிழ்ப் பேரவை திருவாவடுதுறை டி.என்.ராஜரத்தினம் நினைவரங்கத்தில் நடைபெறுகின்றது.

காலை 8.45 மணிக்கு டி.எஸ்.பாண்டியன், டி. எஸ்.சேதுராம் குழுவினரின் நாதஸ்வர இசை மற்றும் கே.எஸ்.கண்ணன், கே.எஸ்.கே.மணிகண்டன், வி.எல்.ஹரிஷ் ஆகியோரின் சிறப்பு தவில் இசை கொண்ட மங்கல இசையுடன் விழா துவங்குகிறது.

விழாவிற்கு தொழிலதிபர் பத்மஸ்ரீ நல்லி குப்புசாமி தலைமை வகிக்கிறார்.

செம்பொன்னார் கோவில் எஸ்.ஆர்.ஜி. ராஜண்ணா, தொழிலதிபர்கள் ஆர்.இளங்கோவன், ராஜப்பா இளங்கோவன், ஆர்.பாலவேலாயுதம், தமிழ்நாடு அரசு மகளிர் மேம்பாட்டு நிறுவன நிதி ஆலோசகர் எஸ்.ராஜேந்திரன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின்திருவுருவப்படத்தினை ஒன்றிய முன்னாள் அமைச்சர் ஆ.இராசா எம். பி. சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு திறந்து வைக்கிறார்.

இசை வேளாளர் முற்போக்கு நலச்சங்கத்தலைவர் ந.மணிவண்ணன் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார்.

அச்சங்கத்தின் பொதுச் செயலாளர் வி.லட்சுமி நாராயணன் சங்க செயல்பாடு குறித்து விளக்கி பேசுகிறார்.

இசை வேளாளர் முற்போக்கு நலச்சங்க பொருளாளர் ஜி.பால்ராஜ் நிதி நிலை அறிக்கையை அளித்து பேசுகிறார்.

இவ்விழாவில் கலைஞர்கள், அறிஞர்கள், சாதனையாளர்கள் கௌரவிக்கப்படுகிறார்கள்.

உயர்நீதிமன்ற வழக்கறிஞர் - சட்ட ஆலோசகர் முத்தப்பன் நன்றி கூறுகிறார்.

அதனைத் தொடர்ந்து பிற்பகல் தமிழ்நாடு ஒருங்கிணைந்த இசை வேளாளர் சங்கங்களின் கூட்டமைப்பு துவக்க விழா நடைபெறுகின்றது.

இந்நிகழ்ச்சிக்கு இசை இன முரசு மாத இதழ் ஆசிரியர் சேது சொக்கலிங்கம் தலைமை வகிக்கிறார்.

தொழில் அதிபர் ஏ.பழனியப்பன் முன்னிலை வகிக்கிறார்.

இந்நிகழ்ச்சியில் திருக்கோஷ்டியூர் மணிகண்டன், பாகனேரி கார்த்திக், மதுரை சிதம்பர பாரதி, கும்பகோணம் சரவணன், விராலிமலை பூபாலன், சமயபுரம் சேது லட்சுமணன், கோவிலூர் திருநாவுக்கரசு, காரைக்குடி கதிர்வேல் மற்றும் இசை வேளாளர் சங்க நிர்வாகிகள் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

இசை வேளாளர் கௌரவ ஆசிரியர் டி.ஏ.வீரமணி நன்றி கூறுகிறார்.


திராவிட முழக்கம்

மாத இதழ்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வெளியீட்டு விழா

நாள்: 29.12.2023 (வெள்ளிக்கிழமை)

நேரம்: மாலை 6 மணி

இடம்: முத்தமிழ்ப்பேரவை - TN இராஜரெத்தினம் அரங்கம், அடையாறு, சென்னை - 600 020. பழைய சத்யா ஸ்டூடியோ எதிரில்.

முதல் இதழ் வெளியிட்டுச் சிறப்புரை:

திரு. ஆ. இராசா, எம்.பி.

பெற்றுக் கொள்பவர்:

மாண்புமிகு அமைச்சர்

மனோ தங்கராஜ்

வாழ்த்துரை:

திருமிகு நக்கீரன் கோபால்

வழக்கறிஞர் அருள்மொழி

திருமிகு நவாஸ் கனி, எம்.பி.

நடிகர் இளவரசு


### ஈரோடு – நெல்லை விரைவு ரெயில் சேவை செங்கோட்டை வரை நீட்டிப்பு!

நெல்லை, டிச. 29 –

நெல்லை – செங்கோட்டை வழித்தடத்தில் கடந்த சில ஆண்டுகளாக பாசஞ்சர் ரெயில்கள் மட்டுமே இயக்கப்பட்ட நிலையில், தற்போது பாலருவி தினசரி ரெயிலும், தாம்பரம், மேட்டுப்பாளையம் வாரம் ஒருமுறை செல்லும் எக்ஸ்பிரஸ் ரெயிலும் இயக்கப்பட்டு வருகின்றன.

இதற்கிடையில், ஈரோடு – நெல்லை விரைவு ரெயிலை செங்கோட்டை வரை நீட்டிக்க வேண்டும் என பல்வேறு தரப்பினர் கோரிக்கை விடுத்து வந்தனர்.

இந்நிலையில் ஈரோடு – நெல்லை விரைவு ரெயில் (16845) சேவையை செங்கோட்டை வரை நீட்டிக்க ரெயில்வே வாரியம் ஒப்புதல் அளித்துள்ளது. அதன்படி, ஈரோட்டில் இருந்து மதியம் 2 மணிக்கு புறப்படும் ரெயில், இரவு 11.15 மணிக்கு செங்கோட்டையை சென்றடையும்.

செங்கோட்டையில் இருந்து காலை 4.50 மணிக்கு புறப்படும் ரெயில் (16846) ஈரோட்டை மதியம் 3 மணிக்கு சென்றடையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.




பல்லாவரம் சட்டமன்ற தொகுதி தாம்பரம் மாநகராட்சி மண்டலம்– 2 உட்பட்ட குரோம்பேட்டை காமராஜ்புரத்தில் மிக்ஜாம் புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 2000 க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு அரிசி போர்வை பாய், தலையணை போன்றநல திட்ட. உதவிகளை பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி ஏற்பாடு செய்து வழங்கினார் மண்டல தலைவர் இ. ஜோசப் அண்ணாதுரை, மாமன்ற உறுப்பினர் ரேணுகாதேவி, வட்டக் கழகச் செயலாளர் பி.பரமசிவம், ஜி. கருணாமூர்த்தி ஆகியோர் உடன் இருந்தனர்.



## கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம் திறப்பு விழா

நாள் : 30.12.2023
சனிக்கிழமை, காலை 11.00 மணி
இடம் : கிளாம்பாக்கம்,
செங்கல்பட்டு மாவட்டம்.





கலைஞர் 100
1924 - 2023




**தமிழகத்தின் மிகப்பெரிய பேருந்து முனையத்தை மக்களின் பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்க வருகை தரும்**

மாண்புமிகு தமிழ்நாடு

# முதலமைச்சர்

*அவர்களை வரவேற்று மகிழும்*

**தா.மோ.அன்பரசன்**

மாண்புமிகு குறு, சிறு (ம) நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்

**பி.கே.சேகர்பாபு**

மாண்புமிகு இந்து சமயம் (ம) அறநிலையத்துறை அமைச்சர்
மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவர், சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர்

# பேரிடர் கால நிதி நெருக்கடியும் மோடியின் அரசியலும்!

வரலாறு காணாத பெரு மழையின் காரணமாக சுமார் பத்து நாட்கள் இடைவெளியில், தமிழ்நாடு இரு பெரும் பேரிடர்களை கண்டுள்ளது. எட்டு மாவட்டங்கள் கடுமையான பாதிப்பை சந்தித்துள்ளன. தமிழ்நாடு அரசின் போர்க் கால நடவடிக்கைகளின் விளைவாக மக்களின் இயல்பு வாழ்க்கை கூடுமான விரைவில் மீண்டிருக்கிறது.

இந்நிலையில் பேரிடர் பாதிப்புகளை சீர் செய்யும் நோக்கில் மிக்ஜாம் புயல் மற்றும் வெள்ள பாதிப்பிற்கு இடைக்கால நிவாரணமாக ரூ.7,033 கோடியும், நீண்ட கால பாதிப்புகளை சரி செய்ய ரூ. 12,659 கோடியும், தென் மாவட்ட பேரிடருக்கு இடைக் கால நிவாரணமாக ரூ.2,000 கோடியும் என மொத்தம் ரூ.21,692 கோடி தமிழ்நாடு அரசால் ஒன்றிய அரசிடம் கோரப்பட்டுள்ளது.

06/12/2023 அன்று இந்திய பிரதமர் அவர்களுக்கு முதலமைச்சர் அவர்கள் எழுதிய கடிதத்தில் சென்னை உள்ளிட்ட மாவட்டங்களின் வெள்ள பாதிப்பை சீர் செய்ய 5,060 கோடி ரூபாய் இடைக்கால நிவாரணமாக ஒதுக்கீடு செய்ய கோரப்பட்டது.

07/12/2023 அன்று வெள்ள பாதிப்புகளை ஆய்வு செய்ய வந்த ஒன்றிய பாதுகாப்புத்துறை அமைச்சர் அவர்களிடம் அதே கோரிக்கையை நேரடியாக முதலமைச்சர் அவர்கள் முன் வைத்தார். 14/12/2023 அன்று வெள்ள பாதிப்புகளை ஆய்வு செய்த ஒன்றியக் குழுவிடம் இடைக்கால நிவாரணமாக 7,033 கோடி மற்றும் நீண்ட கால பாதிப்பை சீர் செய்ய 12,659 கோடியை வழங்க வலியுறுத்தினார் முதலமைச்சர் அவர்கள். 19/12/2023 அன்று பிரதமர் அவர்களுடனான முதலமைச்சரின் சந்திப்பில் மேற்கண்ட தொகையுடன், தென் மாவட்ட பேரிடருக்கு உடனடி நிவாரணத் தொகையாக 2,000 கோடியை வழங்க வலியுறுத்தப்பட்டது.

21/12/2023 அன்று முதலமைச்சர் அவர்கள் தென் மாவட்ட பேரிடர் பாதிப்புகளை ஆய்வு செய்த பின்னர், செய்தியாளர் சந்திப்பின் வழியாக, பேரிடர் நிவாரண நிதியை ஒன்றிய அரசு உடனடியாக வழங்க வேண்டும் என கோரினார். 24/12/2023 அன்று பிரதமர் அவர்களுடனான தொலைபேசி உரையாடலில் தமிழ்நாட்டிற்கு தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து 21,692 கோடியை விடுவிக்க, முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார். 27/12/2023 அன்று தென் மாவட்ட பேரிடர் பாதிப்புகளை ஆய்வு செய்ய வந்த ஒன்றிய நிதி அமைச்சர் அவர்களிடம், தமிழ்நாடு நிதி அமைச்சர் அவர்கள் 72 பக்க விரிவான அறிக்கையை வழங்கி நிவாரண நிதியை விடுவிக்க கோரினார்.

தமிழ்நாடு அரசு சார்பில் முதலமைச்சரும், நிதி அமைச்சரும் ஏறத்தாழ ஏழு முறைக்கு மேல் அலுவல் பூர்வமாக பேரிடர் நிவாரண நிதியை விடுவிக்க கோரியும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உள்ளிட்டோர் பொதுவெளியில் அதே கோரிக்கையை முன் வைத்தும், "எங்கள் வரி எங்கள் உரிமை" என்று ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களும் உரிமை குரல் எழுப்பிய பின்னரும், இந்த நிமிடம் வரை தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து தமிழ்நாட்டிற்கு ஒரு பைசா கூட மோடி அரசு ஒதுக்கவில்லை.

இந்நிலையில் ஒன்றிய அரசு 1000 கோடிக்கு மேல் நிதி ஒதுக்கி விட்டது என பாஜகவை சேர்ந்தோர் தவறான செய்திகளை பரப்பி வருகிறார்கள்.

07/12/2023 அன்று ஒன்றிய உள்துறை அமைச்சர் அவர்கள் இரண்டு ட்விட்டர் 'எக்ஸ்' பதிவுகளை வெளியிட்டார்.

1) **தமிழ்நாட்டின் வெள்ள பாதிப்புகளை எதிர்கொள்ள 2023–24 நிதியாண்டிற்கான மாநில பேரிடர் நிவாரண நிதியின் இரண்டாவது தவணைத் தொகை ரூபாய் 450 கோடியை முன்கூட்டியே விடுவிக்கிறோம்**
2) **சென்னை மாநகருக்கான வெள்ள தடுப்பு கட்டமைப்புகளை உருவாக்க தேசிய பேரிடர் தடுப்பு நிதியிலிருந்து ரூபாய் 561 கோடியை விடுவிக்கிறோம்**

மேற்கண்ட இரண்டு நிதியைத்தான் ஒன்றிய அரசு இதுவரை அறிவித்துள்ளது. இதில் தேசிய பேரிடர் தடுப்பு நிதி சென்னை, புனே உள்ளிட்ட ஏழு மாநகரங்களுக்கு வழங்குவது தொடர்பாக கடந்த ஜூன் மாதமே அறிவிப்பு வெளியிடப்பட்டு, அதன் துணைக் குழு கூட்டம் ஆகஸ்ட் மாதத்தில் நடந்து முடிந்து விட்டது. தாங்கள் முன்பே அறிவித்ததை பேரிடர் காலத்தில் அறிவித்தது போல செய்தியை வெளியிட்டார்கள்.

அடுத்ததாக மாநில பேரிடர் நிவாரண நிதிக்கு இரண்டாவது தவணையாக விடுவித்த 450 கோடி ரூபாய். நிதிக் குழுவின் பரிந்துரை அடிப்படையில் தமிழ்நாடு அரசுக்கு ஒன்றிய அரசு கொடுத்தே ஆக வேண்டிய பங்குத்தொகை. ஆக தமிழ்நாடு சந்தித்த இரண்டு பேரிடருக்கும் ஒன்றிய அரசின் வசம் உள்ள தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து எந்த ஒரு நிதியையும் விடுவிக்கவில்லை.

### பேரிடர் மேலாண்மை சட்டம்

2004 ஆம் ஆண்டு சுனாமி பாதிப்பை தொடர்ந்து, திமுக அங்கம் வகித்த ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு பேரிடர் மேலாண்மை சட்டத்தை 2005 ஆம் ஆண்டு உருவாக்கியது. இச்சட்டம் மூன்று பிரதான நிதிகளை வரையறுக்கிறது

பிரிவு 46 - தேசிய பேரிடர் நிவாரண நிதி, பிரிவு 47 - தேசிய பேரிடர் தடுப்பு நிதி, பிரிவு 48 - மாநில பேரிடர் நிவாரண நிதி.

### மாநில பேரிடர் நிவாரண நிதி

இது ஒவ்வொரு மாநிலமும் பேரிடரை எதிர்கொள்ள நிலையாக இருக்கும் நிதி. இதில் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை அமைக்கப்படும் நிதி குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் 75% ஒன்றிய அரசும், 25% மாநில அரசுகளும் பங்களிப்பு செய்ய வேண்டும்.

ஒவ்வொரு ஆண்டும் ஒன்றிய அரசு எவ்வளவு வழங்க வேண்டும் என்பதை நிதிக் குழு தீர்மானிக்கும். பேரிடர் நடந்தாலும் நடக்கவில்லை என்றாலும் இந்தத் தொகையை வழங்க வேண்டியது ஒன்றிய அரசின் கடமை. இந்த நிதியை மாநில அரசு நிர்வகிக்கும்.

### தேசிய பேரிடர் மேலாண்மை நிதி

இது ஒன்றிய அரசு நிர்வகிக்கும் நிதி, ஒரு குறிப்பிட்ட பேரிடருக்கான பாதிப்பும் செலவும் மாநில பேரிடர் நிவாரண நிதியை விட அதிகமாக ஏற்படும் சூழலில், கூடுதல் நிதியை தேசிய பேரிடர் மேலாண்மை நிதியிலிருந்து மாநிலங்களுக்கு ஒதுக்க வேண்டும் என பேரிடர் மேலாண்மை சட்டம் வரையறுக்கிறது.

15வது நிதிக் குழுவின் பரிந்துரை அடிப்படையில், 2023-24 நிதியாண்டில் தமிழ்நாட்டிற்கு மாநில பேரிடர் நிவாரண நிதி 1200 கோடி. இதில் 900 கோடி ஒன்றிய அரசு சட்டப்படி வழங்க வேண்டிய பங்குத்தொகை. ஆனால் தமிழ்நாட்டின் இரண்டு பேரிடர்களில் 8 மாவட்டங்களுக்கு ஏற்பட்ட பாதிப்பு 1200 கோடியை விட பல மடங்கு அதிகம் என்கிற காரணத்தால், இது வரையில் 21,692 கோடியை நாம் கோரியுள்ளோம்.

உதாரணமாக சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் & செங்கல்பட்டு ஆகிய நான்கு மாவட்டங்களில் மட்டும் 24,25,000 குடும்பங்களுக்கு, தலா 6,000 ரூபாய் நிவாரணம் வழங்குவதற்கு மட்டும் 1,486 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. இது மட்டுமே இந்த ஆண்டுக்கான மாநில பேரிடர் நிவாரண நிதியை விட 2,86 கோடி ரூபாய் அதிகம். எனவே இரண்டு பேரிடருக்குமான பாதிப்பை மாநில பேரிடர் நிவாரண நிதி மட்டும் கொண்டு ஈடு செய்ய முடியாது என்பது வெளிப்படையாக தெரிகிறது. ஆனாலும் ஒன்றிய அரசு தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து நிதியை ஒதுக்குவதற்கு விடாப்பிடியாக மறுக்கிறது.

இந்த அநீதியை கேள்வி கேட்டால், எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி தொடங்கி பாஜகவின் படை பரிவாரங்கள் வரை, ஆய்வு செய்யாமல் பாதிப்புகளை மதிப்பீடு செய்யாமல் எப்படி நிதி வழங்குவார்கள் ? என்று ஒரே கேள்வியை கேட்கிறார்கள்.

### குஜராத் உதாரணம்

17/05/2021 அன்று குஜராத்தை தாக்டே புயல் தாக்கியது. 19/05/2021 அன்று குஜராத் மாநிலத்தில் புயல் பாதித்த பகுதிகளை பிரதமர் மோடி நேரடியாக ஆய்வு செய்து, உயிரிழந்தவர்களுக்கு பிரதமரின் தேசிய நிவாரண நிதியிலிருந்து தலா 2,00,000 மற்றும் காயம் அடைந்தவர்களுக்கு தலா 50,000, கூடுதலாக குஜராத் மாநிலத்திற்கு உடனடி இடைக்கால நிவாரணமாக தேசிய பேரிடர் மேலாண்மை நிதியிலிருந்து 1,000 கோடியும் அறிவித்தார். முழுமையான ஆய்வுக்குப் பிறகு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

குஜராத் மாநிலம் பாதிக்கப்படும்போது அமைச்சரவைக் குழு ஆய்வு செய்யட்டும் என்றோ, ஒன்றிய அரசு அலுவலர்கள் குழு ஆய்வு செய்யட்டும் என்றோ, சேத மதிப்பீடுகள் தயாராகட்டும் என்றோ மோடி அரசு காத்திருக்கவில்லை. நிதியை ஒதுக்கி விட்டு தான் ஆய்வுகளை மேற்கொண்டார்கள். ஆனால் தமிழ்நாடு பேரிடரை எதிர்கொள்ள நிதி கேட்கிறபோது மட்டும் அமைச்சரவை குழு ஆய்வு செய்ய வேண்டும், ஒன்றிய அரசு அலுவலர்களின் குழு ஆய்வு செய்ய வேண்டும், சேத மதிப்பீடுகள் தயார் செய்ய வேண்டும் என்னென்ன காரணங்களை அடுக்கிக் கொண்டே செல்கிறார்கள். "எங்கள் வரி எங்கள் உரிமை" என்று இதனை எதிர்த்து தமிழ்நாட்டு மக்கள் கேள்வி கேட்கிற போது, பாஜகவை காப்பாற்றும் வகையில் அவர்களது குரலிலேயே எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் பேசுகிறார்.

குஜராத்தை புயல் தாக்கிய போது அம்மாநிலத்தின் மாநில பேரிடர் நிவாரண நிதியில், நிதி இல்லாத காரணத்தால் தான் உடனடியாக 1,000 கோடியை தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ஒதுக்கினார் என, தமிழ்நாடு மீதான மோடியின் மாற்றாந்தாய் மனப்பான்மைக்கு நியாயம் சொல்ல சிலர் வருகிறார்கள். ஆனால் புயல் தாக்குவதற்கு சுமார் 20 நாட்களுக்கு முன்பு தான் (29/04/2021) மாநில பேரிடர் நிவாரண நிதிக்கு சுமார் 529 கோடியை விடுவித்தது பாஜக அரசு. ஆக 1,000 கோடி ரூபாய் நிதி ஒதுக்கிய போது குஜராத் மாநில பேரிடர் நிதியில், மாநில பேரிடர் நிவாரண நிதி கையிருப்பில் இருந்தது என்பது தான் உண்மை.

துன்பப்படும் எல்லோருக்கும் துணை நிற்கிற தத்துவம் தான் திராவிட தத்துவம். எனவே நம்முடைய கேள்வி எல்லாம் குஜராத்திற்கு ஏன் நிதி ஒதுக்கினீர்கள் என்பது அல்ல, மாறாக அதையே முன் உதாரணமாகக் கொண்டு தமிழ்நாட்டிற்கு நிதி ஒதுக்கலாமே, அதை ஏன் மறுக்கிறீர்கள் என்பதுதான்.

### தொடரும் அநீதி

2015 - 2022 வரை 8 பெரிய பேரிடருக்கு நிவாரண நிதியாக தமிழ்நாடு அரசு கோரியது ரூ.1,27,655 கோடி, ஒன்றிய அரசு கொடுத்தது ரூ.5,844 கோடி, வெறும் 4.61%. 2023 ஆம் ஆண்டு பேரிடரையும் கணக்கில் கொண்டால் தமிழ்நாடு அரசு கோரியது ரூ. 1,49,347 கோடி, ஒன்றிய அரசு கொடுத்தது ரூ. 5,844 கோடி வெறும் 3.9%.

2023 - 2024 ஆம் ஆண்டுக்கான மாநில பேரிடர் நிவாரண நிதிக்கு ஒன்றிய அரசின் பங்குத்தொகை ரூ.19,572.80 கோடி. இதில் குஜராத்திற்கு ரூ.1,168 கோடி (6%) மத்திய பிரதேசத்திற்கு ரூ.1,605 கோடி (8.2%) உத்திர பிரதேசத்திற்கு ரூ.1,705 கோடி (8.71%) தமிழ்நாட்டிற்கு ரூ.900 கோடி (4.5%)

2014 முதல் 2023 வரை மாநில பேரிடர் நிவாரண நிதியாக குஜராத் அரசுக்கு வழங்கப்பட்ட தொகை ரூ. 7.192 கோடி. தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட்ட தொகை ரூ. 6,419 கோடி. 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி குஜராத்தின் மக்கள் தொகை ரூ. 6.03 கோடி, தமிழ்நாட்டின் மக்கள் தொகை ரூ. 7.21 கோடி.



**சூரியா கிருஷ்ணமூர்த்தி,**
கழக செய்தி தொடர்பாளர்

மக்கள் தொகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்தால் தமிழ்நாடு குஜராத்தை விட கூடுதல் நிதியை பெற வேண்டும். ஒவ்வொரு ஆண்டும் ஏற்படும் பேரிடர் பாதிப்புகளை அடிப்படையாகக் கொண்டால், இரண்டாவது நீளமான கடற்கரை பரப்பு, நூற்றாண்டில் 50க்கும் மேற்பட்ட பெரும் புயல்கள், கடந்த பத்து ஆண்டுகளில் தேசிய பேரிடர் நிவாரண நிதி அதிகம் தேவைப்பட்ட மாநிலம் ஆகியவற்றின் காரணமாக உத்தரப்பிரதேசம், மத்திய பிரதேசம் ஆகியவற்றை விட கூடுதலான நிதியை தமிழ்நாடு பெற வேண்டும். ஆனால் எதனை அடிப்படைக் கணக்கீடாகக் கொண்டாலும், தமிழ்நாடு குறைவான நிதியே பெறுகின்ற அநீதியான சூழல் தொடர்கிறது.

### மோடி அரசிடம் உள்ள நிவாரண நிதி வாய்ப்புகள்

ஒன்றிய அரசிடம் நிதி இல்லாத காரணத்தினால் தமிழ்நாடு அரசுக்கு கூடுதல் நிதி ஒதுக்க மறுக்கிறது என்றும் கருத இடமில்லை. பேரிடர் நிவாரணம் வழங்குவதற்காக மட்டும் மூன்று பிரதான நிதி வாய்ப்புகள் மோடி அவர்களிடம் உள்ளன.

1) **தேசிய பேரிடர் மேலாண்மை நிதி – இதற்கு 15 வது நிதி ஆணையம் ஒதுக்கீடு செய்த தொகை மட்டும் ரூ.54,770 கோடி.**
2) **பிரதமரின் தேசிய நிவாரண நிதி – பொதுமக்களின் பங்களிப்புடன் உருவாக்கப்படும் இந்த நிதிக்கு, 2021–22 நிதியாண்டில் மட்டும் ரூ.805.38 கோடி ரூபாய் மக்களால் வழங்கப்பட்டுள்ளது. அதில் ரூ.175.89 கோடி மட்டுமே பாதிப்புகளுக்கு நிவாரணமாக ஒன்றிய அரசால் வழங்கப்பட்டுள்ளது. 27/10/2022 அன்றைய கணக்கின்படி பிரதமரின் தேசிய நிவாரண நிதியில் ரூ.5,556.83 கோடி இருப்பு உள்ளது.**
3) **பி.எம்.கேர்ஸ் நிதி – ஒன்றிய அரசால் விளம்பரப்படுத்தப்பட்டு வசூல் செய்யப்பட்ட இந்த நிதி, அரசாங்கத்திற்கு சொந்தமானது அல்ல, தகவல் அறியும் உரிமைச் சட்டம் வரம்பிற்குள் வராது, மத்திய தலைமை கணக்குத் தணிக்கையால் (சிஏஜி) தணிக்கை செய்யவும் முடியாது என்று டெல்லி உயர்நீதி மன்றத்தில் ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது. ஆனால் கொரோனா பாதிப்பு தொடர்பாக இந்நிதியிலிருந்து நிவாரணம் வழங்கும் அறிவிப்பை மோடி அவர்களே வெளியிட்டார், அந்த வகையில் இதிலிருந்து அவரால் நிவாரணம் அளிக்க முடியும் என்பது வெளிப்படை. இந்நிதியிலும் மிகக்குறைந்தபட்சம் சிலநூறு கோடியேனும் நிதி இருக்கும்.**

ஆகவே பேரிடர் பாதித்த தமிழ்நாட்டிற்கு நிவாரண நிதி வழங்குவதற்கான பல்வேறு வாய்ப்புகளும் சூழலும் பிரதமர் மோடியிடம் உள்ளது, வழங்க வேண்டும் என்கிற மனது மட்டும் தான் இல்லை.

### மடைமாற்றும் உத்தி

இதையெல்லாம் மடை மாற்றுகிற வகையில், ஆய்வு செய்த பின்னர் தான் நிதி ஒதுக்குவார்கள் என்று மோடி அரசுக்கு வக்காலத்து வாங்கிக் கொண்டு வருகிறார் எடப்பாடி பழனிச்சாமி.

தமிழ்நாட்டில் காங்கிரஸ் ஆட்சி நடந்து கொண்டிருந்தபோது, நிதிக்குழு ஒதுக்கீட்டில் குறைந்தபட்சம் 1,000 கோடியாவது தமிழ்நாட்டிற்கு ஒதுக்கீடு செய்யுங்கள் என வலியுறுத்தினார் பேரறிஞர் அண்ணா.

2017 ஆம் ஆண்டு ஒக்கி புயல் தமிழ்நாட்டை தாக்கிய போது, 13,520 கோடி ரூபாயை நிவாரணமாக கோரியது அன்றைய அதிமுக அரசு. அரசு கோருகிற தொகையை உடனடியாக விடுவிக்க வேண்டும் என 28/12/2017 அன்று பேரிடர் பாதிப்பை ஆய்வு செய்ய வந்த பரமேஸ்வர் பாலி அவர்களின் தலைமையிலான குழுவுக்கு கடிதம் எழுதினார், அன்றைய எதிர்க்கட்சித் தலைவர் நம்முடைய கழகத் தலைவர் அவர்கள்.

2018 ஆம் ஆண்டு தமிழ்நாட்டை கஜா புயல் தாக்கிய போது ரூ.15,000 கோடி அளவிற்கு நிவாரணத் தொகை கோரியது அதிமுக அரசு. மாநில பேரிடர் நிவாரண நிதிக்கு வழங்க வேண்டிய தொகையில் ரூ. 354 கோடியை மட்டும் ஒதுக்கீடு செய்தது மோடி அரசு. அன்றைய அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் அவர்கள் இதனைக் குறிப்பிட்டபோது, ஒன்றிய அரசின் பாகுபாட்டை கண்டித்தவர் நம்முடைய கழகத் தலைவர் அவர்கள். தமிழ்நாட்டின் நலனுக்காக எல்லா நாளும், எல்லாச் சூழலிலும், உறுதியோடு நின்ற இயக்கம் நம்முடைய கழகம். அண்ணா பெயரில் கட்சி நடத்திக் கொண்டிருப்பவர்கள், இதையெல்லாம் உணர வேண்டும்.

### கணக்கு கேட்கும் அதிகாரம்

இந்த அநீதிகளை எல்லாம் மூடி மறைக்கும் வகையில் டெல்லியில் கூடக் குறைய ஒரு மணி நேரம் பத்திரிக்கையாளரை கூட்டி வைத்து, அரசியலையும் அவதூறையும் அள்ளி வீசி இருக்கிறார் ஒன்றியத்தின் நிதித்துறை அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் அவர்கள்.

தமிழ்நாடு அரசின் செலவுக்கு கணக்கு கேட்டிருக்கிறார். மாநில அரசு செலவு செய்யக்கூடிய ஒவ்வொரு ரூபாய்க்கும் தணிக்கை உண்டு, குறிப்பாக மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து செய்யப்படும் செலவுகள் அனைத்தும் மத்திய கணக்கு தணிக்கைக்கு (சிஏஜி) உட்படுத்தப்பட்டு, அதன் நகல் ஒன்றிய உள்துறை அமைச்சகத்திற்கும், ஒன்றிய நிதித்துறை அமைச்சகத்திற்கும் அனுப்பப்படும். இதனை பேரிடர் நிதிகள் குறித்து 2015 ஆம் ஆண்டு ஒன்றிய உள்துறை அமைச்சகம் வகுத்த வழிகாட்டி நெறிமுறைகள், பத்தி 32 தெளிவாக வரையறுக்கிறது.

இதனை எல்லாம் அறியாதவர் அல்ல அவர். அறிந்தும் கணக்கு கேட்கிறார் என்றால், அது தமிழ்நாட்டிற்கு தான் இழைத்திருக்கும் அநீதியை மறைப்பதற்கான உத்தியே அன்றி வேறில்லை.

### கடமை தவறும் ஒன்றிய நிதியமைச்சர்

பேரிடர் காலத்தில் ஒன்றியத்தின் நிதித்துறை அமைச்சர் ஆற்ற வேண்டிய கடமைகளில் முக்கியமானது, பேரிடர் பாதித்த பகுதிகளில் வாழும் பொது மக்களின் கடன் குறித்து எடுக்க வேண்டிய முடிவு.

பேரிடர் மேலாண்மை சட்டம் 2005 பிரிவு 13, பேரிடர் பாதித்த பகுதிகளில் பொதுமக்களின் கடன்களில் தள்ளுவு, சலுகை போன்றவற்றை வழங்குவது குறித்து தேசிய அளவிலான அமைப்பு முடிவெடுக்க வேண்டும் என வலியுறுத்துகிறது.

சென்னை வெள்ளத்தின் போது 37,00,000 குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், அவர்களது கடன்களில் தள்ளுபடி கூட அல்ல, மூன்று மாதம் தளர்வு வழங்க வேண்டும் என 14/12/2023 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஒன்றிய அரசுக்கு கடிதம் எழுதி வலியுறுத்தியுள்ளார்.

ஒன்றிய அரசும், ஒன்றிய நிதித்துறை அமைச்சரும் செய்ய வேண்டிய ஒரு கடமையை, முதலமைச்சர் அவர்கள் கடிதம் எழுதி வலியுறுத்திய பிறகும், இதுநாள் வரையில் அவர் செய்யவில்லை.

மாறாக வாழ்வாதாரம் மொத்தத்தையும் இழந்து, பேரிடரில் மக்கள் துடித்துக் கொண்டிருக்கும் போது, இதைப் பேரிடராக அறிவிக்கும் வழக்கம் இல்லை என டெல்லியில் இருந்து மக்கள் தலையில் இடியை இறக்குகிறார். தூத்துக்குடிக்கு வந்து பெருமாள் ஊர்வலத்திற்காக துடித்து நிற்கிறார்.

பேரிடர் காலத்தில் மக்களைக் காக்கிற கடமைகளையும் பொறுப்புகளையும் மாநிலங்களிடம் விட்டுவிட்டு, அதற்கு அடிப்படையான நிதி மூலதன வாய்ப்புகளை ஒன்றியத்தில் குவித்து வைத்துள்ள இந்தியக் கூட்டாட்சியின் முரணை, மோடி தொடர்ந்து பெரிதுபடுத்துகிறார். அதில் அதிக அநீதியை சந்திக்கும் மாநிலமாக இருக்கிறது தமிழ்நாடு.

பேரிடர் கால நிதி ஒதுக்கீட்டு அநீதிகளை மூடி மறைக்க, நிர்மலா சீத்தாராமனில் தொடங்கி எடப்பாடி பழனிசாமி வரையில் கண் துஞ்சாது பணியாற்றுகிறார்கள். எல்லா அநீதிகளையும் மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தவிர சொல்ல வேறு ஒன்றும் இல்லை.

## திண்டிவனத்தில் 'மக்களுடன் முதல்வர்' திட்ட முகாம்!

### அமைச்சர் செஞ்சி மஸ்தான் ஆய்வு!

*திண்டிவனம், டிச. 29 -*

திண்டிவனத்தில் நடைபெற்ற மக்களுடன் முதல்வர் திட்ட முகாமினை அமைச்சர் செஞ்சி மஸ்தான் பார்வையிட்டு பொதுமக்களிடம் இருந்து வரப்பெற்ற மனுக்கள் மீது அனைத்துத் துறை அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என அறிவுறுத்தினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவுப்படி தமிழ்நாட்டில் உள்ள பேரூராட்சி, நகராட்சிகளில் மக்களுடன் முதல்வர் என்ற மாபெரும் முகாம் நடைபெற்று வருகிறது.

விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் நகராட்சியில் 3ஆம் கட்டமாக 10,11, 20,21,22 ஆகிய வார்டுகள் சார்பில் மக்களுடன் முதல்வர் சிறப்பு குறை தீர்க்கும் முகாம் திண்டிவனத்தில் உள்ள தனியார் மண்டபத்தில் நடைபெற்றது. திண்டிவனம் நகர மன்ற தலைவர் நிர்மலா ரவிச்சந்திரன் தலைமையில் நகராட்சி ஆணையர் தமிழ்ச்செல்வி முன்னிலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு மக்களுடன் முதல்வர் என்ற மாபெரும் மக்கள் குறைதீர்க்கும் முகாமினை தொடங்கி வைத்தார்.

இதை தொடர்ந்து முகாமில் எரிசக்தி மற்றும் மின்சாரத்துறை, வருவாய், நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, காவல் மற்றும் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி துறை, சமூக நலன் உள்ளிட்ட துறையிலிருந்து அரசு அதிகாரிகள் பங்கேற்று பொதுமக்களிடமிருந்து வரப்பட்ட கோரிக்கை மனுக்கள் மீது கணினி மூலம் பதிவு செய்தனர்.

## நாகர்கோவிலில் 'மக்களுடன் முதல்வர்' திட்ட முகாம்!

### மாவட்டச் செயலாளர் - மேயர் ரெ.மகேஷ் கோரிக்கை மனுக்களைப் பெற்றார்!

*நாகர்கோவில், டிச. 29-*

நாகர்கோவில் மாநகராட்சி பகுதியில் 'மக்களுடன் முதல்வர்' திட்ட முகாமினை மாவட்டச் செயலாளர் -மேயர் ரெ. மகேஷ் துவக்கி வைத்து பொது மக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார்.

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி தமிழ்நாடு அரசால் தொடங்கப்பட்டுள்ள 'மக்களுடன் முதல்வர்' திட்ட முகாம் SERVICE DELIVERY @ DOOR STEPS என்ற திட்டம் தமிழ்நாடு அரசின் 13 துறைகளில் உள்ள சேவைகளுக்கு விண்ணப்பித்து 30 நாட்களில் மனுக்களுக்கு தீர்வு கிடைக்கும் வகையில், பொது மக்களின் கோரிக்கைகளுக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கும் பொருட்டு இத்திட்டம் தமிழ்நாடு அரசால் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இத்திட்டமானது 28.12.2023 நேற்று காலை கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட 34, 35, 36, 37 ஆகிய வார்டு பகுதியில் உள்ள பொது மக்களுக்கு நாகர்கோவில், இந்து கல்லூரி கலையரங்கத்தில் வைத்து நடைபெற்றது. கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ. மகேஷ் முகாமினை துவக்கி வைத்து பொது மக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார்.

முகாமில் நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் ஆனந்த் மோகன் உதவி ஆணையர் பாலசுந்தரம், மாநகராட்சி பொறியாளர் பாலசுப்பிரமணியம்,

நகரமைப்பு அலுவலர் வேலாயுதம், துணை மேயர் திருமதி.மேரி பிரின்சி லதா, வடக்கு மண்டல தலைவர் ஜவகர், துறை சார்ந்த அதிகாரிகள், மாநகராட்சி அதிகாரிகள், பொது மக்கள் உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## சேலம் - பெரியார் பல்கலை துணைவேந்தரின் தொடர்புடைய இடங்களில் போலீஸ் சோதனை!

### லேப்டாப்புகள், பென்டிரைவ் உள்ளிட்டவை பறிமுதல்!

*சேலம், டிச. 29 -*

சேலம் பெரியார் பல்கலைக்கழக துணை வேந்தர் தொடர்புடைய இடங்களில் 20 மணி நேரத்துக்கும் மேல் நீடித்த போலீஸ் சோதனை நிறைவடைந்துள்ளது.

சேலம் பெரியார் பல்கலைக்கழக துணைவேந்தர் ஜெகநாதன் பூட்டர் என்ற தனியார் அமைப்பை உருவாக்கி பல்வேறு முறைகேடு களில் ஈடுபட்டதாக எழுந்த புகாரை அடுத்து, ஜெகநாதன் கைது செய்யப்பட்டு நிபந்தனை ஜாமினில் விடுவிக்கப்ப ட்டார். சூலமங்கலம் காவல் உதவி ஆணையாளர் அலுவலகத்தில் தினந்தோறும் கையெழுத்து இடவேண்டும் என்ற நிபந்தனையுடன் விடுவிக்கப்பட்ட ஜெகநாதன், நெஞ்சுவலி என்று கூறி தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உள்ளார்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் மாலை சுமார் நான்கு முப்பது மணி அளவில் 50க்கும் மேற்பட்ட காவல்துறையினர் பெரியார் பல்கலைக்கழக துணைவேந்தர் இல்லம், அலுவலகம், பல்கலைக்கழக பதிவாளர் இல்லம் அலுவலகம் உள்ளிட்ட 7 இடங்களில் சோதனையை தொடங்கினர். சுமார் 20 மணி நேரம் நீடித்த சோதனை நிறை சோதனை நேற்று நிறைவடைந்தது.

சோதனையில் லேப்டாப்கள், ஹார்ட் டிஸ்க் மற்றும் பென்டிரைவ் உள்ளிட்ட டிஜிட்டல் சாதனங்கள் கைப்பற்றப்பட்டு காவல்துறை கட்டுப்பாட்டில் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

துணைவேந்தர், பதிவாளர் மற்றும் கணினி அறிவியல் துறை பேராசிரியர் அலுவலகங்களில் சோதனை மேற்கொண்டு அதனை முழுவதுமாக போலீசார் வீடியோ பதிவு செய்துள்ளனர். முறைகேட்டில் மேலும் பலருக்கு தொடர்பு இருப்பதால் அவர்களும் விசாரணை வளையத்திற்குள் கொண்டு வரப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.


**கோயம்புத்தூர் மாநகராட்சி**
கலைஞர் 100 1924 - 2023
பொறியியல் பிரிவு
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
மின்னணு ஒப்பந்தப்புள்ளி (e-tendering)
ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்.(e)84/2023 நாள் : 26.12.2023

| வ.எண். | பணியின் விபரம் | மொத்த பணிகளின் எண்ணிக்கை | ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலம் சமர்ப்பிக்கும் கடைசி நாள் மற்றும் நேரம் | ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் மாநகராட்சி அனைத்து மண்டலத்திற்குட்பட்ட மாநகராட்சி சாலைகளில் போக்குவரத்து பாதுகாப்பு குறியீட்டு பலகைகள் அமைத்தல் | 5 பணி | 18.01.2024 பிற்பகல் 3.00 மணி (As per the Server Clock) | 19.01.2024 மாலை 4.00 மணி (As per the Server Clock) |

மேலும் முழு விபரங்களுக்கு கீழ்கண்ட இணையதள முகவரி மூலம் தெரிந்து கொள்ளலாம். https://tntenders.gov.in ஆணையர், கோயம்புத்தூர் மாநகராட்சி, பெரிய கடை வீதி, டவுன்ஹால், கோயம்புத்தூர் - 1. தொலைபேசி எண். 0422 2396026. Email : commr.coimbatore@tn.gov.in

ஆணையாளர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி

வெ.ஆ.எண். 669/செ.ம.தொ.அ/கோவை/நாள் : 27.12.2023



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (28.12.2023) சென்னையில் உடல்நலக் குறைவால் மறைவெய்திய தேசிய முற்போக்கு திராவிட கழகத் தலைவர், கேப்டன் விஜயகாந்த் அவர்களின் இல்லத்திற்கு நேரில் சென்று அவரது உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகரராஜா மற்றும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் தலைவர் பூச்சி எஸ்.முருகன் ஆகியோர் உள்ளனர்.



தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் நிறுவனத் தலைவர் கேப்டன் விஜயகாந்த் அவர்களின் மறைவையடுத்து, கோயம்பேட்டில் வைக்கப்பட்டிருந்த அவருடைய உடலுக்கு கழக இளைஞர் அணிச் செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுதத்தி தே.மு.தி.க. பொதுச்செயலாளர் திருமதி.பிரேமலதா விஜயகாந்த் உள்ளிட்ட குடும்பத்தினர் மற்றும் அக்கட்சியின் நிர்வாகிகளுக்கு ஆறுதல் தெரிவித்தார்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் - கட்சித் தலைவர்கள் அஞ்சலி!

# தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் மறைவு!

### முழு அரசு மரியாதையுடன் இன்று உடல் அடக்கம் செய்யப்படுகிறது!

சென்னை, டிச. 29 -

தே.மு.தி.க., தலைவரும், நடிகருமான விஜயகாந்த் சென்னையில் நேற்று மறைவெய்தினார். அவரது இறுதி சடங்குகள் இன்று மாலை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மறைந்த விஜயகாந்த் உடலுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார். கட்சித் தலைவர்களும் அஞ்சலி செலுத்தினர்.

மேலும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தயாநிதிமாறன் எம்.பி., ஆகியோரும் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினர்.

தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் உடல் நலக்குறைவால் சில ஆண்டுகளாக வீட்டிலேயே ஓய்வில் இருந்து வந்தார். சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்யப்பட்டதால், அவ்வப்போது மருத்துவமனைக்குச் சென்று பரிசோதனைகளை மேற்கொண்டு வந்தார். வீட்டில் ஓய்வில் இருந்த விஜயகாந்துக்கு இருமல், காய்ச்சல் ஏற்பட்டதால் கடந்த மாதம் 18 ஆம் தேதி சென்னை மணப்பாக்கத்தில் உள்ள மியாட் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். பின்னர், உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டதால், கடந்த 12 ஆம் தேதி வீடு திரும்பினார்.

அதன்பின்னர், மீண்டும் உடல்நலக் குறைவு ஏற்பட்டதை தொடர்ந்து, கடந்த செவ்வாய்க்கிழமை, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட விஜயகாந்துக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டது. இதன் காரணமாக விஜயகாந்திற்கு செயற்கை சுவாசம் அளிக்கப்பட்டது.

இந்நிலையில், நேற்று காலை சிகிச்சை பலனின்றி விஜயகாந்த் உயிரிழந்ததாக மருத்துவமனை அறிவித்தது. மருத்துவமனையில் இருந்து விஜயகாந்தின் உடல் அவருடைய சாலிகிராமம் வீட்டிற்கு எடுத்துச் செல்லப்பட்டது. திரையுலகினர், பொதுமக்கள் மற்றும் அரசியல் கட்சியினர் அவரது உடலுக்கு அஞ்சலி செலுத்தினர். இதைத்தொடர்ந்து விஜயகாந்தின் உடல் பொதுமக்களின் அஞ்சலிக்காக கோயம்பேட்டில் உள்ள தே.மு.தி.க. கட்சி அலுவலகத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. அங்கு ஏராளமானோர் திரண்டு வந்து விஜயகாந்த் உடலுக்கு அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.




விஜயகாந்த் உடல் இன்று மாலை 4.30 மணியளவில் நல்லடக்கம் செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. கோயம்பேட்டில் உள்ள தே.மு.தி.க அலுவலகத்தில் விஜயகாந்த் உடல் அடக்கம் செய்யப்படும் என்று அவரது மைத்துனர் சுதீஷ் தெரிவித்துள்ளார்.

**முத்தமிழறிஞர் கலைஞர் மீது தனி பாசம் கொண்ட விஜயகாந்த்!**

முத்தமிழறிஞர் கலைஞர் மீது விஜயகாந்துக்கு எப்போதும் தனி அன்பு இருந்துள்ளது. கலைஞரின் கலையுலகப் பொன்விழாவைப் பாராட்டி, திரையுலகின் சார்பில் மாபெரும் விழா எடுத்து, தங்கப் பேனாவை பரிசாக அளித்தவர் விஜயகாந்த்.

1987ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞரின் கதை, வசனத்தில் வெளியான "வீரன் வேலுத்தம்பி" படத்தில் காவல்துறை அதிகாரியாக நடித்திருந்தார் விஜயகாந்த்...

பின்னர், 1988ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் வசனத்தில் "மக்கள் ஆணையிட்டால்" என்ற படத்தில் கதாநாயகனாக நடித்தார் விஜயகாந்த் .....

1989ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞரின் கதை, வசனத்தில் வெளியான "பொறுத்தது போதும்" திரைப்படத்திலும் நடித்திருந்தார் விஜயகாந்த்...

முத்தமிழறிஞர் கலைஞர் மீது என்றென்றும் தனிப்பாசம் கொண்ட விஜயகாந்த், திருமணம் உள்ளிட்ட குடும்ப நிகழ்வுகளை முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையில் நடத்தினார். 1996 ஆம் ஆண்டு நடிகர் சங்கத் தலைவராக இருந்த விஜயகாந்த், மெரினா கடற்கரையில் கலைஞரின் கலையுலகப் பொன்விழாவைப் பாராட்டி, திரை யுலகின் சார்பில் மாபெரும் விழா எடுத்து, தங்கப் பேனாவை பரிசாக அளித்தார்.

முத்தமிழறிஞர் கலைஞர் உடல் நலன் குன்றியிருந்தபோது, நேரில் வந்து உடல்நலன் விசாரித்து சென்றதுடன், கலைஞர் மறைவின் போது வெளிநாட்டில் இருந்த விஜயகாந்த், கண்ணீர் மல்க காணொலி அனுப்பி தனது இரங்கலை தெரிவித்திருந்தார். வெளிநாட்டில் இருந்து திரும்பியதும் விமான நிலையத்திலிருந்து நள்ளிரவில் நேராக கலைஞரின் ஓய்விடம் சென்று தனது வணக்கத்தை செலுத்தினார்.

### பொது வாழ்வில் எளிமையை கடைப்பிடித்தவர்!

# தே.மு.தி.க. தலைவர் கேப்டன் விஜயகாந்த் மறைவு!

### தமிழ்நாடு விவசாயிகள் - தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் இரங்கல் செய்தி!



சென்னை, டிச. 29-

தமிழ்நாடு விவசாயிகள் - தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

கேப்டன் என்று எல்லோராலும் அன்போடு அழைக்கப்படும் தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் அவர்களின் மறைவு செய்தி பேரதிர்ச்சியை அளிக்க கூடிய ஒன்றாகும். நீண்ட நாட்களாக உடல்நிலை பாதிப்பு கொண்டு இருந்தாலும் அவர் மீண்டு வருவார் என்று எல்லோரும் நம்பிக் கொண்டிருந்த நிலையில் அவர் மீளாதூரத்திற்குச் சென்று விட்டார். அவரது மறைவு திரையுலகத்திற்கும் தமிழ்நாட்டிற்கும் ஒரு மாபெரும் இழப்பாகும்.

நடிகராக இருந்த விஜயகாந்த் அவர்கள் அரசியல்வாதியாக மாறி குறுகிய காலத்தில் அரசியலில் உச்சத்தைத் தொட்டவர். கலைத்துறையாக இருந்தாலும், பொதுவாழ்வாக இருந்தாலும் நேர்மையையும், எளிமையையும் கையாண்டவர். அதைத் தாண்டி எல்லோருக்கும் உதவக்கூடிய மனநிலையைப் பெற்றவர். திரையுலகில் எவ்வளவு உச்சத்தை தொட்டு இருந்தாலும் சாமான்ய மக்களோடு நெருக்கமாக பழகக் கூடியவர். எல்லோருடைய துன்பங்களிலும் நேரடியாக பங்கு கொள்ளக் கூடியவர். அதை போக்குவதற்கு முயன்றவர். உள்ளொன்று வைத்து புறம் ஒன்று பேசாதவர். அதனால் தான் குறுகிய காலத்தில் தமிழக மக்கள் அவரை ஒரு அரசியல் தலைவராக ஏற்றுக் கொண்டு மிகப்பெரிய வாய்ப்பு அளித்தனர். தமிழ்நாட்டு அரசியலில் எதிர்க் கட்சித் தலைவர் என்ற பெரிய அந்தஸ்தை பெற்றவர்.

2016 ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டப்பேரவை தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழக தலைவர் கலைஞர் அவர்கள் தே.மு.தி.க., தி.மு.க.வோடு தேர்தல் உடன்பாடு கொள்ள வேண்டும் என்று விரும்பினார். ஆனால் அவர் வேறு முடிவு எடுத்து விட்டார் அல்லது வேறு முடிவு எடுக்க வைத்து விட்டார்கள். அதனுடைய விளைவாக அவர் அரசியலில் வெற்றியை இழந்தார். அதனால் அவர் மனநிலையும் உடல்நிலையும் பாதித்தது. அதிலிருந்து அவர் மீளாமல் போய்விட்டார். 2016 ஆம் ஆண்டு அவர் தி.மு.க.வோடு கூட்டணி என்ற முடிவை எடுத்திருந்தால், தமிழ்நாட்டில் அவர் அதிக உச்சத்தை அரசியலில் தொட்டிருப்பார்.

இப்படிப்பட்ட சிறந்த பண்புகளுக்குச் சொந்தக்காரர், பொது வாழ்க்கையில் எளிமையை கடைப்பிடித்தவர், அனைவருக்கும் உதவ வேண்டும் என்ற குணம் கொண்டவர். அவருடைய மறைவு திரை உலகத்திற்கும், தமிழ்நாட்டிற்கும் மாபெரும் இழப்பாகும். அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தாருக்கும், தே.மு.தி.க. கட்சியினருக்கும் ஆழ்ந்த அனுதாபத்தை விவசாயிகள் - தொழிலாளர்கள் கட்சி தெரிவித்துக் கொள்கிறது. விஜயகாந்த் அவர்களின் மறைவிற்கு இரங்கலை விவசாயிகள் - தொழிலாளர்கள் கட்சித் தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



திருவொற்றியூரில் கழக மாநில மீனவரணி சார்பில் 19ஆம் ஆண்டு சுனாமி நினைவு நாளை முன்னிட்டு அமைதிப் பேரணியாகச் சென்று பெண்கள், பால்குடம் ஏந்தி கடலுக்குச் சென்று மாநில மீனவரணி துணை தலைவர், கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. தலைமையில், கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி கலந்து கொண்டு கடலில் பால் ஊற்றி அஞ்சலி செலுத்திய பின்னர், 3000 மீனவர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட கழகச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ., கலாநிதி வீராசாமி எம்.பி., மாநில மீனவரணி துணை செயலாளர் தம்பிதுரை, தலைமை செயற்குழு உறுப்பினர் வி.ராமநாதன் 5வது வார்டு மாமன்ற உறுப்பினர், வட்ட கழக செயலாளர் கே.பி. சொக்கலிங்கம், இரா. முருகேசன், எம். எஸ். நாகலிங்கம், இ. ரமேஷ், துர்காகோ தண்டம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### பூ.க.செல்வமணி தலைமை! விழுதுகள் நண்பர்கள் கூட்டமைப்பு சார்பில்


# எழுத்தாளர் இளவேனில் - 3-ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்ச்சி!

### டி.கே.எஸ்.இளங்கோவன் - முன்னணியினர் பங்கேற்பு!

சென்னை, டிச.29-

விழுதுகள் நண்பர்கள் நல கூட்டமைப்பு சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் உளியின் ஓசை திரைப்படத்தை இயக்கிய இயக்குநர், எழுத்தாளர் இளவேனில் அவர்களின் 3-ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சி புகழுஞ்சலி கூட்டம் 2.1.2024- செவ்வாய்க்கிழமை அன்று மாலை 5 மணிக்கு, செ.தெ.நாயகம் தியாகராயர் மேனிலைப்பள்ளி வெங்கட நாராயணா சாலை, தியாகராயர் நகரில் நடைபெறுகின்றது.

நிகழ்ச்சிக்கு, விழுதுகள் நண்பர்கள் கூட்டமைப்பின் நிறுவனத்தலைவர் வழக்கறிஞர் நிலவு பூ.க.செல்வமணி தலைமை வகிக்கிறார்.



கூட்டமைப்பின் பொதுச்செயலாளர் ச.சண்முகநாதன், கொரஞ்சூர் எஸ்.முனுசாமி ஆகியோர் வரவேற்றுப் பேசுகின்றனர்.

சமூக ஆர்வலர் க.ரா. இராசசேகர், பத்திரிகையாளர் ம.மு.தமிழ்ச்செல்வன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் கழக செய்தித் தொடர்புத் தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், தி.மு.க. மாநில இலக்கிய அணி இணைச் செயலாளர் நந்தனம் ச.நம்பிராஜன், எழுத்தாளர் வைகறை வாணன், திராவிடர் கழக அமைப்புச் செயலாளர் அ.பன்னீர்செல்வம், புதிய குரல் நிறுவனர் ஓவியா, முனைவர் ஜெ. வி.மோகன கிருஷ்ணன், இயக்குநர் அஜயன் பாலா, பத்திரிகையாளர் வீ.பா. கணேசன், எழுத்தாளர் மெ.உலகநாதன், சென்னை தெற்கு மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை மாவட்ட துணை அமைப்பாளர் ஓ.சுந்தரம், மக்கள் ஜனநாயகப் பேரவை அமீன் கார்க்கி, வழக்கறிஞர் அ.திலிபன் ஆகியோர் புகழுரையாற்றுகின்றனர்.

திருமதி. பாக்கியலட்சுமி, சிந்தன் இளவேனில், திருமதி. சுபா. இளவேனில் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.



காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர் தொகுதிக்குட்பட்ட, சாலவாக்கம், நெய்யாடிவாக்கம் ரெட்டமங்களம் ஆகிய ஊராட்சிகளில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் பயிலும் 277 மாணவர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளை மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. வழங்கினார் இந்நிகழ்ச்சியில் தலைமை ஆசிரியர்கள், ஒன்றிய கழகச் செயலாளர் தி.குமார். ஊராட்சி மன்ற தலைவர்கள் சத்யாசக்திவேல், ஜெ.சுஜாதா ஜெயராமன், சு.பொன்மொழி சுபாஷ் , மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் கோ. சிவராமன், அறங்காவலர் குழு உறுப்பினர் எஸ்.ஆர்.வெங்கடேசன், ஒன்றிய குழு உறுப்பினர்கள் அன்புராஜ் , கல்யாணசுந்தரம், நதியா கோபி, சேகர், ஒன்றிய கழக நிர்வாகிகள்டி..தமிழ்வேந்தன், ஞானசேகரன், சுஜாதா ஜெயராமன், பி.வி.. பாலமுருகன், இரத்தினமாலா, முரளிதரன், சந்திரன், பி.வி. அழகப்பன், சண்முகம், சந்தானம், செ. விஷ்ணு, ஈ.நந்தா, க.வெங்கட்ராமன், செயலறிஞன், அருண்பிரசாந்த், அரவிந்தன், அஜய் மற்றும் ஆசிரியை உள்ளாட்சி பிரதிநிதிகள், கிளை கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**எம்.பி. முனுசாமி**

**டிசம்பர் 29 (2016)**



**கழகக் கொள்கைகளில் ஈடுபாடு கொண்டு கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.**

**ஒன்றுபட்ட தருமபுரி மாவட்ட அவைத்தலைவராகப் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**1980ல் பாலக்கோடு சட்டமன்றத் தொகுதியில், கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று பணியாற்றி, அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.**

**ஊராட்சி மன்றத் தலைவராகவும், விவசாய வேளாண்மை கூட்டுறவு சங்கத் தலைவராகவும், தருமபுரி மாவட்ட கூட்டுறவு சர்க்கரை ஆலை இயக்குநராகவும், நிலவள வங்கி இயக்குநராகவும் பதவி வகித்தவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.**

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**



‘உடன்பிறப்புகளாய் இணைவோம்! தமிழர்களாய் தலைநிமிர்வோம்’ புதிய உறுப்பினர்கள் சேர்க்கையைத் திருச்சி தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட திருச்சி கிழக்கு, திருவெறும்பூர், மணப்பாறை ஆகிய மூன்று சட்டமன்ற தொகுதிகளிலும் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் பலனாக திருச்சி தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட இளைஞர்களும், பொது மக்களும் கழகத்தில் தங்களை உடன்பிறப்புகளாய் இணைத்துக் கொண்டார்கள். அவர்களுக்கான உறுப்பினர் அட்டைகளை மாவட்ட செயலாளரும் அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி, கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, துணை மேலாளர் ஜெயக்குமார் ஆகியோரிடமிருந்து பெற்றுக் கொண்டார் .



புதுடெல்லி டாக்டர் அம்பேத்கர் சர்வதேச மைய வளாகத்தில் நேற்று முன்தினம் (27.12.2023) ஒன்றிய சமூகநீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை அமைச்சர் வீரேந்திர குமார் தலைமையில் நடைபெற்ற மாற்றுத் திறனாளிகள் உரிமைகள் சட்டம் 2016–ன் கீழ் அமைக்கப்பட்ட மத்திய ஆலோசனை வாரியத்தின் 6–வது கூட்டத்தில் தமிழ்நாடு அரசின் சார்பில், வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் கலந்து கொண்டு உரையாற்றினார். இக்கூட்டத்தில் மாற்றுத் திறனாளிகள் நலத்துறை அரசு செயலாளர் திருமதி ஜெயஸ்ரீ முரளிதரன் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### படப்பை ஆ.மனோகரன் தலைமை! குன்றத்தூர் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா! இருதய பரிசோதனை - மருத்துவ முகாம்!

### கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு - அமைச்சர் தா.மோ.அன்பரசன் துவக்கி வைக்கின்றனர்!

காஞ்சிபுரம், டிச. 29-

காஞ்சிபுரம் மாவட்டம் ஊராட்சி குழு தலைவர் - குன்றத்தூர் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் படப்பை மனோகரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் குன்றத்தூர் தெற்கு ஒன்றியத்தில் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு குன்றத்தூர் தெற்கு ஒன்றிய திமுக படப்பை ஊராட்சி திமுக மற்றும் பார்வதி மருத்துவமனை (குரோம்பேட்டை) இணைந்து நடத்தும் துப்புரவு பணியாளர்கள் தூய்மை பணியாளருக்கான இருதய பரிசோதனை மருத்துவ முகாம் இன்று (29.12.2023 - வெள்ளிக் கிழமை) சி.என்.சி.மஹால் படப்பையில் காலை 9.00 மணியளவில் காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழு தலைவர், குன்றத்தூர் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் படப்பை ஆ.மனோகரன் தலைமையில் நடைபெறுகிறது.

இந்நிகழ்வில் படப்பை ஊராட்சி மன்ற தலைவர் எஸ்.கர்ணன் வரவேற்புரையாற்றுகிறார். இருதய பரிசோதனை மற்றும் மருத்துவ முகாமினை கழகப் பொருளாளரும் நாடாளுமன்ற குழு தலைவருமான டி.ஆர்.பாலு, காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர், சிறுகுறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் துவக்கி வைக்கிறார்கள்.

இதில் குன்றத்தூர் ஒன்றிய குழு தலைவர் சரஸ்வதி மனோகரன், படப்பை முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் பத்மா மாணிக்கம், மலர் மோகன், சு.பூங்காவனம், க.பா.ஆடலரசு, மல்லிகா நடராஜன், ஏழுமலை ஆர் ரகு, குமுதா சசிகுமார் செல்விகுப்பன், சுந்தரி, குமார் ஆர்.சிவாஜி, ஆர்பி. விஜயகணேஷ், குமார், சீனிவாசன், பார்த்திபன், வீரபத்திரன், முரளி, வேணுகோபால், சுரேஷ், குருநாதன், பிரேம கன்னியப்பன் வீரபத்திரன், பாபு, கருணாநிதி, பொ.மனோகரன் வீரபாண்டியன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொள்ள உள்ள முகாமிற்கு குன்றத்தூர் தெற்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் மாவட்ட ஒன்றிய அணிகளின் நிர்வாகிகள் கிளைக் கழக நிர்வாகிகள் இளைஞரணி, மாணவரணி, மகளிர் அணியினர் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி தலைவர் குன்றத்தூர் தெற்கு ஒன்றிய செயலாளர் படப்பை ஆ.மனோகரன், தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. தலைமை! திருவொற்றியூரில் சுனாமி நினைவு நாள் அமைதிப் பேரணி!

# 3000 மீனவர்களுக்கு நலத்திட்ட உதவிகள் - ஆர்.எஸ்.பாரதி வழங்கினார்!

### மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ.- கலாநிதி வீராசாமி எம்.பி. - தம்பிதுரை - வி.ராமநாதன் பங்கேற்பு!

சென்னை, டிச. 29 -

திராவிட முன்னேற்றக் கழக மாநில மீனவரணி சார்பில் சுனாமி ஆழிப் பேரலையில் சிக்கி உயிர் நீத்த மீனவ சொந்தங்களின் நினைவை போற்றும் வகையில் மாநில மீனவரணி துணை தலைவர், திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி. சங்கர் தலைமையில் பெண்கள் பால்குடம் ஏந்தி அமைதிப் பேரணி கே.வி.கே.குப்பம் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் அருகில் இருந்து புறப்பட்டு ஊர்வலமாக கடலுக்குச் சென்று பால் ஊற்றி மரியாதை செலுத்தினர்.

கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள் கலந்து கொண்டு அமைதி ஊர்வலத்தை துவக்கி வைத்து அஞ்சலி செலுத்தினார்.

அதனை தொடர்ந்து மாநில மீனவரணி துணை தலைவர், திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி. சங்கர் ஏற்பாட்டில் 5வது வட்ட மன்ற உறுப்பினர், வட்ட கழக செயலாளர் கே.பி. சொக்கலிங்கம் வரவேற்பில், தலைமை செயற்குழு உறுப்பினர் வி. ராமநாதன், இரா. முருகேசன், எம். எஸ். நாகலிங்கம், இ.ரமேஷ், துர்கா கோதண்டம் முன்னிலையில் 3000 மீனவர்களுக்கு நலதிட்ட உதவிகளை கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி வழங்கினார்.

மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம், வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர்.கலாநிதி வீராசாமி ஆகியோர் கலந்து கொண்டு மலர்தூவி அஞ்சலி செலுத்தினர்.

இந்நிகழ்ச்சியில் கழக பொதுக்குழு உறுப்பினர் வி.இராமநாதன், கழக செயற்குழு உறுப்பினர் இரா.முருகேசன், 5வது வட்ட மாமன்ற உறுப்பினர் கே.பி.சொக்கலிங்கம், முன்னாள் பகுதி துணைச் செயலாளர் இ.ரமேஷ், வட்டச் செயலாளர்கள் இரா. சந்தர், ஏகா.கார்த்திகேயன், மு.மாணிக்க வேலவன், மாவட்டப் பிரதிநிதிகள் கே.கார்த்திகேயன், பி.எஸ்.சைலேஷ், எஸ். மகேந்திரன், சந்தான கிருஷ்ணன், எத்திராஜ், மாமன்ற உறுப்பினர்கள் சாமுவேல் திரவியம், பானுமதி சந்தர், கோமதி சந்தோஷ்குமார், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர்.டி. மதன்குமார், மாவட்ட அயலக அணி தலைவர் எஸ்.டி.சங்கர், துணை செயலாளர் எம். கார்த்திக், டைட்டஸ், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் கு.தமிழ் மணி, மாவட்ட சுற்றுச் சூழல் அணி பா.பால உமாபதி, மாவட்ட வர்த்தகரணி பிரட் சுரேஷ், மாவட்ட ஆதிதிராவிடர் அணி ஜெகன், திருவள்ளூர் மாவட்ட சிறுபாண்மை அணி அமைப்பாளர் பழவை அலவி, சென்னை வடகிழக்கு மாவட்ட மீனவரணி துணை அமைப்பாளர் சென்னை வடக்கு மாவட்ட மீனவரணி துணை அமைப்பாளர் எஸ்.கே.இளங்கோ, தொண்டரணி மாவட்ட துணை அமைப்பாளர் மணலி எழில், பண்ணை சந்திரசேகர், கொசப்பூர் ரவிச்சந்திரன், புழல் ஜெகதீசன், தலைமை கழக பேச்சாளர்கள் வாசு கருணாநிதி, எழும்பூர் கோபி, டைலர் மணி, வி.கே.ஏழுமலை, ம.தி.மு.க. ரகுநாத், விடுதலைச் சிறுத்தைகள் ஜான் அலெக்ஸ்,

தொ.மு.ச திட்ட செயலாளர்கள் கே.தேசிங்கு, தொ.மு.ச திட்ட செயலாளர் டி.அல்லிமுத்து, இளங்கோ, எஸ்.கே.ராஜ், கலை கே.சரவணன், தேவராஜ், வசந்த் ராஜ், மகளிர் தொண்டர் அணி கே.புனிதா, சி.சந்திரலேகா, பி.ஹேமலதா, ராதா தங்கவேல், ஜெயா, எம்.தயாநிதி, ஆர்.பாலச்சந்தர்

பகுதி மீனவர் அணி எஸ்.செல்வம், கே.எஸ். ஆனந்தன், முத்துராஜ், கருணாநிதி, 5வது வட்ட துணை செயலாளர் ரமேஷ், செந்தில், எஸ். விஜயராகவன், தாழங்குப்பம் குமரன், நெட்டுக்குப்பம் சந்துரு, சின்ன எர்ணாவூர் சார்லஸ், அந்தோணி, கோவிந்தசாமி, பி.டி.சி. இப்ரகிம் பாய், லோகநாதன், சண்முகம், மணலி ராஜசேகர், சாலை சுரேஷ், மாரியப்பன், சுகுமாரன், ராஜா, தயாளன், விஜயன், தேவேந்திரன், சந்திரகாந்த், கபடி குமார், போட்டோ செந்தில், கோபிகிருஷ்ணா, அன்பு செல்வம், ஜோசப், கழகத் தோழர்கள், பொதுமக்கள் கள் திரளாக கலந்து கொண்டு புகழஞ்சலி செலுத்தினர்.



திருவள்ளூர் மாவட்டம் பூவிருந்தவல்லி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட செம்பரம்பாக்கம் ஊராட்சி தொடக்க பள்ளி வளாகத்தில் பொது சுகாதார மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை சார்பாக முத்தமிழறிஞர் கலைஞரின் வருமுன் காப்போம் திட்டம் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி மருத்துவ முகாமை துவக்கி வைத்து பயனாளிகளுக்கு மருத்துவ பொட்டலங்களை வழங்கினார். அருகில் ஒன்றிய செயலாளர் ப.ச.கமலேஷ், பொது குழு உறுப்பினர் வி.குமார், வட்டார மருத்துவ அலுவலர் பிரதிபா மருத்துவ ஆய்வாளர்கள் வடிவேல், விஜயகுமார், மாவட்ட கவுன்சிலர் ஏஜி.ரவி, ஒன்றிய கவுன்சிலர் பிரியா செல்வம், ஏ.ஜனார்த்தனன், புகழேந்தி, ஏ.ஆர்.பாஸ்கர், டி.குமரேசன், வி.தணிகாசலம், எம்.ராம்பாபு, சாய்மோகன், ஜி.கே.குமார், ராஜாமணி, கே.பி.ஞானமூர்த்தி, எம்.ராதாகிருஷ்ணன், விநாயகம், ஸ்ரீதர், முரளி, சாரங்கன், மனோஜ்குமார், உள்பட பலர் கலந்து கொண்டார்கள்.

### மாற்றுத் திறனாளிகள் உரிமைகள் சட்டம் –

# மத்திய ஆலோசனை வாரியத்தின் 6வது கூட்டம்!

## புதுடெல்லியில் நடைபெற்றது!

புதுடெல்லி, டிச. 29–

மாற்றுத்திறனாளிகள் உரிமைகள் சட்டம் – 2016–ன் கீழ் அமைக்கப்பட்ட மத்திய ஆலோசனை வாரியத்தின் 6–வது கூட்டம் புதுடெல்லியில் நேற்று முன்தினம் நடைபெற்றது. அமைச்சர் மதிவேந்தன் பங்கேற்றார்.

மாற்றுத்திறனாளிகள் நலனுக்காகவும், அவர்களின் உரிமைகளை பாதுகாக்கவும் மாற்றுத் திறனாளிகள் உரிமைகள் சட்டம், 2016 ஆம் ஆண்டு முதல் செயல்பாட்டில் உள்ளது. இச்சட்டத்தின் செயல்பாடுகளை கண்காணிக்கவும், ஒன்றிய அரசிற்கு உரிய ஆலோசனை வழங்கவும், மத்திய ஆலோசனை வாரியம் அமைக்கப்பட்டு, கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்த மத்திய ஆலோசனை வாரியத்தின் 6 வது குழுக்கூட்டம் புதுடெல்லி டாக்டர் அம்பேத்கர் சர்வதேச மைய வளாகத்தில் நேற்று முன்தினம் (27.12.2023) ஒன்றிய சமூகநீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சர் வீரேந்திரகுமார் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. தமிழ்நாட்டில், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையை நிர்வகிக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சார்பாக, வனத் துறை அமைச்சர் மருத்துவர் மதிவேந்தன் மற்றும் மாற்றுத் திறனாளிகள் நலத்துறையின் அரசு செயலாளர் ஜெயஸ்ரீ முரளிதரன் மற்றும் துறை உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

கடந்த கூட்டத்தின் தீர்மானங்களின் மீது ஒன்றிய மற்றும் மாநில அரசுகள் மேற்கொண்ட நடவடிக்கை களுடன், மாற்றுத்திறனாளிகள் நலன் குறித்த தேசிய கொள்கை, மாற்றுத்திறனாளி கள் உரிமைகள் சட்டத்தில் வலியுறுத்தப்பட்ட ஆலோசனைக் குழு அமைத்தல், சட்டவிதிகள் இயற்றுதல், தடையற்ற சூழல் அமைத்தல், மாற்றுத்திறனாளிகளுக்கு மாதாந்திர உதவித்தொகை வழங்குதல், மருத்துவ சான்றிதழுடன் கூடிய தனித்துவம் வாய்ந்த அடையாள அட்டை வழங்குதல் (UDID Card), மாற்றுத்திறனாளிக்கான இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் உகந்த பணியிடங்கள் கண்டறிந்து வேலை வாய்ப்பு வழங்குதல் போன்ற பொருள்கள் மீது ஒன்றிய மற்றும் மாநில அரசுகள் மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றி ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய வழிகாட்டுதலில் மாற்றுத் திறனாளிகளின் நலனுக்காக தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வரும் முன்னோடி திட்டங்களின் நிலையினை அமைச்சர் எடுத்துரைத்தார். மாற்றுத்திறனாளிகளின் உரிமைகளை காக்கும் வகையில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பொறுப்பிலேயே மாற்றுத் திறனாளிகள் நலத் துறையினை நிர்வ கித்தும், மாற்றுத் திறனாளிகளின் நல்வாழ்விற்காக தனியாக ஆணையரை நியமித்தும், மாற்றுத்திறனாளிகள் நலவாரியம் மற்றும் ஆலோசனை வாரியங்களை அமைத்தும், மாற்றுத்திறனாளிகளின் பராமரிப்பு உதவித்தொகையினை ரூ.1,500/–லிருந்து ரூ.2,000/– ஆக உயர்த்தியும், மாற்றுத்திறனாளிகளின் மாதாந்திர உதவித் தொகையை ரூ.1,000/–லிருந்து ரூ.1,500/– ஆக உயர்த்தியும், வருமான வரம்பின்றி அனை வருக்கும் நவீன உதவி உபகரணங்கள் வழங்கியும், தன்னார்வ தொண்டு நிறுவனங்களில் பணிபுரியும் சிறப்பு ஆசிரியர்கள் மற்றும் மறுவாழ்வு பணியாளர்களுக்கு மதிப்பூதியம் ரூ.18,000/– ஆக உயர்த்தியும், உணவீட்டு மானியத்தை ரூ.1200/– ஆக உயர்த்தியும், மனநலம் பாதிப்படைந்தோருக்கு தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம், பாதுகாப்பு மற்றும் மருத்துவ சிகிச்சையுடன் கூடிய மறுவாழ்வு திட்டம் செயல்படுத்தியும், மேற்கொண்ட பல்வேறு சாதனைகளை பற்றி எடுத்துரைத்து, மாற்றுத் திறனாளிகள் நலனில் முன்னோடி மாநிலமாக தமிழ்நாடு அரசு செயல்பட்டு வருவதை அமைச்சர் விளக்கினார்.

”எல்லோருக்கும் எல்லாமும் கிடைக்க வேண்டும் என்ற முதலமைச்சர் அவர்களின் தொலை நோக்குப் பார்வையின் படி, தமிழ்நாட்டில் ஒரு மாற்றுத்திறனாளியும் விடுபடக் கூடாது என்ற நோக்குடன், ”உரிமைகள் திட்டம் செயல்படுத்தப்படுகின்றது. இதனைப் பற்றியும் இக் கூட்டத்தில் எடுத்துரைக்கப்பட்டது.

தடையற்ற சூழல் அமைக்க ஒன்றிய அரசு வழங்க வேண்டிய நிலுவைத் தொகை ரூ.33 கோடியினை விடுவிக்கவும், 63,000 பயனாளிகளுக்கு மட்டும் ஒன்றிய அரசால் வழங்கப்படும் இந்திரா காந்தி ஊனமுற்றோர் உதவித்தொகையான தலா ரூ.300/– ஐ மேலும் 5.17 இலட்சம் பயனாளிகளுக்கும் நீட்டிக்கவும், தமிழ்நாடு அரசு தற்போது வழங்கி வரும் மாற்றுத்திறனாளிகள் உதவித்தொகை ரூ.1,500/– ஐ முழுவதும் 5.8 இலட்சம் பயனாளிகளுக்கு ஒன்றிய அரசு வழங்கவும், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் செயல்படுத்தப் படும் DDRS மற்றும் DDRC போன்ற திட்டங்களுக்கான நிதியினை உடனுக்குடன் வழங்கவும், தமிழ்நாட்டில் உள்ளது போல், ஒன்றிய அரசும் மாற்றுத்திறனாளிகளின் விருப்பத்திற்கு ஏற்ப உதவி உபகரணங்கள் வழங்கவும் தமிழ்நாடு அரசின் சார்பில் ஒன்றிய அரசிற்கு கோரிக்கைகள் வைக்கப்பட்டன.



திருவள்ளூர் மாவட்டம் ஆவடி தொகுதிக்குட்பட்ட ஆவடி மாநகராட்சி பகுதிகளில் 9 வார்டுகளில் ரூபாய் 4 கோடி மதிப்பீட்டில் புதிய நகர்ப்புற சுகாதார நிலையம் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் கட்டுவதற்காக துவக்க விழா நடைபெற்றது. இதில் முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ அடிக்கல் நாட்டி கட்டுமானப் பணிகளை துவக்கி வைத்தார். உடன் மாநகர மேயர் ஜி.உதயகுமார், ஆவடி மாநகர ஆணையர் ஷேக் அப்துல் ரகுமான், மண்டல குழு தலைவர்கள் ஜி.ராஜேந்திரன், அமுதா பேபிசேகர், ஜோதிலட்சுமி, வி.அம்மு, தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், மாநகர பொறுப்பாளர் சன்.பிரகாஷ், பகுதி கழக செயலாளர்கள் பேபி சேகர், பொன் விஜயன், ஜி.நாராயணபிரசாத் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# மத்தியப்பிரதேசத்தில் பயணிகள் பேருந்து தீப்பிடித்து விபத்து

போபால், டிச.29-

மத்தியப் பிரதேச மாநிலம் குணா பகுதியில் நேற்று முன்தினம் இரவு ஏற்பட்ட விபத்தில் பயணிகள் பேருந்து ஒன்று தீப்பிடித்து எரிந்ததில் 13 பேர் உயிரிழுந்தனர். மேலும் 17 பேர் காயமடைந்தனர்.

குணாஆரோன் சாலையில் தனியார் பேருந்து ஒன்று டிப்பர் லாரி மீது நேருக்கு நேர் மோதி விபத்து ஏற்பட்டது.

இந்த சம்பவத்தில் காயமடைந்தவர்கள் அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

குணா மாவட்ட கலெக்டர் தருண் ரதி உயிரிழந்தோர் எண்ணிக்கையை உறுதி செய்ததுடன், காயம் அடைந்தவர்கள் ஆபத்தில் இல்லை என்றும் தெரிவித்தார்.

இதுதொடர்பாக செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய அவர், “பதினேழு பேர் தற்போது மாவட்ட மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்,

மேலும் அவர்கள் அபாய கட்டத்தை தாண்டிவிட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது, அதே நேரத்தில் பேருந்து மற்றும் லாரி மோதிய விபத்தில் 13 பேர் உயிரிழந்தனர்” என்று அவர் தெரிவித்தார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா வ. துரை
### டிசம்பர் 29 (1994)



தனது இளமைக் காலம் முதலே கழகக் கொள்கைகளில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

முப்பது ஆண்டுகள் தொடர்ந்து திண்டிவனம் நகரக் கழகச் செயலாளராகவும் – பொதுக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்து அப்பகுதியில் கழகம் வளரப் பாடுபட்டவர்.

கழகத்திற்குச் சோதனை வந்தபோது உறுதி குலையாமல் கழகப் பணியாற்றியவர்.

நெருக்கடி காலத்தில் ‘மிசா’ கைதியாக ஓராண்டு சிறைவாசம் அனுபவித்ததோடு, கழகம் அறிவித்த சட்ட நகல் எரிப்புப் போராட்டம், இலங்கைத் தமிழர் ஆதரவு என அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



தலைமைச் செயலகத்தில் நேற்று (28.12.2023) நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு பெருநகர சென்னை மாநகராட்சியின் மாமன்ற உறுப்பினர்கள் ஆலப்பாக்கம் கு.சண்முகம் மற்றும் திருமதி க.சரஸ்வதி ஆகியோரின் மறைவையொட்டி, குடும்ப பாதுகாப்பு நிதியாக தலா ரூபாய் 3 இலட்சத்திற்கான காசோலையினை அவர்களது குடும்பத்தினரிடம் வழங்கினார். உடன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் மரு. ஜெ. ராதாகிருஷ்ணன், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதிச்சேவை நிறுவன தலைவர் (ம) நிருவாக இயக்குநர் முனைவர் எஸ்.விஜயகுமார், நகராட்சி நிர்வாக இயக்குநர், சு.சிவராசு, கூடுதல் ஆணையர் (வருவாய் (ம) நிதி) திருமதி ஆர்.லலிதா, துணை ஆணையர் (கல்வி), திருமதி ஷரண்யா அறி, மாமன்ற செயலாளர் மகேஷ் ஆகியோர் உடனிருந்தனர்.

### பெருநகர சென்னை மாநகராட்சி

# மறைந்த மாமன்ற உறுப்பினர்கள் இருவரின் குடும்பத்தினருக்கு தலா ரூ.3 இலட்சம் நிதி!

## அமைச்சர் கே.என்.நேரு வழங்கினார்!

சென்னை, டிச. 29-

பெருநகர சென்னை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள் ஆலப்பாக்கம் கு. சண்முகம் (தி.மு.க. - வார்டு 146 மாமன்ற உறுப்பினர் மற்றும் நிலைக் குழு (பொதுசுகாதாரம்) உறுப்பினர்),

திருமதி க. சரஸ்வதி (தி.மு.க - வார்டு - 59) ஆகியோர் மறைவினையொட்டி அவர்களது குடும்ப பாதுகாப்பு நிதியாக தலா ரூபாய் 3 இலட்சத்திற்கான காசோலையினை அவர்களது குடும்பத்தினிடம் நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என். நேரு தலைமைச் செயலகத்தில் நேற்று (28.12.2023) வழங்கினார்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள உறுப்பினர்கள் மறைவிற்கு குடும்ப நிவாரண நிதியாக ரூபாய் ஒரு இலட்சம் வழங்கி வந்த நிலையில் பெயருநகர சென்னை மாநகராட்சியின் இந்த ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை அறிவிப்பில், பொறுப்பில் உள்ள மாமன்ற உறுப்பினர்கள் மரணமடைந்தால், அவர்களது குடும்பத்திற்கு வழங்கப்படும் நிவாரண நிதி ரூபாய் ஒரு இலட்சத்திலிருந்து 3 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என மேயர் அவர்களால் அறிவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, மறைந்த ஆலப்பாக்கம் கு. சண்முகம், திருமதி க. சரஸ்வதி ஆகிய இரண்டு மாமன்ற உறுப்பினர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூபாய் 3 இலட்சம் குடும்ப பாதுகாப்பு நிதிக்கான காசோலைகள் நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில், மேயர் திருமதி ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ் குமார், பெருநகர சென்னை மாநகராட்சி கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் மரு. ஜெ. ராதாகிருஷ்ணன், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், மாமன்ற ஆளுங்கட்சித் தலைவர் ந.இராமலிங்கம், தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதிச்சேவை நிறுவன தலைவர் (ம) நிருவாக இயக்குநர் முனைவர் எஸ். விஜயகுமார், நகராட்சி நிருவாக இயக்குநர், சு.சிவராசு, கூடுதல் ஆணையர் (வருவாய் (ம) நிதி) திருமதி ஆர்.லலிதா, துணை ஆணையர் (கல்வி), திருமதி ஷரண்யா அறி, மாமன்ற செயலாளர் மகேஷ் ஆகியோர் உடனிருந்தனர்.



தூத்துக்குடி தொகுதி நட்டாத்தியில் மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களை கழகத் துணைப் பொதுச்செயலாளரும், நாடாளுமன்ற மக்களவை கழகக் குழு துணைத்தலைவருமான கனிமொழி கருணாநிதி சந்தித்து குறைகளை கேட்டறிந்து நிவாரண உதவிகளை வழங்கினார். அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் உள்பட அதிகாரிகள், கழக நிர்வாகிகள் உடன் உள்ளனர்.

### முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வருகை!

# தாம்பரம் மாநகரக் கழகத்தினர் திரளாக பங்கேற்பீர்!

## மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. அறிக்கை!

தாம்பரம், டிச. 29-

தாம்பரம் மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர். ராஜா எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தலைநகர் சென்னையில் போக்குவரத்து நெரிசலைத் தடுக்கும் வகையிலும் வளர்ந்து வரக்கூடிய மாநகரை மனதில் வைத்து தாம்பரம் அடுத்துள்ள கிளாம்பாக்கத்தில் பிரமாண்டமான வரலாற்று சிறப்புமிக்க கலைஞர் நூற்றாண்டு பேருந்து நிலையத்தை நமது திராவிட மாடல் தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் திருக்கரங்களால் 30.12.2023 காலை 10.30 மணியளவில் திறந்திட வருகை தர உள்ளார்கள் அந்நாளில் தாம்பரத்தை கடந்து செல்லும் நம்முடைய தலைவர் அவர்களுக்கு தாம்பரம் மாநகரில் எனது தலைமையில் மேற்கு தாம்பரம் ரயில் நிலையம் அருகில் சிறப்பான வரவேற்பு அளிக்க உள்ளோம். இந்நிகழ்வில் மாவட்ட மாநகர பகுதி நிர்வாகிகள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் மாவட்ட கழகப் பிரதிநிதிகள் மாவட்ட மாநகர அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் இளைஞர் அணி மாணவர் அணி மகளிர் அணி மற்றும் கழகத் தோழர்கள் பெருமளவில் கலந்து கொண்டுசிறப்பித்திடுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.





# திராவிட சினிமா

38

**■ வீ.மா.ச.சுபகுணராஜன்**

**திராவிடக் கொள்கைகளை, சமதர்ம நோக்கங்களை, சமூகநீதிச் சிந்தனைகளைத் திரைத்துறை மூலம் மக்களிடம் கொண்டு சேர்த்தனர் நமது முன்னோடிகள். அந்த வகையில், திரைப்படம் என்கிற நவீன ஊடகத்தின் மூலம் அரசியல் மாற்றத்துக்கான திருப்புமுனைகளை உருவாக்கின, திராவிடம் பேசிய திரைப்படங்கள். அந்த வரலாற்றை மீண்டும் வாசிக்கத் தருகிறது திராவிட சினிமா.**



படங்கள் உதவி : ஞானம்







# எம்.ஜி.ஆர். எனும் திராவிட எதிர் நாயகன்!

பொதுத் தளத்தில், எம்.ஜி.ஆர் **'பக்தர்களும்', 'திராவிட விரோதிகளும்'** வைக்கும் வாதமொன்றுள்ளது. அது, 'திராவிட இயக்கத்தின் ஆணிவேரே அவர்தான்' என்பது. அவர் இல்லையென்றால், திராவிடம் திக்கற்றுப் போயிருக்கும் என்ற பேதைமை அது.

திராவிடத்தால், திராவிடச் சிந்தனைகளால் எம்.ஜி.ராம்சந்தர், எனும் நடிகர், தனது அதிநாயக பிம்பத்தை வென்றெடுத்தாரா அல்லது அவரது நாயகத்துவப் பிம்பத்தால் திராவிட சிந்தனைகள் வெகுமக்களைச் சென்றடைந்தனவா என்பது இங்கு தேவையற்ற பேசுபொருள். இந்த வாதத்தை எம்.ஜி.ஆர் தரப்பில் பேசுபவர்கள், அவரது கொள்கைப் பிடிப்பு குறித்து மறந்தும் பேசுவதில்லை.

மாறாக, அவரது 'பிம்ப வழிபாட்டை' முன்னிறுத்தி வாதிடுவர். எம்.ஜி.ஆர் 'பிம்பம்' என்ற ஒன்று கவனமாக வளர்த்தெடுக்கப்பட்டது, அதனை அவரே மிக கவனமாகக் கையாண்டார் என்பதில் ஐயமில்லை. அந்த 'பிம்ப' உருவாக்கத்துக்கு அவர் தேர்வு செய்த உத்திகள் அபாரமானவை. இந்தப் பண்பு குறித்த விரிவான ஆய்வு நூலை 'பிம்பச் சிறை' (IMAGE TRAP) எனும் பெயரில் மறைந்த திராவிட அறிஞர் பேரா. எம்.எஸ்.எஸ். பாண்டியன் எழுதியுள்ளார். அதன் விரிவுக்குள் நுழைய இன்னொரு தருணத்தில் முயலலாம்.

## ஓடி வரும் நடிகன்

எம்.ஜி.ஆர் சிறந்த நடிகராக இல்லாமல் இருக்கலாம். ஆனால், திரைத்துறை சார்ந்த பிற துறைகளில் மாபெரும் விற்பன்னத்துவம் கொண்டவர் என்பதில் இருவேறு கருத்துகளுக்கு இடமில்லை. நடிகராகவும் கூட 'முகபாவம்' எனும் துறையில்தான் அவர் தொடக்கநிலை நடிகர். மற்றபடி ஒரு காட்சித் துண்டில் தன் இருப்பு எப்படியிருக்க வேண்டுமென்பதைக் கூட மெனக்கெட்டுச் செய்பவர். காட்சிக்குள் நுழைவதை உற்சாகமாகச் செய்வார், குறிப்பாக 'ஓடி வருவதே' உண்டு. இந்தத் 'துரு துரு' இளமையை இறுதிவரை காக்க முனைந்ததே 'பிம்பச் சிறை'.

பாடல்கள் உருவாக்கத்தில் அவரது திறமையின் பங்குண்டு என்பதற்கு ஆதாரம் ஏராளம். அதே போலதான் காதல் / பாடல் மற்றும் சண்டைக் காட்சிகளிலும் அவரது பங்கே பிரதானமானது. இந்தத் திறன்களை இத்தனை அழுத்தமாகச் சொல்வதற்குக் காரணமில்லாமல் இல்லை. இந்தத் திறன் சார்ந்து தனது 'பிம்பத்தை' கட்டமைத்தவர், அதைவிட கவனமாக திரைவெளியில் தீவிரமான கொள்கைப் பிடிப்போ அல்லது சார்போ வெளிப்படா வண்ணம் பார்த்துக் கொண்டார்.

> **எம்.ஜி.ஆர் மீதான பற்றில் உருவான தொகுப்பும் அதன் தொடர்ச்சியும் இன்றுவரை 'கலைஞர் விரோதம்' என்ற ஒற்றைப் புள்ளியில் இயங்குவதே சாட்சி.**

## கழகத்துக்கு உதவாத பிம்பம்

அடிப்படையிலேயே கடவுள் மறுப்பாளராகவோ, பகுத்தறிவாளராகவோ இல்லாதவர், தன்னைப் 'பொதுவான நல்லவன்' (GOOD SAMARITAN) என்ற வரையறைக்குள் நிலைநிறுத்திக் கொண்டார். அதாவது திராவிடச் சித்தாந்தங்களில் முழுமையாகத் தன்னை ஒப்படைத்துக் கொண்டதான பிம்பத்தை அவர் விரும்பவில்லை. ஆனால், இந்த வகையில் அவர் தனக்காக உருவாக்கிக் கொண்ட ரசிகர் பட்டாளம், முற்றிலுமாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சிக்கு உதவவில்லை என்பதில்லை.

மாறாக, அந்த ஆதரவுத் தொகுப்பு ஒருபோதும் திராவிடச் சிந்தனைகள் குறித்த குறைந்தபட்ச அக்கறைகூட அற்றவர்கள் என்பதும் உண்மை. அந்த வகையாக தனிநபர் ஆளுமை (இங்கே எம்.ஜி.ஆர்) மீதான பற்றில் உருவான தொகுப்பும் அதன் தொடர்ச்சியும் இன்றுவரை 'கலைஞர் விரோதம்' என்ற ஒற்றைப் புள்ளியில் இயங்குவதே சாட்சி.

இந்தக் கொள்கைப் பிரதிநிதி (கலைஞர்) எதிர் போலியான தனிமனித உன்னத பிம்பம் (எம்.ஜி.ஆர்) என்பதே திராவிட அரசியலின் அடிப்படையாகிப் போனது பெருஞ் சோகமே. ஆனால், எம்.ஜி.ஆரின் ஊசலாட்டத்தை முடிவுக்குக் கொண்டு வந்து, திராவிடச் சிந்தனைகளின் வெளிப்படையான எதிர்நிலையையே 'திராவிட அரசியலின்' பகுதியாக்கியது பார்ப்பன அம்மையார் ஜெயலலிதாவின் மாபெரும் பங்களிப்பு.

## புரட்சி முதல் திலகம் வரை

எம்.ஜி.ஆர் தனது நடிக வாழ்வின் முதல் இருபத்து ஐந்து ஆண்டுகளில் நடித்த படங்களை விட, 1961-க்குப் பின்னர் பதினாறு ஆண்டுகளில் நடித்த படங்களின் எண்ணிக்கை அதிகம். அதிலும் 1961 தொடங்கி 1971 வரையான பத்தாண்டுகளில் எம்.ஜி.ஆர் உருவாக்கிய திரைப்படங்கள் மிகுந்த கவனத்தைக் கோருபவை.

தி.மு.க, தேர்தல் அரசியல்களத்தில் மிக வேகமாக வளர்ச்சியடைந்த காலமது. எம்.ஜி.ஆர் தனது 'உள்ளே- வெளியே' சாமர்த்திய இருப்பை மிகச் சாதுர்யமாகக் கட்டமைத்த காலம். அதிலும் 1965 மற்றும் 1966 ஆம் ஆண்டுகளில் மட்டும் எம்.ஜி.ஆர் நடித்த படங்கள் மொத்தம் பன்னிரண்டு. அவற்றில் 1965 ஆம் ஆண்டில் **'எங்க வீட்டுப் பிள்ளை', 'ஆயிரத்தில் ஒருவன்', 'கலங்கரை விளக்கம்', 'கன்னித்தாய்', 'தாழம்பூ'** ஆகிய ஐந்து படங்கள், 1966 ஆம் ஆண்டில் அவரது வாழ்வில் மிக அதிகமான எண்ணிக்கையான ஒன்பது படங்களில் நடித்திருந்தார். அவை **'நான் ஆணையிட்டால்', 'முகராசி', 'நாடோடி', 'தாலி பாக்கியம்', 'தனிப்பிறவி', 'பறக்கும் பாவை', 'பெற்றால்தான் பிள்ளையா', 'சந்திரோதயம்', 'அன்பே வா'** ஆகியவை.

திரைப்படங்களின் தலைப்புகளே எம்.ஜி.ஆர் எனும் மனிதரை 'உன்னதன்' ஆக்கும் முயற்சியின் அப்பட்டமான வெளிப்பாடு. 'ஆயிரத்தில் ஒருவன்', 'எங்க வீட்டுப் பிள்ளை', 'நான் ஆணையிட்டால்', 'முகராசி', 'தனிப்பிறவி' ஆகியவை இந்த 'பிம்ப' உருவாக்கப் போக்கின் படிநிலைகள். இந்தக் காலவெளியில் எம்.ஜி.ஆர் 'மக்கள் திலகம்' ஆக மாறிவிட்டிருந்தார். ஆம், அவர் இப்போது 'புரட்சி நடிகர்' அல்ல, 'மக்கள் திலகம்'.

## பிணக்கை சாதகமாக்கிய நடிகன்

தன்முனைப்பான 'பிம்ப' உருவாக்கத் திரைப்படங்களில் சீர்திருத்த கருத்துகள் இல்லாமல் இல்லை. அந்தச் சீர்திருத்த கருத்துகளின் ஆதாரம் யாரென அடையாளம் காட்டப்படுகிறது என்பது கவனிக்கத்தக்கது. 'நாடோடி' திரைப்படக் கதைக்களத்தின் அடிப்படை முரணே, நாயகன் எம்.ஜி.ஆர், ஒரு பெரும் தனவந்தரால் வளர்க்கப்பட்ட 'தாழ்த்தப்பட்ட சமூகத்தில்' பிறந்தவர் என்பதுதான்.

ஊரில் சாதி ஒழிப்புப் பிரசங்கம் செய்யும் பெரிய மனிதர் தன் மகளது காதலை / திருமணத்தை மறுக்கிறார். அவள் தற்கொலை செய்துகொண்டு மாண்டு போகிறாள். அவர் மனந்திருந்தி தனது இளைய மகளை 'நாடோடிக்கு' திருமணம் செய்து வைக்கிறார். நாயகன் எம்.ஜி.ஆர் காந்தி படத்தின் முன் நின்று பேசுகிறார், 'மகாத்மா காந்தியும் பாரதியாரும் வாழ்ந்த இந்த நாட்டிலே இன்னும் ஜாதி வேறுபாடு பேசப்படுகிறதே'.

பெரியாருடனான தி.மு.க.வின் பிணக்கினைத் தனக்கு சாதகமாக்கிக் கொண்டவர், எம்.ஜி.ஆர். அவரது காந்திய தேசியவாத சார்பினை, அனைத்துப் படங்களிலும் காண முடியும். இது மட்டுமல்ல, 'ஆயிரத்தில் ஒருவன்' திரைப்படத்தின் இறுதிக் காட்சி ஓர் ஆர்வமூட்டும் சாட்சி.

மாற்றத்தை மக்களாட்சி மூலம் கொண்டு வரப் போராடுபவருக்கு 'அரியணை' ஏறும் வாய்ப்பு வழங்கப்பட, அதை மறுத்து முடியாட்சியைத் தொடரவிட்டு, மக்கள் பிணி நீக்கும் பணிக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொள்கிறார், ஆயிரத்தில் ஒருவன். மக்கள் பூமாரி பொழிந்து வரவேற்கிறார்கள்.

(எதிர் நாயகத்துவம் தொடரும்)

...படம் விரியும்

---

## 'அதைச் சொல்லவா வந்தீங்க?'

தென்மாவட்ட மழை, வெள்ள பாதிப்புகளுக்கான தமிழ்நாட்டு அரசின் நிவாரண கோரிக்கைகளில் ஒன்றிய அரசின் பாராமுகம் அம்பலப்பட்டதை அறிவோம். அதன் தொடர்ச்சியாக, நேரிலும் வந்து வெறுப்பை விதைத்துள்ளார், ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன். திருவைகுண்டம் பகுதியில் உள்ள கோவில் ஒன்றில் ஆய்வு செய்த அவரிடம், அங்குள்ள பாதிப்புகளை சரிசெய்ய பக்தர் ஒருவர், தான் 30 ஆயிரம் ரூபாய் அளிப்பதாக முன்வருகிறார். உடனே அவரிடம், பணத்தை உண்டியலில் போட வேண்டாம் என்றும், எங்கு கொடுக்க வேண்டுமோ அங்கே கொடுங்கள், என்றும் அமைச்சர் நிர்மலா சீதாராமன் அறிவுறுத்தினார்.

மழை வெள்ள ஆய்வின் போதும், அர்ச்சகர் தட்டுக்கு நிதி கேட்கும் அமைச்சர் என சமூக வலைதளங்களில் அந்தக் காணொலி வேகமாகப் பரவி வருகிறது. 'மழையால், பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களை அவர்கள் வாழும் பகுதிகளைப் பார்வையிட வந்தீர்களா அல்லது உங்கள் அவாள்களுக்குக் கோவில்களில் தட்டில் விழுகிறதா அல்லது அவர்கள் காட்டில் மழை பெய்கிறதா என ஆய்வு செய்ய வந்தீர்களா?' எனக் கேட்டுள்ளனர். 'உண்டியலில் காசு போடாதீங்க என்று சொல்லத்தான் டெல்லியில் இருந்து வந்தீர்களா' என மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

---

## :ப்ளாஷ்பேக்





குமார்

### அறிமுகம் தந்த மகிழ்வு!

1993-ஆம் ஆண்டு கழகத்தில் ஏற்பட்ட பிளவால், தமிழ்நாடு முழுவதும் தலைவர் கலைஞர் பயணித்து, தொண்டர்களை உற்சாகப்படுத்தினார். புதுக்கோட்டை மாவட்டம், 'ரோஸ்லேண்ட்' அரசினர் விடுதியில் தங்கி இருந்த தலைவர் கலைஞரைச் சந்திக்க, அன்றைய புதுக்கோட்டை மாவட்டச் செயலாளர் பெரியண்ணன் அவர்களுடன் சென்றேன். பெரியண்ணன் அய்யா அவர்கள், தலைவரிடம், என்னை வட்டச் செயலாளர் என்றும், தொண்டர் அணியில் பணியாற்றினேன் என்றும் அறிமுகம் செய்து வைத்தார். என் வாழ்நாளில், மிகவும் மகிழ்வூட்டிய தருணமாக இதைக் குறிப்பிடுவேன்.

**-டி. ஆர்.குமார், கழக அயலக அணி துணை அமைப்பாளர், புதுக்கோட்டை வடக்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண்: 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

---


## கருவூலம்

### தாய்-சேய் நல விடுதி!

**1962-ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டப்பேரவையின் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தார், கலைஞர். அப்போது, அவர் பிறந்த ஊரான திருக்குவளையில் அவரது சொந்த நிதியில் அமைக்கப்பட்ட தாய்-சேய் நல விடுதியைத் திறந்து வைக்க, முதலமைச்சராக இருந்த பக்தவத்சலம் வருகை தந்தார். எதிர்க்கட்சியைச் சேர்ந்தவரின் நிகழ்ச்சிக்கு எப்படிப் போகலாம் என கட்சிக்காரர்களின் எதிர்ப்பினையும் மீறி, "எதிர்க்கட்சித் தலைவர் அவர்களின் பிறந்த ஊர் என்பதால், அந்த ஊரைப் பார்ப்பதற்கு வருகிறேன்" எனக் கூறி பக்தவத்சலம் அவர்கள், வருகை தந்து மருத்துவமனையைத் திறந்து வைத்தார்.**

---

## திராவிடத்தால் வாழ்கிறோம் 343




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131